**Mierra Gems & Jewellery**
லண்டனில் பொற்கைவண்ணர்களின் நிர்வாகத்தில் இயங்கும் ஒரே நகை மாடம்
மீரா ஜுவல்லரி மார்ட்
34, London Road, Tooting, London SW17 9HP
Tel: 020 8648 7750 / 07958 948 685

A Freely Circulated Monthly

# புதினம்
PUTHINAM

மலர் 16 APRIL இதழ் 10

**HOMOEO CARE**
லண்டனில் இந்திய ஹோமியோபதி வைத்திய நிபுணர்
டாக்டர். தியாகராஜன்
020 8144 1553

**SNM PAWN BROKERS**
அனைத்து தங்க நகைகளும் இங்கே அடகு பிடிக்கப்படும்.

**MITHUS JEWELLERS**
லண்டனில் தமிழர்கள் விரும்பிச் செல்லும் நகைமாளிகை
நியாயமான விலை, உறுதியான வேலைப்பாடு
பழைய நகைகளுக்கு அதிக விலை அல்லது புதிய நகை
322 LONDON ROAD, CROYDON CR0 2TJ 020 8683 1756

# 'பெரிய' தீர்மானம்

அமெரிக்கத் தீர்மானத்தில் என்ன சொல்லப்பட்டிருக்கின்றது என்பதை பார்க்கவிடாமல், மக்களை திசை திருப்பிவிட்டுள்ளது இந்தியாவின் நடவடிக்கை.

எல்லோர் பார்வையும் இந்தியா ஏன் இத் தீர்மானத்தை ஆதரிக்கவில்லை என்பதில் நிலைத்து நிற்கிறது.

தீர்மானத்தின் 10வது பத்தியிலுள்ள 'சர்வதேச விசாரணை நடத்தப்படலாம்' என்ற விடயம்தான் இந்தியாவை மௌனசாமியாராக மாற்றியுள்ளது.

இதை ஆதரித்தால் சிங்களத்தினுடனான உறவில் பெரிய விரிசல் ஏற்பட்டு, நிரந்தரமாகவே சீனாவின் மடிக்குள் மகிந்த கொம்பனி சரணடைந்துவிடும் என்ற அச்சமே இதற்கான காரணம்.

அதற்காக ஈழத்தமிழர்களின் ஆதரவினையும் இழக்க இந்தியா தயார்.

சிறிலங்கா தமது நட்புநாடு என, அடிக்கடி இந்தியா கூறுவதன் தாற்பரியமும் அதுதான்.

என்னதான் இருந்தாலும், இந்தத் தீர்மானத்தில் தமிழர் என்ற சொல்லே இல்லை.

ஒரு இடத்தில், சிங்களமே உள்ளக சுயாதீன விசாரணை ஒன்றினை நடாத்த வேண்டுமென்கிறது. இன்னொரு இடத்தில் பேரவை விசாரணை நடத்த வேண்டுமென்கிறது. இந்த இடியப்பச் சிக்கல் தீர்மானத்தை எப்படி புரிந்துகொள்வது என்று தெரியவில்லை.

இது முதல்படி, சர்வதேச விசாரணைக்கு வழி சமைத்துவிட்டது என்று, புலம்பெயர் அமைப்புக்கள் சில கொண்டாடத் தொடங்கிவிட்டன.

தேசிய இனப்பிரச்சினைபற்றி எதுவுமேயில்லை.

இலங்கையில் நல்லாட்சி வந்தால் எல்லாம் சரியாகிவிடும் என்கிறது அமெரிக்கத்தீர்மானம்.

இராணுவத்தை அப்புறப்படுத்துவதுபற்றி பேசவில்லை.

அரைகுறை 13வது திருத்தச் சட்டமே அரசியல் தீர்வு என்கிறது.

இலங்கையின் இறைமை, ஒருமைப்பாடு காக்கப்பட வேண்டும் என்கிறது.

இத்தீர்மானம் தென் தமிழீழத்தை கணக்கிலும் எடுக்கவில்லை.

ஆனால் இது முன்னேற்றகரமானதாம்.

நல்ல அரசியலப்பா...!

**தமிழினி 20வது ஆண்டு விழா**
விநோத உடைப் போட்டி
12.04.2014 சனிக்கிழமை
லண்டன் collierswood நகரில் நடைபெறவுள்ள தமிழினி 20வது ஆண்டு விழாவில் விநோத உடைப் போட்டியில் பதினாறு வயதுக்குட்பட்ட ஆண், பெண் இரு பாலரும் பங்கு பெறலாம்.
விண்ணப்பிக்க வேண்டிய முகவரி
Thamilini News Paper
90, High Street, Colliers Wood,
Tel: 0208682 9480
E-MAIL: மூலமும் விண்ணப்பிக்கலாம்
tkpublush@yahoo.co.uk





**அம்பாள் தொலைக்காட்சி**
உங்கள் அம்பாள் தொலைக்காட்சியில் மார்ச் 1ம், 2ம், 3ம் திகதிகளில் புதிய தொலைக்காட்சித் தொடர்கள் ஆரம்பமாகவுள்ளன
Ambaal TV
Deepam IPTV Box, Aarti TV Box,
Cloud Media IPTV Box, Thisai Media IPTV Box
www.ambaal.org
தொடர்புகளுக்கு: 0208 884 3333
ambaaltv@ambaal.org

FREE
Nestomalt
**K.R.S. AND BEST FOOD**
LEWISHAM
ஒரு 'நெஸ்ரமோல்ட்' இலவசமாக வழங்கப்படுகிறது.
KRS : 020 8297 1764 BEST FOOD : 020 8691 9811



தரமான தங்கத்திற்கு லண்டனில் சிறந்த இடம்
**LAKSHMIS JEWELLERS**
276, High Street North, London E12 6SA,
Tel: 020 8470 5600 FAX: 020 8470 3448

# புதினம்

PUTHINAM

லண்டன் தமிழர்களின் அபிமான இலவச இதழ்

ஆசிரியர்:

ஈ.கே.ராஜகோபால்

E.K.Rajagopal

வடிவமைப்பு
சத்யன் லே-அவுட்
9551395516

அலுவலக முகவரி:

PUTHINAM
38 MOFFAT ROAD
LONDON SW 17 7EZ
TEL: 020 8767 8004
MOB: 077 353 46890
EMAIL:
editor@londonputhinam.co.uk

'ஈழகேசரி' வெளியீட்டு நிறுவனத்துக்காக 16 ஆண்டுகளாக வெளிவரும் இலவச இதழ். தபாலில் பெற விரும்புவோர் முத்திரைச் செலவான 25 பவுண்களை மட்டும் Puthinam என்ற பெயருக்கு காசோலையாக அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.


## லண்டனில் தமிழக ஜோதிடர்

**பிரபல தமிழக ஜோதிடர், சாஸ்திரியார்**

**திருச்சி தில்லை நடராஜர்**

லண்டனில் ஸ்ரோன்லி, நியூமோல்டன் பகுதியில் தங்கியுள்ளார். உங்கள் பிறந்த திகதியைக் கொண்டு, ஐந்து நிமிடங்களில் குறிப்பு எழுதி, கடந்த காலம், நிகழ்காலம், வருங்காலம் - படிப்பு, திருமணம், தொழில் அதிர்ஷ்டம் போன்றவற்றைத் தெள்ளத் தெளிவாக எடுத்துச்சொல்வார்.

**07960734968 - 0741559790**

அச்சகத் தொழில் செய்வோர், பத்திரிகை நடாத்துபவர்கள், புத்தகங்கள் வெளியிடுவோர், மாதாந்திர சஞ்சிகை நடாத்துபவர்களுக்காக....

புத்தக வடிவமைப்பு, டி.டி.பி., திருமண அழைப்பிதழ்கள், சிறப்பு மலர்கள், உங்கள் வீட்டு விஷேச நிகழ்வுகளுக்கான அழைப்பிதழ்கள் என சிறந்த வேலைகளை இந்தியாவிலிருந்து வழங்குகிறோம்

Call: 9551395516
www.satyanlayout.com

## மணமகன் தேவை



புங்குடுதீவு இந்து உயர் வேளாள பிரபல ஓய்வுபெற்ற ஆசிரியரின்/ Dept.of Ed.Director, மகள் பிறந்தது 24/09/1983, ரேவதி 3ம் பாதம், மீனராசி, யாழ் இந்து மகளிர் கல்லூரியில் சாதாரண, உயர்தர பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகள் பெற்று, AAT & ICT களில் தேர்ச்சி பெற்று, லண்டன் பல்கலைக்கழகத்தில் B.COM பட்டதாரியாகி, 27/09/2009 தொடக்கம் லண்டனில் வசிக்கும் தற்போது Work Permit ல் தபால் கந்தோரில் பணிபுரிந்து கொண்டு இன்சூரன்ஸூம் செய்யும், Business Work Permit எடுப்பதற்கும் எல்லா ஆயத்தங்களும் செய்யும் மிக ஊக்கமுடைய 5 அடி 3 அங்குலம் உயரம், பொது நிறம், சாதாரண தேகக்கட்டுடன் உள்ள பெண்ணிற்கு இதே அல்லது கூடிய கல்வி தராதரங்கள் உடைய ஐக்கிய ராச்சிய பிரஜா உரிமையுள்ள தகுந்த வரன் தேடுகின்றனர்.

தொடர்பு: chandri24@hotmail.com Mobile : 074 503 72362

## மணமகன் தேவை



Tamil Parents seek a suitable partner for their only daughter (London Based Doctor) in her late 20s with means.

**Please Contact :**

**0793 5308 569**

## மணமகள் தேவை

**46 வயது மணமகனுக்கு தகுந்த மணமகளைத் தேடுகின்றனர்.**

British Citizen,Well Educated With Well Paid Job.

தொடர்புகளுக்கு : ராஜ்

**07913 200 728**

**07473 107 288**



# SHREE KANAKA DURGA Astrology Centre



**Pandit : SAHA DEVA RAJ**

**Indian Astrologer & Herbal Ayurvedic Specialist**

பிரபல மந்திரிமார்களுக்கும். நடிகர். நடிகைகளுக்கும் ஜோதிடம் பார்த்து புகழ் பெற்றவர். கைரேகை பார்த்து. முகரேகை பார்த்து. ஜாதகம் பார்த்து. ராசி நட்சத்திரமும் பார்த்து. பிறந்த ஆண்டு திகதி பார்த்து நடந்தது. நடந்துகிட்டு இருக்கிறது. நடக்கப் போறது சொல்லுவார்.

- குடும்ப காதல் விடயங்கள், மனை விவகாரங்கள்,
- கணவன், மனைவி, காதலர் ஒற்றுமை பிணக்குகள்.
- குழந்தை சந்தான பாக்கியம், பிள்ளைகள் படிப்பு.
- திருமணயோகம், காதல் விவகாரங்கள்.
- தொழில், மனை, அபிவிருத்தி, முன்னேற்றம், லட்சுமிகடாட்சம்.
- வாகன மனைப்பொருத்தங்கள், வீசாப் பிரச்சனைகள், கோர்ட்டு வழக்கு.
- ஆரோக்கியம் பாக்கியம், வியாழ முன்னேற்றம், சேவன கோளாறும்,
- பேய் பிசாசு தொந்தரவா, எதிர்ப்பால் தொந்தரவா, கண்திருஸ்டி
- நாக தோசம், உங்களுக்கு எந்தப் பிரச்சினையாக இருந்தாலும்

**Office Hours : 7 Days a week**
**10.00 AM - 8 PM**

17, Lee High Road, (Opposite Nando's)
London SE13 5LD Lewisham (லண்டன் சிவன் கோவில் அருகில்)

**07448859930, 07472566541**

**Famous through 7 Generations Any problems clear within 9 days**

அனைத்து விதமான நோய்களுக்கும் அற்புதமான மூலிகை சிகிச்சை வழங்குகிறார்கள். நாடிபிடித்து நோய்கள் கண்டறிவதில் வல்லுநர்.



அமிர்தசன்

# இனியும் இந்தியாவின் 'ஆசீர்வாத'த்தை தமிழ் தேசிய கூட்டமைப்பு எதிர்பார்க்குமா?



'ஒன்றுமில்லாத' தீர்மானத்துக்கே இந்தியா ஆதரவாக வாக்களிக்கவில்லை என்பது தமிழ் தேசியக் கூட்டமைக்கு பெரும் வெட்கத்தை ஏற்படுத்தியிருக்கலாம். ஆனால், இந்தியாவின் 'பூச்சாண்டி' ஈழத்தமிழ் மக்களுக்குத் தெரிந்ததுதான்.

இந்தியா ஈழத்தமிழர்களுக்கு நம்பிக்கைக்கு உரிய நாடு அல்ல என்பதை இந்திரா காந்தி பிரதமராக இருந்த காலத்திலேயே சில விடுதலை இயக்கங்களினால் சொல்லப்பட்டே வந்தது. ஆனால், 2009ஆம் ஆண்டு மே மாதத்துக்குப் பின்னரான சூழலிலும், தமிழ் தேசியக் கூட்டமைப்பு, இந்தியாவை மலையாக நம்பியிருந்தது.



அமெரிக்கா இலங்கைக்கு எதிராகக் கொண்டு வந்த ஜெனிவா தீர்மானம் 'வெற்றி' பெற்றுவிட்டது என்றும், இந்தியா துரோகம் இழைத்து விட்டது என்றும், ஈழத் தமிழர்களும் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களும் 'வாழ்கிழியக்' கத்துகின்ற அளவுக்கு எதுவுமே இல்லை. சர்வதேச அரங்கில் தமது நிலைப்பாட்டை இந்தியா உறுதி செய்துள்ளது.

நோர்வேயின் சமாதான முயற்சியை குழப்ப மேற்கொண்ட இந்தியாவின் திரைமறைவு நடவடிக்கைகள் ஏற்கனவே தெரிந்த ஒன்றுதான். ஒரு நாட்டின் பிரதமரை இன்றும் ஒரு நாட்டில் உள்ள விடுதலை இயக்கம் ஒன்று ஊடுருவி கொலை செய்வது என்பது அந்நாட்டின் பாதுகாப்புத் துறைக்கு விடுக்கப்பட்ட படுபயங்கரமான அச்சுறுத்தல்தான்! ஆனால், சொந்த மண்ணிலே பெரும்பான்மை இனம் ஒன்றினால் காட்டுமிராண்டித்தனமாகப் பழிவாங்குகின்ற பண்பு, ஜனநாயக நாடு என்று தன்னைச் சொல்லிக்கொள்ளும் இந்தியாவுக்கு உரியதல்ல!

2009 ஆம் ஆண்டு, மே 18 இறுதிப் போர் வரை இந்தியாவின் மோசமான செயல்பாடுகளை இலகுவாக மறந்துவிட முடியாது. முள்ளி வாய்க்காலுக்குப் பின்னர், மீண்டும் ஜெனிவா தீர்மானத்தின்போது, ஈழத் தமிழர்கள், இந்தியா மீது வைத்திருந்த அற்ப சொற்ப நம்பிக்கையையும் இழக்க வைத்துவிட்டது!

மஹிந்த ராஜபக்சவின் 'மஹிந்த சிந்தனை' கோட்பாட்டைத்தான் ஜெனிவாவில் இந்தியா மீண்டும் நிறுவியுள்ளது. "இனப் பிரச்சனைத் தீர்வில், இந்தியா என்ன நிலைப்பாட்டைக் கொண்டுள்ளதோ, அதுவே 'மஹிந்த சிந்தனை'" என்று தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறியிருந்தார்.



அந்த 'மஹிந்த சிந்தனை'க்கு ஜெனிவாவில் ஒரு அங்கீகாரத்தை இந்தியா பெற்றுக்கொடுத்துள்ளது.

1983 ஆம் ஆண்டு ஆயுதப் போர் வெடித்தபோது, அப்போது அமெரிக்க அதிபர் ரீகன் இலங்கைக்கு உதவி அளித்தார். அதேவேளை, ராணுவ ரீதியில், மறைமுகமாகத் தமிழ் விடுதலை இயக்கங்களுடனும் தொடர்புகளை அமெரிக்கப் பாதுகாப்புத் தரப்பு முயற்சிகளை மேற்கொண்டது. ஆனால், அப்போது பிரதமராக இருந்த இந்திரா காந்தி அதனை அறிந்து, தமிழ் விடுதலை இயக்கங்களை அழைத்து, ஆயுதப் பயிற்சி கொடுக்க உதவினார். ஏனெனில் அன்று அமெரிக்கா, இந்தியாவுக்குப் பெரும் சவாலாக இருந்தது.



இந்தியமாநிலங்களைப் பிளவுபடுத்த இலங்கைத் தமிழர் பிரச்சனையைப் பயன்படுத்தி விடும் என்ற அந்த அச்ச உணர்வுதான் இந்திரா அப்படியான நடவடிக்கைகளை மேற்கொள்ளக் காரணமாக இருந்தன.



2009ம் ஆண்டு விடுதலைப் புலிகள் அழிக்கப்படும்வரை, விரும்பியோ, விரும் பாமலோ இராஜதந்திர உறவை அமெரிக்காவுடன் இந்தியா பேணி வந்தது! இலங்கைத் தமிழர் பிரச்சனைதான் இதற்கெல்லாம் காரணம். ஆனால் இந்த ஆண்டின்

இந்தியாவின் ஆட்சியை நிர்ணயிக்கப் போகின்ற பாராளுமன்றத் தேர்தல் நெருங்குகின்ற நேரம் என்பதையும், தமிழ் நாட்டு மக்களின் வாக்குகளைக் கூடக் கருத்தில் எடுக்காமல், ஜெனீவாவில் இலங்கைக்கு இந்தியா ஏன் சாதகமாக வாக்களித்தது?

இலங்கையின் வடக்கு, கிழக்கில் இனி ஒரு ஆயுதப் போராட்டம் ஆரம்பிக்காது என்பதை இலங்கைக்குக் காட்டவும், இந்தியப் பாதுகாப்பை உறுதிப்படுத்தவுமே இப்படியான காரியத்தைச் செய்திருக்கிறது இந்தியா.

**"முப்பத்தொரு ஆண்டுகள் அமெரிக்காவை 'கட்டிப்பிடித்துக்' கொண்டிருந்த இந்தியா, 2009 மே மாதத்தின் பின்னர், இப்போது அமெரிக்காவைப் பகைக்க ஆரம்பித்த நோக்கம் என்ன? இப்படியான 'ஒன்றுமில்லாத' தீர்மானத்தை ஆதரிக்காத இந்தியாவின் 'ஆசீர்வாதத்தை' தான் தமிழ்த் தலைமைகள் தொடர்ந்தும் எதிர்பார்ப்பார்களா? அல்லது சுயமாக, தமிழ் அரசியல் தலைமைகள் ஈழத்தமிழர்களுக்கான ஒரு அரசியல் தீர்வை முன்வைக்குமா?"**


ஆரம்பம் முதல், 1983ல் இருந்து வந்த அதே பகைமையான உறவு நிலையைத்தான் அமெரிக்காவுடன் இந்தியா இப்போது பேணிக் கொண்டு வருகிறது. எதிர்வரும் ஏப்ரல் மாதம் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா யப்பானுக்குப் பயணம் செய்யவுள்ளார். அதன் பின்னர் அமெரிக்காவுடனான இராஜதந்திர உறவு பலமடையக்கூடிய 'நிலை' உண்டு. யப்பான் வல்லரசு இந்தியாவுக்கு ஒத்துவராத இந்த நிலையில், அமெரிக்காவுடன் இந்தியா பகைத்துக்கொள்ள வேண்டிய ஒரு தேவை உண்டு. ஜெனிவா வாக்கெடுப்பில் இந்தியா வாக்களிப்பில் கலந்து கொள்ளாமல் விட்டதற்கு இதுவும் ஒரு காரணம். அதாவது, ஒரு வகையான அமெரிக்க எதிர்ப்புவாதம் என்று சொல்லலாம்.

புலிகள் அழிக்கப்படும் வரை இந்தியாவோடு நின்ற அமெரிக்கா, அதன் பின்னரான கடந்த ஐந்து வருடகாலத்தில், உறவைப் பேணி வந்த இந்தியா, 2014ம் ஆண்டின் ஆரம்பம் முதல் அமெரிக்காவைப் பகைத்துக்கொள்ள ஆரம்பித்தது.

வேண்டுமானால், சீனாவையும் இந்தியா அணைத்துக்கொள்ளும். இந்த இடத்தில், அமெரிக்கா உள்ளிட்ட மேற்கு உலக நாடுகளை மேலும் இந்தியாவுக்கு எதிராகத் திருப்பிவிட்டு, இலங்கையின் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் ஒரு சாதகமான அரசியல் தீர்வை முன் வைக்கும் ஏற்பாட்டுக்கு தமிழ் அரசியல் தலைமைகள் முன் வருமா என்பதுதான் கேள்வி. அல்லது இதற்குப்பிறகும் இந்தியாவின் ஆசீர்வாதத்தைத்தான் தொடர்ந்தும் எதிர்பார்ப்பார்களா?

அமெரிக்கா ஒரு ஆபத்தான சக்திதான்! ஆனால், தமிழர் நலனைப் பெறுவதற்கும் இந்தியாவுக்குப் பாடம் புகட்டுவதற்கேனும் குறைந்தபட்சம் எட்டிப்பிடித்தே ஆக வேண்டும். இதற்குத் தமிழர் தரப்பில் அரசியல் தெரிந்து, ஏற்று, தலைமை தாங்கக்கூடிய இராஜ தந்திரிகள் இருக்க வேண்டுமே!




AYNGARAN INTERNATIONAL
PROUDLY PRESENTS
ESCAPE ARTISTS MOTION PICTURES
P.MADAN PRESENTS
A.R.MURUGADOSS PRODUCTIONS
FOR FURTHER DETAILS
020 8540 1500, 020 8903 3300
020 8543 4342, 020 8543 4477
maan karate
DIRECTION : THIRUKUMARAN MUSIC : ANIRUDH
STARRING: SIVAKARTHIKEYAN, HANSIKA MOTWANI, SATHISH, SOORI, VAMSI KRISHNA
FROM FRI 4TH APRIL - CINEWORLD CINEMAS
ILFORD, FELTHAM, WANDSWORTH, WEMBLEY, STAPLES CORNER
BIRMINGHAM BS, MILTON KEYNES, SHEFFIELD, STOCKPORT
LIVERPOOL, CRAWLEY, CARDIFF
ADVANCE BOOKING : http://www.cineworld.co.uk OR CALL - 0871 220 1000
CHILDREN WILL BE ALLOWED
FROM FRI 4TH APRIL - HARROW SAFARI
DAILY SHOWS FROM FRI 4TH APRIL TO 17TH APRIL
(2.00PM SAT / SUN) - 5.00PM- 8.00PM - (11.00PM FRI / SAT)
ADVANCE BOOKING: http://www.safaricinema.com OR CALL - 020 8426 0303 / 0606
JOIN US ON
YouTube www.youtube.com/ayngaran
www.facebook.com/ayngaran
visit us: www.ayngaran.com

# விமலின் பக்கம்



பாலு மகேந்திரா, பாரதிராஜா படங்களில் வருவது போன்ற ஒரு அழகிய கிராமம். புழுதி பறக்கும் ஒழுங்கைகள். கிடுகு வேலிகள். அவற்றின் மேலாக எட்டிப் பார்க்கும் பூவரச மரங்கள். கிராமத்தில் நடுநாயகமாக முருகனுக்கு ஓர் கோயில். அதன் அருகில் ஒரு நல்ல பள்ளிக்கூடம். இரண்டு ஒழுங்கைகள் தள்ளிப்போனால், சட்டம்பியார் வீடு! ஒழுங்கையின் இறுதியில் உள்ள கல் வீடு- பிறக்கிறாசியார் வீடு. அவருக்குக் கனக்க பெடி பெட்டையள். கடைசிப் பெடியன் டாக்குத்தருக்குப் படிச்சு முடிச்சிட்டான். இப்படி ஊரில் உள்ள எல்லாரையும் எல்லாருக்குமே தெரியும். எல்லாரைப் பற்றியும் எல்லாமே தெரியும்.

பிறக்கிறாசியார் வீட்டுக்குப் பக்கத்து கொட்டிலில் அப்பம் சுட்டு விக்கிற விதவைப் பெண் இருக்கிறாள். இரவிலை ஊர் உறங்கிய பிறகு பிறக்கிறாசியார் அந்தப் பெண்ணின் கொட்டிலுக்கு 'ரகசியமாக' போய் வருவதும் ஊருக்குத் தெரியும். அந்தச் சாமத்திலை அவர் போறது அப்பம் வாங்கிச் சாப்பிட இல்லை என்பதும் ஊர்சனத்துக்குத் தெரியும். அதுதான் ஊர் வாழ்க்கை. ஊர் என்பது ஒரு பெரிய குடும்பமாக இருந்து, கலியாண வீடுகள் நடத்தி, கோயில் திருவிழாக்கள் கொண்டாடி, மகிழ்ந்தது ஒரு காலம். அது ஒரு கனாக் காலம்!

ஊரை விட்டு சனம் வெளியேறி நகரங்களில் குடியேறத் தொடங்கியதும் - ஊர் ஒற்றுமை, தகவல் பரிமாற்றம்



ஆகியன மறைந்தன. லட்சுமணனுக்கும் ஊர்மிளாவுக்கும் மனக் கசப்பாம். டிவோசுக்குப் போகினமாம் போன்ற விஷயங்கள் நகர்ப்புற வாழ்வின் உயர்ந்த மாடிக் கட்டிடங்களில் புதைந்து போகின்றன. கிராமமாக இருந்தால், ஊர்ப் பெரியவர்கள் கூடி சமரசம் செய்து சேர்த்து வைத்திருப்பார்கள். ஆனால், நகர்ப்புற வாழ்வில் அயலவர்கள் யார் என்றே எமக்குத் தெரியாது. அவரைப் பற்றி எமக்கும், எம்மைப் பற்றி அவருக்கும் எதுவுமே தெரியாது!

இது 2014ம் ஆண்டு! சக்கரம் சுழன்று விட்டது! நகர்ப்புற அந்தரங்க வாழ்வு கிராமப்புற பகிரங்க வாழ்க்கையாக மீண்டும் மாறிவிட்டது! மாறியது எப்படி? மாற்றியவர்கள் யார்?

எங்கள் வாழ்வில் தனிப்பட்ட ரகசியங்கள் என்று இனி எதுவுமே இல்லை என்று 'வரம்' அருளியவர் கூகிள் ஆண்டவர்! அவருக்குத் தெரியாதது ஒன்றுமே இல்லை! "யாழ்ப்பாணத்து ஆட்டிறைச்சி பிரட்டல் கறி எப்படிச் செய்வது ஆண்டவரே?" - அவரைக் கேளுங்கள்! உடனே பதில் கிடைக்கும்.

காலையில் வேலைக்குப் போவதாக மனைவி பாமாவிடம் சொல்லிவிட்டு, வீட்டிலிருந்து புறப்பட்ட கிருஷ்ணாவின் பென்ஸ் கார் வீட்டிலிருந்து பல மைல் தொலைவில், ரூட்டிங்கில் ருக்மணி வீட்டில் பார்க் பண்ணி இருப்பதை ஞானக் கண்ணால் பார்த்து, மனைவி பாமாவுக்கு மட்டுமல்ல, ரோக்கியோ வரை மனிதர்கள் அனைவருக்குமே 'கூகிள்மாப்' மூலம் புகைப்பட ஆதாரத்துடன் காட்டி விடுவார் கூகிள் ஆண்டவர்! கூகிள் ஆண்டவர் மூலவர் என்றால், அவரது உற்சவ மூர்த்தியான 'பேஸ்புக்' மூர்த்தியோ மத்தியில் இறங்கி நின்று சில்மிஷங்களை நடத்தி வைத்துத் தாமே ஒரு சில்மிஷமாகவும் திகழ்கிறார்!



பஸ்ஸில் நீங்கள் போகும்போது பக்கத்தில் உள்ள பயணி (செல்லிடப் பேசி) மொபைலில் உரத்துப் பேசியது பழைய காலம்! இப்போது பேசுவதற்கே நேரமில்லை! குரல் இல்லை! கையில் உள்ள ஸ்மார்ட் போனை விரல்கள் நோண்டிக் கொண்டிருக்கும். அவளது முகத்தில் புன்னகை படர்ந்திருக்கும். அவள் 'பேஸ் புக்' மூர்த்தியை ஜெபிக்கிறாள் என்பது அர்த்தம்!



நீதான் எனக்குத் தேசியத் தலைவன்

உங்கள் பெயர், வயது, கல்வித் தராதரம், வேலை, ஊதியம், திருமணம், காதல், மணமுறிவு, பாவனைப் பொருட்களில் உங்கள் விருப்பு வெறுப்புகள், இப்படி உங்களைப் பற்றி, உங்கள் வாழ்க்கைத் துணைக்குக் கூடத் தெரியாத அந்தரங்கமான விஷயங்களை சேகரித்து வைத்து, தேவைப்பட்டுக் கேட்போருக்கு அள்ளி வழங்குவது 'பேஸ்புக்'! ஒரு குறிப்பிட்ட விஷயத்தில் உங்கள் சொந்த மனக்கருத்து என்ன? என்று ஊடகங்கள் அறிய விரும்பினால், அவை தேடி நாடுவது 'பேஸ் புக்'! உங்கள் பக்கம்!

நீங்கள் ஒரு புதிய வேலைக்கு விண்ணப்பம் செய்கிறீர்கள் என்று வைத்துக் கொள்வோம். நீங்கள் விண்ணப்பம் அனுப்பிய நிறுவனம், உங்களைப் பற்றிய தகவல்களை 'பேஸ்புக்'கில் பார்த்து, கூகிள் ஆண்டவரிடமும் தேடிப்பெற்று, உங்களை நேர் முகப் பரீட்சைக்கு அழைப்பதா, விடுவதா என்று தீர்மானிக்கிறது!

சரி; வேலையும் கிடைத்தாயிற்று என்று வைத்துக்கொள்வோம்! வேலை நேரத்தில் நீங்கள் உங்கள் நிறுவன கணனியில் வேறு தளங்களைப் பார்க்கிறீர்களா? சினிமா கிசுகிசு பக்கத்தைப் பார்க்கிறீர்களா? யார் யாருக்கெல்லாம் நீங்கள் மின் அஞ்சல் அனுப்புகிறீர்கள்? எந்த இணையத் தளங்களுக்கு நீங்கள் அடிக்கடி போய் வருகிறீர்கள்? இப்படி உங்களைப் பற்றி மாபெரும் ஆய்வு அறிக்கை ஒன்றையே உங்கள் முதலாளிக்காகத் தயார் செய்கின்றன இந்த கூகிள் - பேஸ்புக் தளங்கள்!



பேஸ்புக்கைப் படைத்த பிரம்மா 30வயதான சுக்கர் பேக் அவரது சொத்தின் பெறுமதி 20 பில்லியன் டொலர்!

மேற்குலக வாழ்க்கையில், இப்படிக் கையடக்க மொபைல் போன் மூலமே, கூகிளில் மிதந்து, பேஸ் புக்கில் வான் சிகரத்தை, புலம் பெயர்ந்த தமிழ் இனத்தவர்கள் எட்டித் தொடுகிறார்கள் என்றால், இலங்கையின் பேரினவாத ராஜ 'பக்ஸ' குடும்பத்துக்கு மகிழ்ச்சியாகவா இருக்கும்?

புலம் பெயர் தமிழ் இனத்தவர்களின் பலவீனங்கள் என்ன என்று அறிந்து, அவற்றின் மூலம் அவர்களை மடக்கி அழிக்க முற்பட்டுள்ளார்கள் பேரினவாதிகள்!

நிகரற்ற தேசியத் தலைவரின் வலது கையாகச் செயல்பட்ட, மட்டுநகர் கருணா அம்மானின் பலவீனம் 'ஸ்திரீகள்' என்று ஒற்றர்கள் மூலம் அறிந்து, அந்த வழியில் அவரை மடக்கி ஒரு எட்டப்பனாக தம்முடன் வைத்திருப்பவர்கள் சிங்கள ஆட்சியாளர்கள்! கருணா அம்மான் - கே.பி- தயா மாஸ்டர் இவர்களோடு சிங்கள சதுரங்கம் முடிந்துவிடவில்லை.

தமது சிங்களத் தரப்பில் கிழட்டுச் சிங்கங்கள் மறையும்போது, ஆட்சியை நடத்த ஒரு இளம் தலைவனாக 'நாமலை' உருவாக்கிய எதிரிகள்- எங்கே தமிழர் தரப்பில் 'இளம் புலிகள்' உருவாகி விடுவார்களோ என்று சதா சிம்ம சொப்பனம், புலி சொப்பனம் கண்டு வருகிறார்கள்.

தேசியத் தலைவரின் வீரம்மிகு இளவல்கள் சார்ள்ஸ் அன்ரனியையும், பாலச்சந்திரனையும் குறிவைத்துக் கொன்றமைக்கு இந்த அச்சமே காரணம்.

சிங்கள அரசு, புலம் பெயர் தமிழர்களுக்கு எதிராக கையில் எடுத்துள்ள ஆயுதம் 'பேஸ் புக் மற்றும் கூகிள்! புலம் பெயர்ந்து, மேலை நாடுகளில் வாழும் எமது இளைஞர்கள், யுவதிகளின் கனவுகளில் ஒன்று மேடையில் பாட வேண்டும், புகழ் பெற வேண்டும் என்பது எங்கள் எல்லோருக்கும் தெரியும். அந்தப் பாதையில் சென்று மேலை நாடுகளில் வாழும் தமிழ் இளைஞர் யுவதிகளின் பேஸ்புக்கை கவனமாக ஆராய்ந்து, அவர்களின் பெயர், வயது, பிறந்த இடம், இலட்சியம், விருப்பு வெறுப்பு ஆகியவற்றை பேஸ் புக் அறிமுகத்திலும், அவர்கள் போடும் 'லைக்'களிலுமிருந்து கணித்து, அவர்களுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு பேசுகிறார்கள் சிங்கள அரசின் தமிழ் ஒற்றர்கள்.

தமிழ் சிங்கள பழைய தலைமுறையினர் தவறு செய்து விட்டார்கள்; இளைய தலைமுறையினராகிய நாம் ஒன்றுபட்டு, ஒரே இலங்கையில் வாழுவோம்; பிரிவினையை கைவிட்டு, கலையால் ஒன்றிணைவோம் என்று 'நற் சிந்தனைகளைப் போதித்து', உங்கள் இசைத் திறமையை வெளிக்காட்ட நாங்கள் மேடை அமைத்துத் தருகிறோம்; இசைக்குழு அமைக்கப் பணம் தருகிறோம்; மியூசிக் வீடியோ எடுத்து, இலங்கைத் தமிழ் யுவதி 'மியா' எனப்படும் மாயா அருட்பிரகாசம்போல ஹொலிவூட்டில் பிரபலமாக்குவோம்; இலவச விமான டிக்கட் தந்து, இலங்கைக்கு அழைத்துச் சென்று, கொழும்பிலும் உங்கள் திறமையை மேடை ஏற்ற உதவி செய்வோம் என்று தமிழ் இளசுகளை 'மூளைச் சலவை' செய்ய ஆரம்பித்துள்ளார்கள் சிங்கள அரசினர். ஒரு சில இளைஞர் யுவதிகளை ஏற்கனவே வளைத்துப் போட்டும் விட்டார்கள் என்பது துயரமான செய்தி!



ஹொலிவூட்டின் 'மியா' தமிழ் ஈழத்தின் செல்வி மாயா அருட்பிரகாசம்

உள்ளத்து உறவுகளுக்காக ஏங்கிக் கொண்டிருக்கும் துடிப்பான இளம் பெண்களையும், இளைஞர்களையும் பேஸ்புக் மூலம் இலக்கு வைத்து, தொடர்பு கொண்டு தொலைதூரத்திற்கு வரவழைக்கும் தீய நோக்கினர், அவர்களை பாலியல் வல்லுறவுக்கு ஆளாக்கும் சம்பவங்கள் பற்றி பிரிட்டனின் ஆங்கில ஊடகங்கள் மூலம் நாம் அடிக்கடி அறிகிறோம்.

அதேபோல், கலைத் தாகத்தால் ஏங்கிக் கொண்டிருக்கும் எங்கள் இளம் தம்பி தங்கைகளை, பேஸ் புக் மூலம் தொடர்பு கொள்ளும் சிங்கள அரசும் (அதன் கைக்கூலிகளும்) அவர்களைச் சீரழிப்பதும் ஒரு விதத்தில் உளவியல் ரீதியான வல்லுறவுதான்!

உ

# Ambaal TV

அம்பாள் தொலைக்காட்சி



**Hindu Tamil Cultural Association (Enfield)**

இந்து தமிழ் கலாசார சங்கம் (என்பீல்ட்)

Ambaal TV

**ENFIELD NAGAPOOSHANI AMBAAL TEMPLE**

என்பீல்ட் நாகபூசணி அம்பாள் ஆலயம்

**உங்கள் அம்பாள் தொலைக்காட்சியில் மார்ச் 1 ம், 2 ம், 3 ம் திகதிகளில்**
**புதிய தொலைக்காட்சித் தொடர்கள் ஆரம்பமாகவுள்ளன**

மஹாபாரதம் ராமாயணம் ஸ்ரீ கிருஷ்ணா ஓம் நமசிவாய
ருத்ரவீணை சாய்பாபா வேப்பிலைக்காரி திருவிளையாடல்
விக்ரமாதித்தனும் வேதாளமும் மைடியர் பூதம்

புதிய தொலைக்காட்சித் தொடர்களின் நேர அட்டவணையை
அம்பாள் தொலைக்காட்சியை பார்த்து தெரிந்துகொள்ளலாம்

## www.ambaal.org

என்ற இணைய முகவரியிலும்
**IPTV Box** இலும்
**iPad, iPhone** போன்ற சாதனங்களிலும்
அம்பாள் தொலைக்காட்சியை
பார்த்து மகிழலாம்




தமிழ் மொழி, இந்து சமயம், தமிழரின் கலை கலாசாரம் என்பவற்றை
பேணுவதையும் வளர்ப்பதையும் ஒரே நோக்கமாக கொண்ட தொலைக்காட்சி
அம்பாள் தொலைக்காட்சி

உங்களிடமுள்ள கலை நிகழ்வுகள், அரங்கேற்றங்கள்
மற்றும் ஆக்கங்களின் ஒளிப்பதிவுகளை எமக்கு அனுப்பி வைக்கலாம்.

தொடர்புகளுக்கு: 0208 884 3333
ambaaltv@ambaal.org
www.ambaal.org



அம்பாள் தொலைக்காட்சியை
**Deepam IPTV Box, Aarti TV Box,**
**Cloud Media IPTV Box,**
**Thisai Media IPTV Box**
ஆகியவற்றில் பார்த்து மகிழலாம்.

**Deepam IPTV Box: 0203 695 0555**
**Aarti TV Box: 0203 318 2004**
**Cloud Media Box: 0208 635 2005**
**Thisai Media Box: 0208 949 8299**

(தமிழகத்திலிருந்து கே.ஜி.மகாதேவா)

# ஈழத்தமிழருக்காக முதலைக் கண்ணீர் வடிக்கும் காங்கிரஸ்!

அறுபது ஆண்டுகால குடியரசாட்சி அனுபவத்துடன், நூற்று இருபது கோடி மக்கள் தொகையைக் கொண்ட புண்ணிய பாரதம் இம்மாதம் தனது பதினாறாவது ஜனநாயகத் தேர்தலை எதிர்நோக்கும் நிலையில், மக்கள் மனதில் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கும் மகாத்மா காந்தியின் ஒரு நம்பிக்கை நினைவுக்கு வருகிறது. தாய் நாட்டை விட சத்தியமே மகத்தானது என்று போற்றிய காந்திஜியின் சத்தியத்துக்கு சோதனை வந்ததுபோல் நாடாளுமன்றத் தேர்தலில் கட்சிகளின் உட்பூசல்களையும், கட்சி மாறலையும், தில்லுமுல்லுகளையும் கவனிக்கும் போது இந்தியாவுக்கு இவ்வளவு பெரிய (சத்திய) சோதனையா என்று மலைக்கத் தோன்றுகிறது!



### நூலறுந்த பட்டமாக பாரம்பரியமிக்க காங்கிரஸ்!

இந்திய அரசியல் வரலாற்றில் பாரம்பரியமிக்க காங்கிரஸ் தனது தேர்தல் அறிக்கையில், உலகத் தமிழர்களிடம் குறிப்பாக இலங்கைத் தமிழர்களிடம் பாவமன்னிப்பு கேட்டு பிராயச்சித்தம் தேடும் வகையில் இலங்கை ராணுவத்தின் போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரனை நடத்த வேண்டும் என்று முதல் தடவையாக, அதிசயமாக குரல் எழுப்பி, கறைபட்ட தனது, கைகளைச் சுத்தப்படுத்த முயற்சித்திருக்கிறது!

கடந்த நாடாளுமன்றத் தேர்தல் 2009-ல் நடைபெற்ற போது, இலங்கையில் போர் - தமிழின அழிப்பு உச்சக் கட்டத்தைத் தொட்டிருந்தது. இந்தியா பங்காளியாக இருந்ததே தவிர, இனப் படுகொலைபற்றி வாய் திறக்கவில்லை. ஐ.நா.விலும், நாடாளுமன்றத்திலும் ஈழத் தமிழர் குறித்து குரல்கள் எழுப்பப்பட்டபோதிலும் கடந்த ஐந்து ஆண்டுகளாக போர்க் குற்றம் தொடர்பாக காங்கிரஸ் கடும் மவுனம் காத்தது. கடந்த 2009 முதல் ஐந்து ஆண்டுகளாக வாய் திறக்காத காங்கிரஸ் (அரசு) இப்பொழுது (வாக்கு வங்கி நிரப்ப) முதல் தடவையாக இலங்கை ராணுவத்தின் போர் குற்றம் மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்த புகார்கள் பற்றி விரிவான விசாரணை நடத்த வேண்டும் என்று கோரும் காங்கிரஸ், இலங்கைத் தமிழர் பற்றிய தனது நிலைப் பாட்டில், "இலங்கையில் தமிழர்கள் மற்றும் சிறுபான்மையினருக்கு முழு அளவிலான, சமமான உரிமைகள், கிடைக்கச் செய்வதை இலங்கை அரசு உறுதி செய்ய வேண்டும் என்றும் 13-வது அரசியல் சட்டத் திருத்தத்தை அமுல்படுத்தி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சுயாட்சி அரசுகள் உருவாக்க இலங்கை அரசிடம் வலியுறுத்தப்படும் என்றும், இறுதிக் கட்டப் போரில் நிகழ்ந்த இலங்கை ராணுவ அட்டூழியங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்த புகார்கள் பற்றி நம்பகத்தன்மை கொண்ட, குறிப்பிட்ட காலவரையறைக்கு உட்பட்ட விசாரணையை நடத்த வேண்டும் என்றும் இலங்கை அரசை காங்கிரஸ் நிர்ப்பந்தம் செய்யும்" என்று கடந்த மாதம் 26-ம் திகதி வெளியிட்ட தனது தேர்தல் அறிக்கையில் காங்கிரஸ் முழக்கமிட்டுள்ளது. (கடந்த மாதம் 27-ம் திகதி ஐ.நா.வில் கொண்டுவரப்பட்ட இலங்கைக்கு எதிரான அமெரிக்க வரைவு தீர்மானத்தை இந்தியா எதிர்த்து தனது விசுவாசத்தை இலங்கைக்குக் காட்டியது தனிக்கதை. காங்கிரஸ் தேர்தல் அறிக்கையில் கூறப்பட்டுள்ள வாக்குறுதிகளில் பெரும்பாலானவை 2009-ம் ஆண்டு தேர்தலின்போதும் சொல்லப்பட்ட பழைய வாக்குறுதிகள் தான் என்றும், இலங்கை தமிழர் பிரச்னை தொடர்பாக காங்கிரஸின் கொள்கை தெளிவுபடுத்தப்படாமல், பூசி மெழுகி அனுதாபம் தேடி உள்ளது என்றும், அறிக்கையில் 'உங்கள் குரல் எங்கள் வாக்குறுதி' எனும் தலைப்பு மட்டுமே புதிது என்றும் விமர்சிக்கப்படுகிறது. ஆக, இந்த தேர்தல் அறிக்கை, காங்கிரஸின் ஞானமும் அல்ல, புது அவதாரமும் இல்லை. புதிய மொந்தையில் பழைய கள்!





### காங்கிரஸ், பா.ஜ. கட்சி கதையைக் கேளுங்க...!

இம்மாதம் ஏழாம் திகதி முதல் கட்டமாக ஆரம்பமாகும் இந்திய நாடாளுமன்றத் தேர்தல் தமிழ் நாட்டில் 24-ம் திகதி இடம் பெறுகிறது. காங்கிரஸோ அல்லது பாரதிய ஜனதா கட்சியோ பெரும்பான்மை பலத்துடன், தனித்துவமாக ஆட்சி அமைக்கும் என்பது நேற்றைய நிலவரப்படி ஒரு கனவு! அதேநேரம் கூட்டணிக் கட்சிகளின் ஆதரவுடன் ஆட்சி அமைக்கும் சாத்தியம் பாரதிய ஜனதா கட்சிக்கு, குறிப்பாக மோடி எனும் மந்திரத்தின் நிழலில் குளிர்காயும் பா.ஜ.க.வுக்கே உண்டு. இதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. அப்படியானால், இடுப்பு ஒடிந்து நடமாடத் தள்ளாடும் காங்கிரஸ் எப்படி எழப் போகிறது? யாரும் வரமாட்டார்களா என்று இரவு பகல் வாசலில் கண் பதிக்கும் காங்கிரஸ்; முக்கியமாக தமிழ்நாட்டில் 'பிள்ளை பிடிக்காரன்' போல் நாடி வருவோரை அமுக்கி வேட்பாளராக்கும் இழி நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறது! கேவலம்; வரும் தேர்தலில் பா.ஜ.க. வெற்றி உறுதி எனும் கணிப்பில் காங்கிரஸ் மற்றும் வேறு சில கட்சிகளின் முக்கியஸ்தர்கள் காவி கட்டத் தொடங்கிவிட்டனர் என்றால் காங்கிரஸ் பரிதாபத்தை எப்படி வர்ணிப்பது? ஆனாலும் பா.ஜ.க. தரப்பில் எல்லாம் சுத்தம் என்றும் கூறமுடியவில்லை. இந்தியா பூராவும் மோடி அலை வீசவில்லை. ஒரு மாற்றத்துக்கு, மக்கள் மத்தியில் (கள்) மயக்க நிலை காணப்படுகிறது!



பா.ஜ.க.வில் எல்.கே.அத்வானி ஒரு மூத்த தலைவர் மட்டுமல்ல, ஒரு அத்தியாயம். ஜஸ்வந்த்சிங் மற்றுமொரு அத்தியாயம். இப்படியாக பலர். இவர்கள் மோடி மற்றும் பா.ஜ.க. தலைவர் ராஜ்நாத்சிங் ஆகியோரினால் ஓரம் கட்டப்பட்டவர்கள். ஜஸ்வந்த்சிங் தான் விரும்பிய தொகுதியில் சுயேச்சையாக களமிறங்க, அத்வானி தனது பிடியைத் தளர்த்தி தொகுதியே கிடைக்காமல் போய் விடும் எனும் அச்சத்தில் மோடி, ராஜ்நாத்சிங்கை அனுசரித்து மீசையில் மண் ஒட்டவில்லை என்று கொடுக்கப்பட்ட தொகுதியை தாம் விரும்பி ஏற்றதாக பொய்சொல்லி அரசியல் ஓட்டுகிறார் என்றால்; தான்தோன்றித்தனம், அகம்பாவம் பா.ஜ.க.வின் அந்த இரண்டு 'பிரம்மா'க்களுக்கு நிறையவே இருக்கிறது. மோடிக்கு துணிவு தேவைதான். ஆனால் பணிவில்லாத துணிச்சல், வெற்றிப்படிகளை ஆட்டம் காணச் செய்து விடும் என்பதை இவர்களுக்கு எடுத்துரைப்பது யார்? டில்லி பா.ஜ.க. தலைமையகத்திலிருந்து கூப்பிடு தூரத்தில் தான் வாஜ்பாய் தனது இல்லத்தில் இருக்கிறார். பக்கவாதத்தினால் பாதிக்கப்பட்டு பேசும் சக்தியை இழந்த இவர்தான் ஏற்கனவே கறிவேப்பிலை ஆகிவிட்டார். இவரிடம் ஆலோசனை கேட்கும் நிலையிலும் அந்த இருவரும் இல்லை. இப்படியான சூழலில்; விவேகமற்ற மோடி வேகம், சில சந்தர்ப்பங்களில் சர்வாதிகாரத் தன்மையையும் சென்றடைந்துவிடும் என்பது நடுநிலை விமர்சகர்களின் பயக் கருத்தாகும்.!

### கைசுட்டதடா என்று கதறும் காங்கிரஸ்!

இந்தியா இதுவரை சந்தித்த பதினைந்து பொதுத் தேர்தல்களிலும் தலைதூக்காத அரசியல் கூத்துகள் கண்டு சந்தி நன்றாகவே சிரிக்கிறது. அரசியல் கட்சிகள் சுயநலம் என்றால், அன்று வாக்குகளை மதித்த மக்களை இன்று பணநாயகம் தனது அடிமையாக்கிவிட்டது. வேட்பாளர் தெரிவின்போது கட்சித் தலைமை; "உங்களிடம் எவ்வளவு பணம் இருக்கிறது? தேர்தல், செலவுக்கு எவ்வளவு ஒதுக்கி இருக்கிறீர்கள்?" என்றெல்லாம் வெட்கப்படாமலேயே கேட்பது அவமானமாகத் தெரியவில்லை. இது ஒருபுறம் என்றால் சாதி அரசியல் தமிழ் நாட்டில் நன்றாகவே கோலோச்சுகிறது.



தேசிய கட்சியோடு, திராவிட கட்சியோடு கூட்டணி இல்லை என்றார் ராமதாஸ். மத்திய மந்திரி பதவி ஆசையில் டாக்டர் ராமதாஸின் சத்தியத்தையே உடைத்திருக்கிறார் அவர் புதல்வன் டாக்டர் அன்புமணி. தமிழக பா.ஜ.க் தலைவர் பொன் ராதாகிருஷ்ணன் என்ன சொல்கிறார் தெரியுமா? "எல்லா ஜாதிகளையும் சேர்ந்தவர்களே நம். மக்கள் (அது தான், பாரதியாரே 'ஜாதிகள் இல்லையடி பாப்பா' என்று சொல்லிவிட்டாரே) நதியில் எது வேண்டுமானாலும் கலக்கலாம். கலந்ததின் கண்டுபிடிக்க முடியுமா? இதுபோலத்தான் பா.ஜ.க.வுடன் எந்த அமைப்பு கலந்தாலும் அது தேசிய கண்ணோட்டத்துடன் மாறிவிடும். தமிழகத்தில் இன்று நூற்றுக்கணக்கான ஜாதிகள் உள்ளன. அனைத்து ஜாதி மக்களும் ஒட்டு மொத்தமாக மோடி ஆட்சியைத்தான் விரும்புகிறார்கள். அகில இந்திய முஸ்லிம் முன்னேற்றக் கழகம் உட்பட 45 ஜாதிய அமைப்புகள் எங்கள் கூட்டணிக்கு ஆதரவு தெரிவித்துள்ளன. (அப்படியானால் மோடியை நம்பாமல் ஜாதியை நம்புவது!) என்கிறார் பொன்.ராதாகிருஷ்ணன். வாக்கு வங்கி அவசியம்தான். அதற்காக ஜாதிக்கட்சிகளை ஏன் தமிழக பா.ஜ.க. வளைக்க வேண்டும்? தேசிய சிந்தனை கொண்ட பா.ஜ.க.வுக்கு ஏன் இப்படிப்பட்ட ஜாதி அமைப்புகள்? மோடியை நம்பும் தமிழக மக்கள் எழுப்பும் கேள்வி இது!

### அந்த 'மூவர்' விடுதலை விவகாரம் விடாக்கண்டனாக மத்திய அரசு!

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தூக்கு விதிக்கப்பட்டு ஆயுளாகக் குறைக்கப்பட்ட முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகிய மூவரையும் விடுதலை செய்ய தமிழக அரசு நடவடிக்கை எடுக்கலாம் என்று உச்ச நீதிமன்றம் கூறியதை எதிர்த்து மத்திய அரசு உச்ச நீதிமன்றத்தில் சீராய்வு மனு தாக்கல் செய்தது. இவர்களை விடுவிக்க தமிழக அரசுக்கு அதிகாரம் இல்லை என்று வாதாடியது. தமிழக அரசு சார்பில் வழக்கறிஞர் திரிவேதி ஆஜராகி வாதிட்டார். "உச்ச நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் சட்டவிதிகளுக்கு உட்பட்டு மூவரையும் விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது. மூவரும் 23 ஆண்டுகள் சிறைத் தண்டனை அனுபவித்துள்ளனர். 14 ஆண்டுகளுக்கு மேல் அவர்களின் தண்டனையை பரிசீலிக்க மாநில அரசுக்கு அதிகாரம் உள்ளது. இந்த முழு அதிகாரத்தையும் பயன்படுத்தியே மூவரையும் விடுவிக்க தமிழக அரசு உத்தரவிட்டது" என்று தமிழக வழக்கறிஞர் வாதிட்டார்.

இவ்வழக்கு இம்மாதம் 2-ம் திகதி மீண்டும் விசாரணைக்கு வந்து தீர்ப்பும் வழங்கப்படும். மூவரின் விடுதலை பிரகாசமாகவே உள்ளது.




## தேரோட்டம்

### 1

1994 செப்டம்பர் 4ந் திகதி ஞாயிற்றுக்கிழமை.

நான் கடைசியாகப் பார்த்த நல்லூர்க் கந்தன் ஆலயத் தேர்த் திருவிழா அது. அதிகாலை நான்கு மணிக்கு எழுந்து குளிர்ந்த நீரில் குளித்து, உடுப்பு அணிந்து ஐந்து மணிக்கே தயாராகிவிட்டோம். ஐந்து மணிக்கு பிருந்தாவின் தோழி அனுராதா வந்து சேர்ந்தாள். நாங்கள் மூவரும் வீட்டிலிருந்து நடந்து சென்றோம். அந்த அதிகாலை நேரத்தில் வீதியில் பலர் கோயிலை நோக்கிச் சென்று கொண்டிருந்தார்கள். ஐந்தரை மணிக்கெல்லாம் கோயிலை அடைந்துவிட்டோம். ஜனக்கூட்டம் நிமிடத்திற்கு நிமிடம் அதிகரித்துக் கொண்டேயிருந்தது.

"இது ரொம்பப் பழமையான கோயிலாக இருக்குமோ?" எனக் கேட்டாள் அனுராதா. அருகில் நடந்து வந்து கொண்டிருந்த ஒரு வயதான பெரியவர் அவளைக் கூர்மையாக கவனித்தார்.

"யாழ்ப்பாண நகரில் சட்டநாதர் கோயில், நல்லூர் மாகாளி அம்மன் கோயில், கீரிமலை சிவன் கோயில், வல்லிபுரம் பெருமாள் கோயில், அங்கணாமைக்கடவை கண்ணகி அம்மன் என்பன யாழ்ப்பாணத்தில் மிகப் பழமையான ஆலயங்கள், பிள்ளை,

ஏறக்குறைய 550 ஆண்டுகளுக்கு முன்னர் தென்னிலங்கையிலிருந்து படையெடுத்து வந்து யாழ்ப்பாண இராச்சியத்தைக் கைப்பற்றி சிலகாலம் அரசாண்ட சிறீ சங்கபோதி புவனேகபாகு என்பவனால் இந்த ஆலயம் அமைக்கப்பட்டதாக இக்கோயில் கட்டியம் கூறுகிறது. ஏற்கனவே பழுதடைந்த நிலையிலிருந்த ஒரு கந்தன் கோயிலை இந்த அரசன் புனருத்தாரணம் செய்திருக்கலாம் என்பது சில வரலாற்றறிஞர்கள் கருத்து" என அவள் கேட்ட கேள்விக்கு பதிலளித்தார் அருகில் வந்துகொண்டிருந்த அப் பெரியவர்.

காலை ஆறு மணிக்கு செஞ்சுடர் ஞாயிறு கீழை வானைக் கிழித்துக்கொண்டு மேலெழுந்த நேரம் - குன்றமெறிந்து குரைகடலிற் சூர்தடிந்த குமரப் பெருமான் வள்ளி தேவயானி சமேதராய்த் தேரில் வந்து அமர்ந்துகொண்டார். "கந்தனுக்கு அரோகரா! கதிர்வேலனுக்கு அரோகரா!" என்ற கோஷங்கள் அலையலையாக எழுந்து படர்ந்தன.

தோரணங்களாலும், பல வர்ணத் துணிகளாலும், வெள்ளி மணிகளாலும், வெண்கலச் சிலைகளாலும், கருங்கற் சிற்பங்களாலும். கண்கவர் கொற்றக் குழாய்களாலும் அலங்கரிக்கப்பட்ட நெடிதுயர்ந்த தேர், அதன் உச்சி முடியில் சேவலும், மயிலும் பதித்த வெற்றிக்கொடி காலையிளங் காற்றில் படபடத்துக் கொண்டிருந்தது.

தேரின் மேடையில் முருகப்பெருமானுக்கு முன்னால் தலைமைக் குருக்கள் சுலோகம் ஜெபித்து தீபாராதனை செய்து கொண்டிருந்தார். அவருக்கு அருகே இரு உதவியாளர்கள் பால், பழம், பூக்களைத் தட்டுகளில் ஏந்தி நின்றார்கள். தேரில் பிணைக்கப்பட்டிருந்த தொடையளவு விட்டம் கொண்ட இரு வடக்கயிறுகள் மலைப்பாம்புகளைப் போல ஐம்பது மீட்டர் தூரத்திற்கு நீண்டு கிடந்தன. அவற்றைத் தூக்கிப் பிடித்துக் கொண்டிருந்த பல நூறு பக்தர்கள் இரு வரிசையாக நின்றார்கள்.

நாதஸ்வரங்கள் இன்னிசை இழைக்க - தவில் மேளங்கள் மோதி முழங்க - சங்குகள் ஊத - சேமக்கலங்கள் ஒலிக்க - சாமரங்கள் வீச - பரிவட்டக் குடைகள் விரிய - காவடிகள் ஆட - கரகங்கள் அசைய - கற்பூர வாசனை கமழ - ஊதுபத்திகள் மணக்க - பன்னீர்ப் புஷ்பங்கள் பூமழை பொழிய - பக்தர்கள் 'கந்தனுக்கு அரோகரா' எனப் பெருங்குரலெழுப்ப - வடக்கயிறு பற்றிய தொண்டர்கள் வலுவாக இழுக்க - வள்ளி தேவயானி சமேதராக முருகப் பெருமானின் வெளிப் பிரகார உலா ஆரம்பமாகியது.

பக்திப் பரவசத்தால் உள்ளம் புளகாங்கிதமடைய - மெய் விதிவிதிர்த்துக் கண்கள் நீர் சொரிய --

"கந்தனைக் காணாத கண்ணென்ன கண்ணே!

கற்பூர ஒளிகாணாக் கண்ணென்ன கண்ணே!"

என்று நவாலியூர் சோமசுந்தரனாரின் பக்திப் பாடலை இசைத்த வண்ணம் நடந்தார் ஒரு அடியார்.

தேரின் பின்னால் திருப்புகழ் பஜனைக் கோஷ்டியினர் "நாதனிந்து கலாதீ நமோ நம -- வேத மந்த்ர சொரூபா நமோ நம" எனப் பாடிக்கொண்டு நடந்தார்கள். தேரின் முன்னாலும், பின்னாலும், பக்கவாட்டுகளிலும் பெரும் ஜனத்திரள் மென் கதியில் ஊர்வல நடைபோட்டு நடந்தார்கள்.

திருவிழாக் கூட்டத்தில் கலந்துகொண்டிருந்த மக்களில் பெரும்பாலானவர்கள் தமது குடும்பத்தினருடனோ அல்லது நண்பர்களுடனோ வந்திருந்தார்கள். தனியனாக வந்திருப்பவர்கள் குறைவாகவே காணப்பட்டார்கள். பிருந்தாவை அவளது தோழி அனுரா்தாவுடன் முன்னால் செல்லும்படி கூறிவிட்டு சற்றுத்தள்ளி நான் அவர்களைப் பின்தொடர்ந்து கொண்டிருந்தேன். ஜன நெரிசலில் விரைவாகப் போவது இயலாத காரியமாக இருந்தது. தேர் அடிக்கடி நின்று, நின்று, நிதானமாக முன்னேறிக் கொண்டிருந்தது.

தேரோட்டம் ஆரம்பித்து பத்து நிமிடங்கள் ஆகியிருக்கும்; நீல நிற சர்ட்டும், கறுப்புக் காற்சட்டையும் அணிந்திருந்த ஒருவன் பிருந்தாவையும் அனுராதாவையும் பின்தொடர ஆரம்பித்தான். அவனை அவர்களும் கவனித்திருக்க வேண்டும். அவர்கள் திரும்பித் திரும்பி ஜனக் கூட்டத்தினூடே சென்ற போதெல்லாம் அவனும் திரும்பித் திரும்பி அவர்களைப் பின்தொடர்ந்து கொண்டேயிருந்தான். சற்றுப் பின்னால் நான் அவனைப் பின்தொடர்ந்தேன்.

அவன் திரும்பும்போது கவனித்தேன். ஏறக்குறைய முப்பது வயதிருக்கும். நடுத்தர உயரம்; ஐந்தரை அடி உயரமிருப்பான். தலைமயிரைப் பின்புறமாக வாரியிருந்தான். முகத்தில் மீசையும் தாடையில் குறுந்தாடியும் வைத்திருந்தான். அவன் பெண்களைத் தொடருவதும், நான் அவனைத் தொடருவதுமான நாடகம் பத்து நிமிடம் வரை நீடித்தது. இனிமேலும் தாமதிப்பது உசிதமல்ல; அவனை எதிர்கொள்ள வேண்டிய தருணம் ஆகிவிட்டது என எண்ணி நான் அவனை நோக்கிச் சமீபித்த சமயம் -

வெள்ளை நிற நாஷனல் சட்டையும், வெண்ணிற வேட்டியும் அணிந்த உயர்ந்த ஆகிருதி கொண்ட ஒரு பெரியவர் அவனது தோளைப் பிடித்து நிறுத்தினார்.

"நான் நீண்டநேரமாகப் பார்க்கிறேன். முன்னால் போகும் இரு பெண்களைத் தொடர்ந்து கொண்டேயிருக்கிறாய். நீ யார்? அவர்களுக்கு வேண்டியவனா?" என இரைந்து கேட்டார். அவருக்குப் பக்கத்தில் என்னோடு ஆஸ்பத்திரியில் வேலை பார்க்கும் டாக்டர் மல்லிகா நின்றிருந்தாள். அவரது குரல் கேட்டு பிருந்தாவும் அனுராதாவும் திரும்பினார்கள். சனங்கள் சுற்றிவர நின்று வேடிக்கை பார்த்தார்கள். குறுந்தாடி தனது தோளில் பதிந்த பெரியவரின் கையை விடுவித்துக்கொண்டு சனக்கூட்டத்தினிடையே ஓடி மறைந்தான்.

### 2

மல்லிகா தனது தந்தை பொன்னம்பலத்தை எங்களுக்கு அறிமுகப்படுத்தினாள். நான் பிருந்தாவையும் அனுராதாவையும் அவர்களுக்கு அறிமுகப்படுத்தி வைத்தேன். எங்கள் அனைவரையும் மதியச் சாப்பாட்டுக்கு தங்கள் வீட்டுக்கு வரும்படி வற்புறுத்தி அழைத்தார்கள். அந்த அன்பு அழைப்பை மறுக்க முடியாமல் ஏற்றுக்கொண்டோம்.

தேரோட்டம் முடிந்து கந்தவேள் திரும்பவும் கோயில் வாசலை அடைய நடுப்பகல் ஆயிற்று. அன்று பிற்பகல் முழுதும் அவர் தேரில் வீற்றிருந்து மாலையில் தரிப்பிடம் புகுவார். தேர் மீண்டும் வாசல் வந்ததும் சனக் கூட்டம் கொஞ்சம் கொஞ்சமாகக் கரைய ஆரம்பித்தது.

கோயிலின் கிழக்கு வீதிக்கு அப்பாலிருந்த மைதானத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 'ஏர்கண்டிஷன் பேர்ஜோ' காரில் எங்களை ஏற்றிக்கொண்டு கண்டிக்குழியிலிருந்த தனது பங்களாவிற்கு அழைத்துச் சென்றார் பொன்னம்பலம். அறுசுவை உண்டி அங்கே தயாராகயிருந்தது. உணவு கொண்டுவிட்டு, தேனாய்ச் சுவைத்த பால் பாயாசத்தை பருகிவிட்டு அவர்கள் வீட்டு ஹாலில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தோம்.

மல்லிகா பெண்களோடு பேசிக்கொண்டிருந்தாள்; பொன்னம்பலம் என்னோடு உரையாடிக் கொண்டிருந்தார். அவரது மனைவி, மல்லிகாவிற்கு ஒரு வயதாக இருக்கும்போதே, நோய்வாய்ப்பட்டு இறந்துபோனார். பலர் வற்புறுத்திய போதும் அவர் மறுமணம் செய்துகொள்ளவில்லை. தனக்கு வரப்போகிற புது மனைவி தனது மகளை எவ்வாறு

ஏற்று நடத்துவாள் என்பதால் ஏற்பட்ட ஐயமே அதற்குரிய காரணமாகக் கூறினார்.

பொன்னம்பலம் தனது உரையாடலின்போது மேலும் பல தகவல்களைத் தெரிவித்தார். பொன்னம்பலத்திற்கு சதாசிவம் என்றொரு இளைய சகோதரர் கொழும்பில் குடும்பமாக வாழ்ந்து வர்த்தகம் செய்து கொண்டிருந்தார். அவர்கள் அடிக்கடி சந்திக்க முடிவதில்லை என்றாலும் தினமும் தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசிக்கொண்டார்கள். தனது பிரச்சனைகள் பற்றி மேலும் கூறினார்.

இருபது ஆண்டுகளுக்கு முன்னர் யாழ்ப்பாண நகரில் செல்வராஜா என்ற பிரபல வர்த்தகரோடு கூட்டாகச் சேர்ந்து ஒரு நெசவுத் தொழிற்சாலையை ஆரம்பித்திருந்தார் பொன்னம்பலம். அது விருத்தியடைந்து, வளர்ச்சி பெற்று மேலும் பல வர்த்தக நிலையங்கள் அமைப்பதற்கு வழிகோலியது. நாளடைவில் மின்சார உபகரணங்கள் விற்கும் கடைகள், பலசரக்குக் கடைகள், துணிமணி விற்கும் கடைகள், பெற்றோல் குதம் என தொட்டதெல்லாம் பொன்னாகி அவரது ஸ்தாபனங்கள் பெருவளாச்சி கண்டன. இன்றைய சூழ்நிலையில் வர்த்தகம் வெகு மந்தமாகவே நடைபெற்றது. பொருட்களைக் கொள்வனை செய்யக்கூடிய வருமானம் மக்களிடம் இருக்கவில்லை. கிடைக்கும் லாபத்திலும் மாதாமாதம் ஒரு பங்கு விடுதலை இயக்கத்திற்கு கொடுக்க வேண்டும். பிரதியுபகாரமாக அவர்களுடைய போராளிகள் பொன்னம்பலத்தின் வர்த்தக நிலையங்களுக்குப் பாதுகாப்பு அளித்து வந்தார்கள்.

கடந்த சில மாதங்களாக பொன்னம்பலத்தின் வர்த்தகக் கூட்டாளி செல்வராஜா, பொன்னம்பலத்தின் பங்குகள் அனைத்தையும் ஒரு கோடி ரூபாய்க்கு தனக்கு விற்றுவிடுமாறு வற்புறுத்தி வருகிறார். வர்த்தக நிலையங்களினதும், அங்கிருக்கும் உபகரணங்களினதும், பொருட்களினதும் மொத்தப் பெறுமதி 20 கோடி பெறும். அதில் பொன்னம்பலத்தின் ஐம்பது சதவீதப் பங்கே பத்துக் கோடி தேறும். பத்துக்கோடி பெறுமதியான வர்த்தகப் பங்கை ஒரு கோடிக்கு விற்க அவர் தயங்கினார். ஆனால் அவரது தம்பி சதாசிவமோ 'அண்ணை, இன்றைய யாழ்ப்பாணச் சூழ்நிலையில் எந்த நேரமும் போர் மூளலாம். அப்படிப் போர் மூண்டால் வர்த்தக நிலையங்கள் எல்லாம் சேதப்படும். பேசாமல் கிடைக்கிற பணத்தைப் பெற்றுக்கொண்டு, உங்கள் ஷெயரை விற்றுவிட்டு கொழும்புக்கு வாருங்கள். இங்கே ஒரு வீட்டை வாங்கி, கடைசி காலத்தை நிம்மதியாகக் கழியுங்கள்' என அறிவுரை கூறிக்கொண்டிருந்தான். பொன்னம்பலமோ இத்தனை ஆண்டுகளாகக் கட்டிக்காத்து வளர்த்த நிறுவனங்களை அவற்றின் பெறுமதியில் பத்தில் ஒரு பங்கிற்குக் கொடுப்பதா? என மூளையைக் குடைந்து கொண்டிருந்தார். போதிய பணம் இருந்தால் மட்டும் வாழ்க்கையின் பிரச்சனைகள் எல்லாம் தீர்ந்துவிடுவதில்லை. சில சமயம் அதிக பணம் வைத்திருப்பதே பெரிய பிரச்சனையாக அமைந்துவிடுகிறது.

அன்று பிற்பகல் நான்கு மணியளவில் எங்களைத் தனது காரில் ஏற்றிக்கொண்டுபோய் வீட்டில் விட்டார். அடிக்கடி தங்கள் வீட்டிற்கு வரும்படி கூறி விடைபெற்றார்.

## 3

**கா**லம் நாட்கள், வாரங்கள், மாதங்கள் என விரைவாக நகர்ந்து கொண்டிருந்தது. பிருந்தா மார்கழி மாத இறுதிப் பகுதியில் நடைபெற இருக்கும் 'ஜி.சி.ஈ. அட்வான்ஸ் லெவல்' பரீட்சைக்காக இரவு பகலாகப் படித்துக் கொண்டிருந்தாள். நானும் முடிந்தளவில் அவள் பாடங்களைப் பயிலுவதற்கான உதவிகளைச் செய்துகொண்டிருந்தேன். எப்படியும் நான்கு பாடங்களிலும் சிறப்புச் சித்தி பெற்று, மருத்துவக் கல்லூரிக்கு அனுமதி பெறவேண்டும் என்ற குறிக்கோளை நோக்கி கண்ணும் கருத்துமாகச் செயற்பட்டுக் கொண்டிருந்தாள் பிருந்தா.

அக்காலகட்டத்தில் தமிழ் மாணவர்களின் கல்வி மேம்பாட்டை நாட்டின் அரசாங்கமே தடை செய்து கொண்டிருந்தது. இலங்கை அரசாங்க கல்வித் திணைக்கள சட்டதிட்டங்களின்படி வட இலங்கையிலிருந்து பரீட்சை எழுதும் ஒரு தமிழ் மாணவன் தென் இலங்கையிலிருந்து அதே பரீட்சையை எழுதும் ஒரு சிங்கள மாணவனைக் காட்டிலும் 10 சதவிகிதம் அதிக மார்க் பெற்றால்தான் இருவரும் ஒரே தரத்தினராகக் கருதப்படுவார்கள். உதாரணமாக, தென் இலங்கை மாணவனுக்கு ஒரு பாடத்தில் சித்திபெற 40 பாஸ்மார்க்காக இருந்தால், தமிழ் மாணவனுக்கு அதே பாடத்தில் அதே பரீட்சையில் சித்திபெற பாஸ்மார்க் 50 ஆக இருக்கும். இதை அவர்கள் தரப்படுத்துதல் (Standardization) என்றார்கள். உலகில் எந்த நாட்டிலும் நிகழாத ஒரு அநீதி இது.

இறுதியாகப் பரீட்சைத் தினமும் வந்தது. மார்கழி மாதக் கடைசி வாரத்தில் ஒரே மழையாக இருந்தது. பிருந்தாவிற்குப் பரீட்சை நடைபெற்ற நாட்களில் நானும் முன்னரே விண்ணப்பித்து வேலையிலிருந்து லீவு பெற்றிருந்தேன். அவளுக்குப் பரீட்சை நடைபெற்ற நான்கு நாட்களும் அவளை எனது காரில் ஏற்றிக்கொண்டு போய் வேம்படி மகளிர் கல்லூரி வாசலில் இறக்கிவிடுவேன். மூன்று மணிநேரம் கழித்து அவள் திரும்பி வரும்போது வெளியே காவலிருந்து திரும்ப அழைத்துக்கொண்டு வருவேன். அவளும் மிகவும் சந்தோஷமாகப் போய்ப் பரீட்சை எழுதிவிட்டுத் திரும்பி வந்தாள்.

வீடு திரும்பியதும் பரீட்சை வினாத்தாள்களை வைத்துக்கொண்டு அவள் ஒவ்வொரு வினாவிற்கும் எவ்வாறு பதிலளித்தாள் என்பதை கேட்டறிந்தேன். அவள் கூறிய விடைகளைக் கொண்டு அவள் பரீட்சையில் சிறப்பாகத் தேர்வு பெறுவாள் என எண்ணினேன்.

## 4

**யா**ழ்ப்பாண நகர் பெரிய கடையில் மின்சார நிலைய வீதியில் ஆரம்பமாகி வின்ஸர் தியேட்டர் அருகாக வடக்கே செல்லும் தார்ப்பாதை கஸ்தூரியார் வீதி. அக் கஸ்தூரியார் வீதியில் வின்ஸர் தியேட்டரிலிருந்து ஒரு நூறு மீட்டர் தொலைவில் ஒரு குச்சொழுங்கை கிழக்கு நோக்கிச் செல்கிறது. அக் குச்சொழுங்கை முடியுமிடத்தில் ஒரு பழைய வீடு. அந்த வீட்டின் முன் அறையில் யாரோ ஒருவருடைய வருகையை எதிர்பார்த்துக் காத்திருந்தான் பக்கி.

அவனது இயற்பெயர் பகீரதனாக இருக்கலாம். அவனைத் தெரிந்த ஒரு சில நண்பர்கள் அவனைப் பக்கியென்றே அழைத்தார்கள். அவன் எந்த ஊர்க்காரன்? அவனது பெற்றோர்கள் யார்? சகோதரர்கள் யார்? என்ற விபரங்கள் எவருக்கும் தெரியாது.

அவனுக்கு இருபத்தைந்து வயதிருக்கும். ஒரு உடற்பயிற்சிக்காரனுக்குரிய கட்டுமஸ்தான தேகம். ஒல்லியாக, உயரமாக இருந்தான். சுருட்டைத்தலை; தீர்க்கமான கண்கள்; டி-சர்ட்டும், காற்சட்டையும் அணிந்திருந்தான். சில ஆண்டுகளுக்கு முன் இலங்கையிலிருந்து சென்ற ஒரு இயக்கத்தின் சார்பில் தென்னிந்தியாவில் இராணுவப் பயிற்சி பெற்றவன். அவன் சேர்ந்த இயக்கம் ஓரங்கப்பட்டபின் அவன் தனியனாக இயங்கி வந்தான். அவனுக்கென்று ஒரு நிரந்தர விலாசம் கிடையாது. நேற்று மாலைதான் இன்று அவன் இருக்கும் அறையை வாடகைக்குப் பெற்றுக்கொண்டான். நாளைக்கு இங்கே இருக்கமாட்டான். ஆம், அவன் பணம் பெற்றுக்கொண்டு ஆட்களைத் தீர்த்துக்கட்டும் ஒரு 'காண்ட்ராக்ட் கொலையாளி.'

சரியாக காலை பத்து மணிக்கு ஒரு மனிதன் கையில் தோல் பேக்குடன் அந்த அறைக்கு வந்து சேர்ந்தான்.

"ஏற்கனவே தொடர்பு கொண்டபடி இதில் ஆயிரம் ரூபாய் நோட்டுகளாக ஒரு லட்சம் ரூபா இருக்கிறது. வேலையை கச்சிதமாக முடித்துவிட்டால் மீதி ஒரு லட்சம் உன்னை வந்து சேரும்" என்றான் வந்தவன்.

"இது நானிருக்கும் தற்காலிக விலாசம்தான். இனிமேல் இங்கே இருக்கமாட்டேன். ஒரு பெயரும் தொலைபேசி இலக்கமும் தந்தால் வேலை முடிந்ததும் நானே தொடர்பு கொள்கிறேன்" என்றான் பக்கி.

## 5

**அ**திகாலை இரண்டு மணி.

சுண்டிக்குளிப் பகுதியில் கனத்த இருள் கப்பிக்கிடந்தது. வானத்துச் சந்திரனையும், தாரகைகளையும் கனத்த கருமுகில்கள் மறைத்திருந்தன. வீதிகள் வாகனங்கள் அற்று வெறிச்சோடிக் கிடந்தன. வீதிக்கரையில் உயர்ந்து வளர்ந்திருந்த மரங்களினிடையே உடலெல்லாம் கறுப்புத்துணி அணிந்திருந்த ஒரு மனிதன் பதுங்கிப் பதுங்கி நடந்து அப் பங்களாவைச் சூழ்ந்திருந்த மதில் சுவரைச் சமீபத்தான். அவனது தோளின் மேல் தடித்த ஒரு கம்பளிப் போர்வையும், ஒரு சுருள் நைலான் கயிறும் காணப்பட்டன. அவனது இடுப்பிலிருந்த தோல் பட்டையில் சைலன்ஸர் பொருத்தப்பட்ட ஒரு கைத்துப்பாக்கி அதன் உறையில் தொங்கியது. அவனது இடதுகரத்தில் கணைகளை எறியும் இரும்பினாலான விசைவில் காணப்பட்டது.

அந்த பங்களாவின் மதில் சுவரை அடைந்ததும் அவன் தனது காதுகளைக் கூர்மையாக்கிக்கொண்டு ஊன்றிக் கவனித்தான். ஐந்து நிமிட நேரம் ஆடாமல் அசையாமல் சிலையாக நின்றான். பங்களாவின் சுற்றுப்புறத் தோட்டத்திலிருந்து எந்தவிதமான ஓசையும் இல்லை. மனம் திருப்திப்பட்டதும் நைலான் கயிற்றுச்சுருளை எடுத்து அதன் ஒரு முனையில் கட்டப்பட்டிருந்த இரும்புக் கொக்கியை இழுத்துச் சரிபார்த்தான். அதை வீசி சுவற்றின் உச்சிக்கு மேலாக எறிந்தான். கயிற்றை இழுத்து கொக்கி சரியாக மாட்டியிருக்கிறதா? எனப் பரீட்சித்துப் பார்த்தான். பரபரவென கயிறு வழியே மேலே ஏற ஆரம்பித்தான். சுவரின் உச்சியில் உலோக முட்கள் சிமெண்ட்டினுள் பொருத்தப்பட்டிருந்தன. தோளிலிருந்த கம்பளிப் போர்வையை அதற்கு மேலாகப் போட்டுவிட்டு சுவரின் உச்சியை அடைந்தான்.

காதுகளைக் கூர்மையாக்கிக் கொண்டு கவனித்தான்; அரவம் ஏதும் இல்லை. கொக்கியைக் கழற்றி மதில் சுவரின் உட்பக்கம் இறங்குவதற்கு ஏதுவாக ம்ாற்றிச் செருகிவிட்டு, மெதுவாக உள்ளே இறங்கினான். நிலத்தில் கால் பதிந்ததும் வலக்கரத்தில் விசைவில்லை எடுத்துக்கொண்டான். இடது கரத்தில் இடுப்புப் பட்டியில் செருகியிருந்த 'பிலிப்பினோ' மடிப்புக் கத்தியை எடுத்தான். அவனால் தனது இடது கரத்தினாலேயே இக்கத்தியைத் திறக்கவோ மடிக்கவோ முடியும்.

பங்களா காம்பவுண்ட்டிற்குள் வேட்டை நாய்களை எதிர்பார்த்தான். அது முதல் தடை. அடுத்து மின்சாரத் தடைகளும், கணிப்பொறிகளும் தோட்டத்தில் இருக்கலாம். இவற்றை எல்லாம் சமாளிக்கும் சக்தி தனக்கு உண்டு என்பதை நிரூபிக்க வேண்டிய் இரவு இது.

இந்தப் பங்களாவுக்கென தனியான மின்சார ஜெனரேட்டர் உண்டு என்பதை அவன் அறிவான். அது இரவு பத்து மணியோடு நின்றுவிடும். அதன் பின்னர் வரக்கூடிய மின்சாரம், சேமித்து வைக்கக்கூடிய பாட்டரி கலங்களிலிருந்துதான் வரமுடியும். இரவு விளக்கு எதுவும் எரியாதபடியால் அப்படியான பாட்டரி இயக்கம் இருக்கிறதா? இல்லையா? என்பதை அவனால் ஊகிக்க முடியவில்லை.

கண்களைச் சுருக்கிக்கொண்டு இருளில் பார்த்தான். நாய்களை அவன் பார்ப்பதற்கு முன்னரே அவனை நோக்கி அவை வருவதை அவனால் உணர முடிந்தது. வேட்டை நாய்களின் கண்கள் அந்த இருளிலும் பயங்கரமாக ஒளிர்ந்தன. பெரும்பாலான நாய்கள் குரைக்கும். இந்த வேட்டை நாய்களோ ஓசை எழுப்பாமல் அவன் மீது எகிறிப் பாய்ந்தன. அவனது தொண்டைக் குழியை நோக்கிப் பாய்ந்த . முதல் நாயை நோக்கி எறிகணையை அடித்தான்; அந்த நாய் சுருண்டு விழுந்தது. சடுதியாக இடப்பக்கம் சாய்ந்து - அடுத்த நாயின் பாய்ச்சலைத் தவிர்த்து எறிகணையைக் குறிபார்த்து அடித்தான். மென்மையான முனகலோடு நாய்கள் ஒடுங்கி ஓய்ந்தன. அதன்பின் எந்த ஓசையும் எழவில்லைல; அமைதி அரசோச்சியது.

காம்பவுண்ட் நிலத்தில் எங்கெங்கே கணிப்பொறிகள் புதைக்கப்பட்டிருந்தன என்பதை அவன் அறிந்திருந்தான். அவற்றைத் தவிர்த்து மேலே நடந்தான்.

கடந்த ஒரு மாத காலமாக அந்தப் பங்களாவையும், அங்கே வசிக்கும் மனிதர்களையும், அதன் காவல் அலகுகளையும் கவனித்து, படித்து, அவற்றைச் சமாளிக்கும் வழிவகைகளைப் பற்றிச் சிந்தித்து, தீர்க்கமான ஒரு முடிவுடனேயே அவன் வந்திருக்கிறான். அவன் மேற்கொண்டிருக்கும் தொழிலுக்குத் தேவையான அடிப்படை அறிவு அது. அவன் தேடிவந்த மனிதன் அன்றிரவு அந்தப் பங்களாவில் இருப்பதை அவன் அறிவான்.

அந்த இரவு - ஒரு கொலையை எதிர்பார்த்துக் காத்திருந்தது.

- தொடரும்


வரதன் நினைவுகள்

# ‘அண்ணை ரைட்’

## கே.எஸ்.பாலச்சந்திரன்



**‘அண்ணை ரைட்’ என்றால் அது மறைந்த ஈழத்து கலைஞர் கே.எஸ்.பாலச்சந்திரன்தான் மேடை, வானொலி, தொலைக்காட்சி என்று எல்லாம் அவர் நடிப்பால் தமிழர் நெஞ்சங்களைத் தன் பக்கம் இழுத்தவர். தன் எழுத்துக்களாலும் தமிழை அழகுபடுத்தியவர். ‘ரூபவாஹினி’யில் தயாரிப்பாளராக இருந்த ‘வரதன்’ என்ற ம.வரதராசன் தன்னுடைய நினைவலைகளை இங்கு பகிர்ந்துகொள்கிறார்.**



‘ரூபவாஹினி’ சூட்டிங்கில் கே.எஸ்.பாலச்சந்திரனும் தயாரிப்பாளர் வரதராசனும்

எனது அன்புக்குரிய அண்ணர் நண்பர் கே.எஸ்.பாலச்சந்திரன் அவர்களின் நினைவலைகளில் சில!

கே.எஸ்.பாலச்சந்திரன் அவர்களைப்பற்றி நான் எழுதவேண்டியதும் நிச்சயமாகப் புதினத்தில் எழுத வேண்டியதும் எனது முக்கிய கடமையாகின்றது.

காரணங்களை இப்படிச் சொல்லி எனது குறிப்பைத் தொடரலாம் என நினைக்கிறேன்.

பாலச்சந்திரன் அவர்கள் என் ஊரவராக இருந்தமை. (என் ஊர்ப்பெருமை)

அவர் கலைஞராக இருந்தமை (எனது கலைத் துறைப் பெருமை)

ஒரு வானொலித் தொகுப்பாளராக இருந்தமை (நான் ஓர் ஒலிபரப்பாளன் என்ற மகிமை)

அவர் ஒரு பத்திரிகை எழுத்தாளர் என்பது (என்னுடன் சமகாலத்தில் ஈழநாட்டில் எழுதியவர் என்ற எனது கால நிர்ணயம்)

சும்மா ஒரு வானொலித் தொலைக்காட்சி நடிகராக இருந்த அண்ணாரை ஒரு அறிவியல் விஞ்ஞான கல்வி நிகழ்ச்சிக் கலைஞராக சிறுவர் கதை சொல்லியாக மாற்றியமையால் அவருக்குக் கிடைத்த சமூகப் பரிமாண மாற்றத்தில் எனது வகிபாகத்தில் எனக்குக் கிடைத்த பெருமை..

என்பன என்று சொல்லிக்கொண்டு போகலாம்.

அவர் எனது ஊரவர். அவரது சகோதரன் மோகன் (மோகனச்சந்திரன்) என்னுடன் படித்த காலத்தில் கரவெட்டி திரு இருதயக் கல்லூரியில் 70களில் “புளுகர் பொன்னையர்” நாடகப் பிரதியைக் கொண்டு வந்து மாணவர்களுடன் நடித்து நடிப்பித்து கட்டியதால் மோகனின் அண்ணா தான் நடிகர் பாலச்சந்திரன் அவர்கள் என்ற பள்ளிக்கால அறிமுகம்! (மோகனச் சந்திரனுக்கு பள்ளியில் அப்படி ஒரு மதிப்பு அக்காலத்தில்)

பின்னர் “அண்ணை ரைட்” தனி நடிப்பை அவர் எங்கள் கல்லூரிக்கு வந்து ஒரு நாள் நடித்துக்காட்டிய நேரடி அறிமுக நினைவு!

பின்னர் அவர் வீதியால் எங்கள் வீட்டைக் கடந்து கொடிகாமம் வீதியால் நெல்லியடிக்கு நடந்து போகும் போது அவருக்குப் பின்னால் இன்னும் சில சிறுவர்களுடன் அவரைப் பார்த்தபடி அவரை ரசித்தபடி அவர் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் சொல்லியபடி..கொஞ்சத்தூரம் நடந்து சென்ற நினைவு !

தணியாத நாடகம் வானொலியில் ஒளிபரப்பான போது ரியூசன் வகுப்பை “கட்” பண்ணிவிட்டு ஞாயிற்றுக்கிழமைகளில் அந்த நாடகத்தைக் கேட்க வைத்த “சோமு” என்ற பாலச்சந்திரன்.!



பாராட்டு விழாவில் கே.எஸ்.பாலச்சந்திரன்

இந்த நினைவுகளுக்கு மேலால் ..பாலா அண்ணாவின் மறைவைக் கேட்டபின்னபின்னர்,

எனக்கு நினைவு நரம்புகளில் அடிக்கடி வந்து பதிந்து மறைந்து கொண்டிருந்தவை சில.

அவற்றில் அவருடன் பழகிய, மனம்விட்டுப் பேசிய சில சம்பவங்கள்...அவரது மனதை நெருடிய நெருக்கிய நினைவுகள்...அவர் என்னுடன் நேரடியாக விட்ட பகிடிகள்..என்பவற்றுடன்...

ஈழநாடு அலுவலகத்தில் வைத்து ராஜகோபால் அண்ணர் என்னை அவருக்கு அறிமுகம் செய்ய அவர் தெரியும் என்று சொல்ல.. “இவர் ரூபவாஹினிக்கு விண்ணப்பித்துள்ளார். உங்கள் ஊரவர் பார்த்து உதவி செய்யும்..” என்று ராஜகோபால் அண்ணர் அறிமுகம் செய்தமை ஞாபகம்.

நானும் பின்னர் பாலச்சந்திரனை வீதியில் கண்டால், ஓரிரு முறை சைக்கிளில் ஏற்றிச் சென்று அவர் வீட்டில் இறக்கியது ஞாபகம். பாலச்சந்திரன் தான் ரூபவாஹினி என்ற நினைப்பு எனக்கு.

“உம்முடைய பெயர் எனக்கு ஞாபகம் தானே.. நான் போகும்போது விக்கியுடன்.. மிசிஸ் ரத்தினத்துடன் கதைக்கிறன்” என்று அவர் “வானொலி” நாடக உரைப் பாணியில் சொன்னதும் நினைவுக்கு வந்தது.

அவரைக் கண்டு பல நாட்கள் நகர்ந்தன.. அவர் ஊருக்கு வருவதும் குறைவு..எனது வாழ்க்கைப் பயணமும் வேறு திசைகளில் நகர்ந்தன..

ரூபவாஹினிக்கு விண்ணப்பித்து நேர்முகப் பரீட்சைக்கு அழைப்பு வந்து பின்னர் என்னை அழைக்கும்போது ஒரு வருடத்திற்கு மேலாகிவிட்டது..

பாலா அண்ணரை பின்னர் நான் நேரில் கண்டது ரூபவாஹினி வரவேற்பு மண்டபத்தில். அவர் திரு விக்னேஸ்வரனைக் காண வந்திருந்த பொழுது..

நான் அப்பொழுது ரூபவாஹினி கல்விச் சேவையில் பணியாற்றிக் கொண்டிருந்தேன். “..கல்விச் சேவையில் ஏதும் செய்யலாம் என்றால் சொல்லுங்கோ” என்று பின்னர் அவர் அங்கு வரும்போது அடிக்கடி என்னைக் கேட்பார்.. “கையில கடிக்குது ! காசும் தேவை; பார்த்து ஏதாவது செய்யுங்கோ” என்று பகிடியாகச் சொல்வார்.. “..உங்கட புண்ணியத்திலதான் நாங்கள் ஊருக்கு இடைக்கிடை போகலாம்..”என்பார் பகிடியாக..

ஏனெனில் நான் இப்போது தயாரிப்பாளர் அல்லவா..?

இசைஞானி இளையராஜா திரை இசைத்துறைக்கு வந்த தருணம் அவர் கண்ணதாசனை வைத்து பாடல்கள் எதுவும் செய்ய வில்லையாம் ஒரு முறை ராஜா ஒரு திருமண விழாவுக்கு அவரது நெருங்கிய நண்பர் பஞ்சுஅருணாசலத்துடன் போகிறார். அங்கு முன் வரிசையில் கவிஞர் இருக்கிறார். இளையராஜாவை அருகில் வைத்துக் கொண்டே பஞ்சுஅருணாசலம் கண்ணதாசனிடம் கேட்டாராம் “எப்படிக் கவிஞர் சேர் சௌக்கியமா..?” என்று. அதற்கு கவிஞர் சொன்னாராம்.. ராஜாவைப் பார்த்தபடி.. “ராஜாக்கள் மனசு வைத்தால் கவிஞர்களுக்கு என்ன குறை..?” என்று..! இதனைப் புரிந்து கொண்ட ராஜா அடுத்த தமது பாடலுக்கு கவிஞருக்கு அடுத்த பாட்டு மெட்டைக் கொடு ..என்று கங்கை அமரனிடம் பணித்தாராம். (அந்தப் பாடல் தான் நல்லவர்க்கெல்லாம் சாட்சிகள் ரெண்டு..ஒன்று மனச்சாட்சி..)

நான் மேலே இதனைக் குறிப்பிட்டது ஏனென்றால் நாங்கள் வயதில் சிறியவர்கள் தொழிலில் புதியவர்கள் என்றாலும் மூத்த கலைஞர்கள் நாங்கள் தயாரிப்பாளர்கள் என்பதால் மிகவும் வலிந்து எமக்கு மதிப்பினைத் தந்தபடி பழகுவார்கள். ஆனால் எனக்கு அது பெரிய கௌரவ சங்கடமாக இருக்கும்.

தொடர்ச்சி 30ம் பக்கம்

கே.எஸ்.பாலச்சந்திரன், இலங்கை வானொலியில் கிரிக்கெட் வர்ணனையாளராகப்பணியாற்றினார். அப்போது, மூத்த ஆரம்பகால சிங்கள கிரிக்கெட் வர்ணனையாளர் பிரேமசாரா எப்பாசிங்க, மூத்த விளையாட்டு வர்ணனையாளரும், ஒலிபரப்பாளருமான எஸ்.எழில்வேந்தன் ஆகியோருடன் மறைந்த கலைஞர்.



# புலிச்சின்னம் வரைந்த தமிழக ஓவியர்!



## அவரே மனம் விட்டுப் பேசுகிறார்

“ஓவியனான எனக்கு முப்பது வருடங்களுக்கு முன் அறிமுகமானார் தம்பி. ஒரு அலுவல் காரணமாக இலங்கையிலிருந்து சிவகாசி வரை வந்த தம்பி அப்படியே என்னையும் சந்தித்தார்.”


1977களில் தமிழீழத் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனோடு தனக்கு ஏற்பட்ட தொடர்பை 2009ஆம் ஆண்டு ஒரு பத்திரிகைப் பேட்டியில் சொன்ன தமிழகத்தின் ஓவியர் நடராசா இன்றில்லாவிட்டாலும், அவருக்கும், நமது தலைவருக்கும் இருந்த தொடர்பு தமிழீழ சரித்திரத்தில் ஒரு முக்கிய அத்தியாயம்.

இன மான உணர்வு மிகுந்த மறைந்த ஓவியர் நடராசா, விருதுநகர், மல்லாங்கிணறு கிராமத்தை பிறப்பிடமாகக் கொண்டவர்.

புலிகள் இயக்கத்தை தொடங்கிய புதிதில், தனது இயக்கத்திற்குப் புலிச்சின்னத்தை வரைய ஆசைப்பட்ட பிரபாகரன், தமிழகத்தில் இருக்கும் பல ஊர்களிலும், பல இடங்களிலும், பல ஓவியர்களைச் சந்தித்திருக்கிறார். சந்தித்தவர்கள் எவரும் பிரபாகரன் திருப்தியடையும் வகையில், புலிச் சின்னத்தை வரையவில்லை.

பிறகு மதுரையில் நல்ல ஓவியர் இருக்கிறார் எனக் கேள்விப்பட்டு, ஓவியர் நடராசாவைச் சந்தித்திருக்கிறார். ஓவியத் திறமையும், புகைப்படத் திறமையும் கொண்டவரான நடராசா, இதை ஒரு நல்ல வாய்ப்பாக கருதி, வரையச் சம்மதித்திருக்கிறார்.

பல முறை அவர் வரைந்தும் திருப்தியடையாத பிரபாகரன், ‘புலியின் முகத்தில் சீற்றம் வேண்டும்’ என்று சொல்ல, அந்தச் சீற்றத்தை தனது தூரிகையின் மூலம் உயிர்ப்பாகக் கொண்டு வந்தார் நடராசா. அந்தச் சின்னமே இனவெறியர்களான சிங்களவர்களை அச்சுறுத்துவதாக இருக்க வேண்டும் என்று, துப்பாக்கிகளையும், புல்லட்டுகளையும் அந்த இலச்சினையில் இணைத்து, பிரபாகரனையே பிரமிக்க வைத்திருக்கிறார் ஓவியர்.



இலச்சினையில் இருக்கும் புல்லட்டுகளின் எண்ணிக்கைக்கு ஏதேனும் விசேட காரணம் இருக்கிறதா? எனப் பிரபாகரன் அவரிடம் கேட்டபோது, “அதெல்லாம் இல்லை. கைக்கு வந்ததை வரைந்தேன்” எனத் தனது யதார்த்த நிலையையும் பிரபாகரனிடம் வெளிப்படுத்தியிருக்கிறார் ஓவியர்.

புலிகளின் இந்த மிரட்டலான புலிச்



சின்னத்தை நான்தான் வரைந்தேன் என்று புருடாவிட்டு மார்தட்டிக் கொண்டவர்கள் பலர். ஆனால், சிங்களவனுக்குச் சிம்ம சொப்பனமாக இருந்த அந்த ஓவியத்தை வரைந்த ஓவியர் நடராசா, தன்னைப் பற்றித் தம்பட்டம் அடித்துக்கொள்ளவில்லை. புலிச் சின்னத்தை மட்டும் அவர் வரையவில்லை. முதலாவது, ‘லெட்டர் பாட்’டையும் வடிவமைத்துக் கொடுத்தவரும் அவரே! அதைவிடவும், பிரபாகரனுக்கு முதன்முறையாக, போர்க்களத்துக்கான சீருடையை உருவாக்கித் தந்தவரும் அவரே!

இதற்காக, இவரே துணி வாங்கி, அதில் கோடுகளைப் ‘பெயின்டால்’ வரைந்து, இவரே அதை மிடுக்கான ஆடையாகத் தைத்து, பிரபாகரனின் கையில் பொம்மைத் துப்பாக்கி ஒன்றையும் கொடுத்து, தனது பிள்ளைகளின் தொப்பியை அணிவித்து, தனது மனைவியின் புடவையை பின்னால் திரைச்சீலையாகக் கட்டி, பிரபாகரனைப் பல கோணங்களில் படம் எடுத்தவரும் ஓவியர் நடராசாதான். ஓவியம் வரைவது போலவே புகைப்படம் எடுப்பதிலும் வல்லவராக இருந்தார் நடராசா. அவர் முதன்முதலில் எடுத்த பிரபாகரனின் சீருடைப் படம் 1980களில் பத்திரிகைகளில் பிரபல்யமாக இருந்தது. அந்தப் படம் சிவகாசியில் காலண்டராகவும் வந்து புகழ்பெற்றது.

பிரபாகரனுக்கு மிடுக்கையும், கம்பீரத்தையும் முதன்முதலில் சீருடை மூலம் உருவாக்கிய பெருமை ஓவியர் நடராசாவையே சாரும். இப்படி எல்லாம் அவர் உதவிகள் புரிந்ததால்தான் பிரபாகரன் இவரைத் தனது சொந்த அண்ணாவாகவே பாவித்து, “அண்ணா, அண்ணா” என்று அன்பொழுக அழைத்திருக்கிறார்.

தனது கடைசிக் காலத்தில், பக்கவாத நோய் தாக்கிய நிலையில், படுக்கையில் விழுந்த ஓவியர் நடராசா, சிங்களவர்களின் இனவெறியாட்டத்தை அறிந்து மனம் கொதித்துப் போயிருந்தார்.

ஒரு தமிழக பத்திரிகைக்கு அவர் மறைவதற்கு முன்னர் அளித்த பேட்டியின் சில பகுதிகள் பின்வருமாறு அமைந்தது:

“தம்பி மாதிரி ஒருத்தர என் வாழ்க்கைல சந்தித்ததும், அவரு அண்ணனா என்னை ஏத்துக்கிட்டதும் என் வாழ்க்கைல நான் செய்த பாக்கியம்.

டீ, காபி குடிப்பதையே கெட்ட பழக்கம் என்பார். புகைப்பது, மது அருந்துவது அவருக்கு ஆகவே ஆகாது.

பிரபாகரனை பிடிவாதக்காரர் என்று ஒரேயடியாகச் சொல்லிவிட முடியாது. தனக்கு முரண்பாடான கருத்துகள் என்றாலும், அந்த நேரத்தில் மிகச் சரியென்றுபட்டால் தயங்காமல் ஏற்றுக் கொள்வார்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில், சாகும்வரை உண்ணாவிரதம் இருந்த மாணவிகளில் ஒருவர்தான் மதிவதனி. புங்குடுதீவைச் சேர்ந்தவர். வினோஜா, லலிதா, ஜெயா ஆகிய மாணவிகளும் தொடர் உண்ணாவிரதமிருந்து சாவின் விளிம்பைத் தொட்டுவிட, அவர்களைக் காப்பாற்றும் நோக்கோடு ரகு என்பவர் அந்த நால்வரையும் பிரபாகரனிடம் அழைத்து வந்தார். அதன்பின்னர் இயக்கப் பணிகளில் அவர்கள் ஈடுபட்டனர். பட்டினி கிடந்து சாகவே துணிந்த பெண் போராளி மதிவதனி மீது பிரபாகரனுக்கு மரியாதை ஏற்பட்டது. சமையலிலும் கைதேர்ந்த மதிவதனியை தம்பிக்கு ரொம்பவே பிடித்துவிட்டது. மணவாழ்க்கை காணத்தம்பி தயாராகிவிட்டதை அறிந்த சுகுமார் என்பவர் என்னிடம், ‘தம்பி கல்யாணம் பண்ணிக்கப் போறது தெரியும்ல’ என்று குறைபட்டுச் சொல்ல, நான் தம்பியிடம், ‘இந்தப் போராட்ட வாழ்க்கைல இதெல்லாம் எதுக்கு?’ என்று நேரடியாகவே கேட்டுவிட்டேன். தம்பியோ நிதானமாக, ‘அண்ணா! நான் ஒன்றும் முற்றும் துறந்த முனிவனல்ல. அப்படி யாரும் என்னை நினைத்துவிடக்கூடாது. எல்லோரையும் போல, நானும் சாதாரண மனிதன்தான்!’ என்று யதார்த்தமாகச் சொன்னார். பிற்பாடுதான் மதிவதனியின் அருமை பலருக்கும் தெரிந்தது. போர் முனையிலும் கூடப் பிரபாகரனுக்கு எத்தனை உறுதுணையாக இருந்தாரென்று. அது என்ன வாழ்க்கை? காடுகளிலும், மலைகளிலும் அங்குமிங்குமாக அலைந்து கடைசியில் சென்னையில்தான் சார்லஸையும், துவாரகாவையும் பெற்றார் மதிவதனி. இக்கட்டான தருணங்களில்கூட பதற்றமே இல்லாமல், இன்முகத்துடன் ஒவ்வொரு சூழ்நிலையிலும் அவர் சமாளித்த விதம், ‘பிரபாகரனின் போராட்ட வாழ்க்கைக்கு எத்தனை பொருத்தமாக இருந்தார்’ என்று பலரையும் வியக்க வைத்தது.

ஒருமுறை துவாரகா பெரியவளானதை அறிந்து அவளுக்காக வெள்ளிக் கொலுசு வாங்கிக் கொண்டு சிலோன் சென்றேன். அப்போது நான் கொடுத்த கொலுசை ஆசை, ஆசையாகப் போட்டுக்கொண்டு தரையே அதிரும்விதமாக ஜல்ஜல் என்று அவள் நடந்த காட்சி இன்னும் கண்ணுக்குள்ளேயே இருக்கிறது. அப்போது தம்பியிடம், ‘என்ன உங்க மக இப்படி நடக்கிறா?’ என்று விளையாட்டாகக் கேட்டேன். மகள் நடக்கும் அழகை மனைவியோடு சேர்ந்து ரசித்த தம்பி, ‘என் பொண்ணு ஸ்கூல்ல அட்வான்ஸ்ட் லெவல் முடிச்சிருக்கா. கடல்ல 15 கிலோ மீட்டர் தூரம் சளைக்காமல் நீச்சலடிப்பா அண்ணா!’ என்று பூரிப்பாகச் சொன்னார்.

அந்த நேரத்தில் வீட்டுக்கு வெளியே தம்பியின் இளைய மகன் பாலச்சந்திரன் விளையாடிக் கொண்டிருந்தான். அவன் பக்கத்தில் சென்று, ஏதோ சொன்னேன். அப்போது தன் தந்தையிடம், என்ன இவர் ‘இப்படி கதைக்கிறார்?’ என்று கேட்டான். ‘இவர் தமிழ்நாட்டிலிருந்து வந்திருக்கிறார். என் நண்பர்’ என்றார் தம்பி. உடனே அவன், ‘தமிழ்நாடு என்று சொல்லாதீங்கப்பா, இந்தியா என்று சொல்லுங்கோ அப்பா’ என்றான்.

உங்களுக்கு ஒண்ணு தெரியுமா? விரிப்புக்கூட இல்லாத கட்டாந்தரையில் தான் படுத்துத் தூங்குவாரு தம்பி. என் வீட்டுக்கு வந்தாலும் அப்படித்தான்! அதற்கு அவர் சொன்ன விளக்கம்: காட்டுல, மேட்டுல திரியுறப்ப கண்ட இடத்துலயும் படுக்க வேண்டியிருக்கும். அதனால் அப்படிப் பழகிவிட்டேன்.

இந்த உலகத்திலே பிரபாகரன் மாதிரி என் உள்ளத்தில் இடம் பிடிச்சது யாரும் கிடையாது. நடக்க முடியாம நான் சிரமப்படுகிறேன்னு தெரிஞ்சு தம்பி எனக்குக் கொடுத்த கைத்தடி.”

**புலி பதுங்கிப் பாயும்ங்கிறது தம்பி விஷயத்துல ரொம்பவும் பொருந்தும். இப்பவும் பதுங்கித்தான் இருக்காரு. அது உயிர் வாழணும்ங்கிற ஆசையில இல்ல. தமிழினம் நாதியத்துப் போயிடக் கூடாதுங்கிற வெறியில.......**

## மீண்டும் கவுதமி! கமலுடன் ஜோடி

நிஜ வாழ்வில் கமலின் துணைவியாக வாழும் கவுதமி, நீண்ட இடைவெளிக்குப் பிறகு மீண்டும் நடிக்க வருகிறார். 'த்ரிஷ்யம்' ரீமேக்கில் கமலுக்கு ஜோடியாக அவர் நடிக்கிறார். மோகன்லால் - மீனா நடித்த மலையாளப் படம்தான் 'த்ரிஷ்யம்'. இப்படத்தின் தமிழ் ரீமேக்கில் கமலுக்கு ஜோடியாக மீனா நடித்த பாத்திரத்தில் கவுதமி நடிக்கிறார். 'தேவர் மகன்', 'குருதிப்புனல்', 'நம்மவர்' போன்ற பல தமிழ் படங்களில் கமல்-கவுதமி பொருத்தமான ஜோடியாகத் திகழ்ந்தனர்.

புற்றுநோயால் பாதிக்கப்பட்டு, இப்போது மீண்டும் பூரண நலத்துடன் வாழும் கவுதமிக்கு, சினிமாவில் மீண்டும் மறுபிரவேசமாக அமையட்டும் என்பதால், கமலும் இந்த முடிவுக்கு ஒப்புக்கொண்டுள்ளார்.



## ரசிகர்களிடம் சீரழிந்த இந்தி நடிகை!

இந்தியா, தென்னிந்தியா என்று நான்கு திசைகளையும் கலக்கும் நடிகை பூனம்பாண்டே மீது மது போதையில் இருந்த அவரது ரசிகர்கள் பாய்ந்துள்ளார்கள். அவரது ஆடல் நிகழ்ச்சி ஒன்றின்போது குடிபோதையில் இருந்த ரசிகர்கள் பாலியல் பலாத்காரம் செய்ய முயன்றதாக தகவல் கசிந்துள்ளது. பெங்களூரில் நடந்த இச்சம்பவத்தினால், பூனம் அடைந்த அதிர்ச்சியிலிருந்து இன்னமும் விடுபடவில்லையாம். பணத்திற்காக போதை ஆசாமிகள் முன் நடனமே ஆடக்கூடாது என்பதே அவர் தனது நண்பர்களான நடிகைகளுக்கு கூறும் அட்வைஸ். இப்படி எல்லாம் அரைகுறை ஆடை அணிந்து நடனமாடினால் குடிக்காத ஆசாமிகளும் சும்மா இருப்பாங்களா?



## தெய்வத் திருமகள் சாராவுக்கு ஒரு நாளைக்கு ஒரு லட்சம்!

தெய்வத் திருமகள் படத்தில் விக்ரமின் மகளாக நடித்த பேபி சாராவின் ஒரு நாள் சம்பளம் ஒரு லட்சமாம்! தமிழ் ரசிகர்களை தன் நடிப்பால் அசத்தியவர். இயக்குனர் விஜய் தெய்வத் திருமகளில் தான் அறிமுகம் செய்த சாராவை சைவம் என்ற தனது படத்தில் நடிக்க வைத்துள்ளார். தாத்தா, பாட்டி, பேத்தி ஆகியோருக்கு இடையில் நடக்கும் படம்தான் சைவம். இதில் சாரா முக்கிய பாத்திரத்தில் நடித்துள்ளார். சைவம் படத்தில் சாரா தன் நடிப்பால் கலக்கியுள்ளார். சாராவுக்கு ஒரு நாளைக்கு ஒரு லட்சம் சம்பளம் கொடுத்துள்ளார் விஜய். சாரா விளம்பரப் படங்களில் நடிக்க ஒரு நாளைக்கு இரண்டு லட்சம் சம்பளம் பெறுகிறாராம்.



## ஆர்யா, அனுஷ்கா பத்திரிகையாளர்களுக்கு பயந்து மறைந்தனர்!



சென்னையிலுள்ள ஹயாத் ஹோட்டலில் கோச்சடையான் பத்திரிகையாளர் சந்திப்பு நடந்தது. அப்போது ஆர்யாவும், அனுஷ்காவும் ஜோடியாக ஹோட்டலில் இருந்து வெளியே வந்தனர். பத்திரிகையாளர்களைப் பார்த்ததும் அதிர்ச்சி அடைந்தனர். பத்திரிகையாளர்களிடம் சிக்கிவிடக் கூடாது என்று அவர்கள் கைகோர்த்தபடியே 'பார்க்கிங்' பகுதிக்குச் சென்று, காரில் ஏறிப் பறந்துவிட்டனர். ஆர்யாவுக்கு இது கை வந்த கலை என்பது பத்திரிகையாளர்களுக்குத் தெரியாதா, என்ன?



## ஒரு நாளைக்கு ஒரு கோடி கேட்ட தீபிகா படுகோனே!

விஜய்யை வைத்து சிம்புதேவன் இயக்கும் படத்தில் நடிக்க கோலிவுட்டின் முன்னணி நாயகிகள் போட்டாபோட்டி போடுகிறார்களாம். முருகதாஸ் படத்தில் இப்போது நடித்துக் கொண்டிருக்கிறார் விஜய். சிம்புதேவன் தனது படத்துக்கு ஒரு கதையை விஜய்யிடம் கூறினார். அதனைக் கேட்டு அசந்துவிட்டாராம்!

ரஜினியுடன் கோச்சடையானில் ஜோடி சேர்ந்த தீபிகா படுகோனேவை தனது படத்தில் நடிக்க சிம்பு கேட்டார். ஒரு நாளைக்கு ஒரு கோடி சம்பளம் கேட்டிருக்கிறார். என்ன அப்படி தீபிகாவிடம்? என்று தலையைச் சுற்றியது சிம்புவுக்கு.



## சிக்கித்திணறிய கவர்ச்சிகன்னி பிரியா!

தமிழ்நாடு, மயிலாடுதுறையில் படப்பிடிப்புக்காக வந்த நடிகை பிரியா ஆனந்த் ரசிகர்கள் கூட்டத்தில் சிக்கித் திணறினார். 'ஒரு ஊரில் இரண்டு ராஜா' மயிலாடுதுறை ரயில் நிலையத்தில் நடந்தது. இது ஒரு பாடல் காட்சி. விமல், சூரி, பிரியா மூவரும் நடித்தனர். சுமார் ஒரு லட்சம் மக்கள் வேடிக்கை பார்க்கக் கூடிவிட்டனர். படப்பிடிப்பை தொடரமுடியாத, அளவுக்கு கூச்சல். உடனே பிரியா ஆனந்த் 'கேரவனு'க்குள் செல்ல முயன்றார். சிலர் அவரை மறித்து, கையைப் பிடித்து இழுத்தனர். எப்படியோ ஒரு வழியாக படப் பிடிப்பை முடித்தனர்.



## 'வடகறி' தமிழ்படத்தில் சன்னி லியோன்!

நீலப் படங்களில் நடித்துப் பிரபலமானவர் சன்னி லியோன். இவரது நூற்றுக்கு மேலான நீலப்படங்கள் இணையத்தில் பிரபலமாக உள்ளது. தமிழில் 'வடகறி' படத்தில் குத்துப் பாடலுக்கு கவர்ச்சி நடனமாடுகிறார். ஜெய்-சுவாதி நடிக்கும் இப்படம் வேகமாகத் தயாராகி வருகிறது. மும்பை கலை நிகழ்ச்சிகளில் கலக்குகலக்கி வரும் இவர் தமிழ்நாட்டில் கலக்கப்போகும் நாள் வெகுதூரத்தில் இல்லை.



## சிம்புவுடன் த்ரிஷா!

மீண்டும் சிம்புவுக்கு காதல் வந்துவிட்டது என்று நினைத்துவிடாதீர்கள்! 'விண்ணைத் தாண்டி வருவாயா' படத்தின் மூலம் அதிகம் பேசப்பட்ட ஜோடி சிம்பு-த்ரிஷா. இப்போது பாண்டிராஜ் இயக்கத்தில் நயன்தாராவுடன் நடித்துக் கொண்டிருக்கிறார் சிம்பு. படம் முடியும்போது, நயனைத் திருமணம் செய்யப்போவதாக சிம்பு அறிவித்தாலும் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை.

செல்வராகவன் இயக்கும் படத்தில்தான் சிம்புவுடன் ஜோடி சேர்கிறார் த்ரிஷா!

## எப்படியான கணவன் எனக்கு வேண்டும்?




நடிகை, பாடகி, மாடல் எனப் பலவகைகளில் திரையுலகுடன் நெருக்கமாக இருக்கும் ஆண்ட்ரியா, அவ்வப்போது கிசுகிசுவுக்கும் நெருக்கமாகிவிடுவார். ஆண்ட்ரியாவிற்கு அனிருத் அடித்த லிப்-டு-லிப் கிஸ்ஸிலிருந்து, சமீபத்தில் ஃபஹத்ஃபைசல் அடித்த கிஸ் வரை அனைத்தும் பேசப்பட்ட சங்கதிகள்.

'எந்த மாதிரிக் கணவன் வரவேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்கள்?' என்று ஆண்ட்ரியாவிடம் கேட்டபோது, "எனக்குக் கணவனாக வரப்போகிறவர் லண்டனில் செட்டில் ஆகிவிட்டவராக இருக்க வேண்டும். திருமணத்துக்குப் பிறகு நான் அவரோடு அங்கேயே இருந்துவிடுவேன்" என்று கூறியுள்ளார்.



## எத்தனை நாளைக்கு நல்லவளாக நடிப்பது?

தமன்னாவுக்கு வில்லி வேடத்தில் நடிக்க ஆசை வந்துள்ளதாம்! அஜீத், விஜய், தனுஷ், கார்த்தி, சூர்யா என்று கோலிவுட்டின் முன்னணி ஹீரோக்களுடன் ஜோடி சேர்ந்து விட்டார் தமன்னா. இடையே காணாமல் போயிருந்த தமன்னாவுக்கு அஜீத்தின் 'வீரம்' ஒரு பெரிய பிரேக்காக அமைந்தது. இதையடுத்து அம்மணிக்கு வாய்ப்புகள் வந்து குவிகிறது. "நல்லவளாக நடித்து, நடித்து போரடிக்கிறது. ஏதாவது வில்லத்தனம் உள்ள பாத்திரத்தில், நடிக்க ஆசையாக உள்ளது" என்று டைரக்டர்களிடம் சொல்கிறார். ஏன்தான் இப்படி தமன்னாவுக்கு ஆசை வந்ததோ?



## ரஜினிக்குப் பதில் அஜீத்!

ரஜினிகாந்துக்காக கே.வி.ஆனந்த் தயார் செய்த கதையில் இப்போது அஜீத் நடிக்கப் போகிறார்! ரஜினியின் அடுத்த படம் என்ன என்ற கேள்வி கடந்த மூன்று ஆண்டுகளாக கேட்கப்பட்டு வருகிறது. ஷங்கர், கே.வி.ஆனந்த், கே.எஸ்.ரவிக்குமார் என்று சில டைரக்டர்களின் படங்களில் நடிப்பார் என்றெல்லாம் அவ்வப்போது பேசப்பட்டது. ரஜினி மவுனம் சாதித்தார். ஆனால், மூவரிடமும் கதையை கேட்டிருப்பது மட்டும் உண்மை. கே.வி.ஆனந்த், ரஜினியை நம்பி ஏமாந்து கொண்டிருக்காமல், அஜீத்தை வைத்து படம் எடுக்க இப்போது முடிவு செய்துவிட்டார்.

## ஸ்ரேயா, ரீமாசென் வெறியாட்டம்!



நடிகைகள் ஸ்ரேயாவும், ரீமாசென்னும் வாலிபரோடு வெறியாட்டம் ஆடியுள்ளனர். சமீபத்தில், மும்பை லோக்கல் சனல் ஒன்றில் இவர்கள் அடித்த கூத்து வெளியாகியுள்ளது. இளம் நடிகைகள் சிலர் நடத்திய ரகசியப் பார்ட்டியில், போதை தலைக்கேறி வாலிபர் ஒருவர் சட்டையைக் கிழித்துள்ளனர். இதில், ரீமாசென், ஸ்ரேயா இருவரும் அவ்வாலிபரின் சட்டையைக் கிழிப்பது போன்ற படங்களை வெளியிட்டுள்ளது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. போதை தலைக்கு ஏறியதில், நாய்களை விடக் கொடூரமாக அந்த இளைஞரின் சட்டையைக் கிழித்து, நகங்களால் கீறியிருப்பதாகவும் தகவல் வெளிவந்துள்ளது.

## நடிகை நக்மா போட்டி!



தமிழ் சினிமாவில் ஒரு காலத்தில் சக்கை போடுபோட்ட நடிகை நக்மா, உத்தரப் பிரதேசம் மீரட் தொகுதியில் காங்கிரஸ் சார்பில் லோக்சபா தேர்தலில் போட்டியிடுகிறார். சூர்யாவின் காதல் மனைவி ஜோதிகாவின் அக்காவான இவர் சரத்குமாரின் 'அன்பு'க்குரியவராகச் சில காலம் வாழ்ந்தவர்.



# உணவே மருந்து!

"உணவை உணவாக்கிக் கொள்வதும், உணவை மருந்தாக்கிக் கொள்வதும் அதே உணவை விஷமாக்கிக் கொள்வதும் எங்கள் கையில்தான் உள்ளது. சரியான அளவு உணவு, சரியான நேரம், உணவு உண்ணவேண்டும். சமைத்த உணவை உண்டு சந்தோஷமாக வாழ்வோம்!"

## ஹோமியோபதி வைத்திய நிபுணர் ஆர்.தியாகராஜன் பேசுகிறார்

**கா**லை உணவை நிறைய மக்கள் தவிர்க்கின்றனர். இதனால் 'டயாபட்டிக்ஸ்' அளவு குறைந்து அதிகமான பசியை ஏற்படுத்துகிறது. எண்ணெய்யில் செய்யப்பட்ட உணவுப் பொருட்கள், FAST FOOD போன்றவற்றில் தேவையில்லாத கொழுப்புகள் அதிகமாக உள்ளன. இது உடல் நலத்தைக் கெடுக்கிறது. நொறுக்குத் தீனிகள் உண்ண ஆசை வரும் நேரத்தில் பழங்களைச் சாப்பிடுங்கள். ஊட்டச் சத்துக்கள் மற்றும் நார்ச்சத்துக்கள் பழங்களில் அதிகமாக உள்ளது. இது உடலிலுள்ள சர்க்கரையைச் சரியான அளவில் வைத்து, செரிமானத்தையும் சீர்பட நடாத்தும். சத்துள்ள உணவுகளை சாப்பிடுவது உடலுக்கு நல்லது. பரபரவென இருக்கும் இன்றைய நவீன உலகில் மன ரீதியான அழுத்தத்திற்கு பலரும் உள்ளாகின்றனர். அதனால் அதிகமாக உண்ணத் தூண்டும். இதனால், உடல் எடை அதிகமாக அதிகரித்து, உங்கள் உடலிலுள்ள சர்க்கரை அளவு அதிகரிக்கும். இதனாலும் 'டயாபட்டிக்ஸ்' ஏற்பட வாய்ப்பு உள்ளது.

**இ**ருநூறு ஆண்டுகளுக்கு முன் ஜெர்மனியர் ஒருவரின் கண்டுபிடிப்பான ஹோமியோபதிக்கு இன்று உலக நாடுகள் பலவற்றில் பெருமை சேர்த்துக் கொண்டிருக்கிறார் டாக்டர் ஆர்.தியாகராஜன்.

ஆங்கில மருத்துவத்துறையில் பட்டம் பெற்று வைத்திய நிபுணராகப் பணியாற்றிக் கொண்டிருந்த ஜெர்மன் நாட்டைச் சேர்ந்த ஹனிமன், அந்த வைத்தியத்தின்மீது வெறுப்படைந்து, மொழி பெயர்ப்புகளைச் செய்து கொண்டிருந்தபோதுதான், CHINCONA என்ற மரப்பட்டையில், கசாயத்தை மலேரியா காச்சலுக்கு மருந்தாகத் தெரிந்துகொண்டார். முதலில் தானே அதனைப் பரிசோதித்துப் பார்த்தார். இப்படியே பல நோய்களுக்கான நிவாரணியை தனது மனைவி, நெருங்கிய உறவினர்களுக்குக் கொடுத்து, அவை நோய் தீர்க்கும் மருந்தாகக் கண்டுகொண்டார்.

இதுவே ஹோமியோபதி மருத்துவம் பிறந்த கதையாகும்.

இவைகளை எல்லாம் அறிந்து கொண்டபோது, தானும் ஒரு ஹோமியோபதி டாக்டராக வரவேண்டும் என்ற எண்ணம் தியாகராஜனுக்கும் பிறந்தது. நான்கரை ஆண்டுகள் ஹோமியோபதி மருத்துவ பல்கலைக்கழகத்தில் படித்து, டாக்டரானார். தமிழ்நாட்டில், திருச்சி நகரில் 'ஹோமியோ கெயர்' என்ற சிகிச்சை நிலையத்தை ஆரம்பித்து, தமிழகத்துடன் நின்றுவிடாமல், ஐரோப்பா,





லண்டன், கனடா எனப் பல்வேறு நாடுகளுக்கும் தன் பணியை வியாபித்தார். இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக அவரது 'ஹோமியோ கெயர்' லண்டனில் பலரது அபிமானத்தைப் பெற்று விளங்குகிறது.

நோய் என்று தன்னை நாடி வருபவர்களுக்கு, மருந்துகளைமட்டும் கொடுத்து, தீர்வை ஏற்படுத்துபவரல்ல. நீண்ட நேரம் பேசி, அவருக்குள்ள பிரச்சனைகளை அறிந்துகொண்டு, கூடியளவு மருந்துகளுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல், நோய் தீரக்கூடிய ஆலோசனைகளை வழங்குகிறார். இத்தனைக்கும் ஆலோசனைகள் இலவசம். இறுதியாகத்தான் ஹோமியோபதி மருந்தைக் கொடுக்கிறார்.

அவருடன் பேசிக்கொண்டிருந்த பொழுதுகள் எனக்குப் பயனுள்ளதாகவே இருந்தது. 'புதினம்' ஏப்ரல் இதழுக்கு எழுதுவதற்காக, ஒரு மணிநேரம் பேசியிருப்பேன். அவருடைய அணுகுமுறையை எனக்குள்ளேயே ரசித்தேன்.

'உணவுதான் மிகப் பெரிய மருந்து' என்றார். பின்னர் அதற்கு அழகாக விளக்கமும் சொன்னார்:

"உணவை உணவாக்கிக் கொள்வதும், உணவை மருந்தாக்கிக் கொள்வதும், அதே உணவை விஷமாக்கிக் கொள்வதும் எங்கள் கையில்தான் உள்ளது. எப்படிப்பட்ட உணவுகள் எங்களுக்கு நல்லதாக இருக்கும்? எது நோயை ஏற்படுத்தும் என்பவற்றை நாம் முதலில் தெரிந்துகொள்வது நல்லது.



**"QUIT THE CANE KICK THE BUCKET"**

சமீபத்தில், அதிர்ச்சியான இந்தத் தலையங்கங்கள் லண்டன் ஆங்கில நாளேட்டில் வெளியாகியிருந்தன. இவை எமது உணவு பழக்கங்களைப் பற்றியவை. பக்கட்டுகளில் அடைக்கப்பட்டு, பதப்படுத்தப்பட்ட உணவுகள் எவ்வளவு தூரம் கெடுதல் விளைவிக்கின்றன என்பதைப்பற்றி எச்சரித்து இருந்தன. பெரிய கடைகளில் விற்கப்படுகிற இந்த FAST FOODகள், நிறைய 'கெமிக்கல்', கலர் சேர்க்கப்படுகின்றன. இறைச்சி, கோலா போன்றவைகளில் எல்லாம் கூடுதல் கலரிகள். உப்பு அதிகமாகச் சேர்க்கப்பட்டும், பாதுகாப்பு அற்றவையான விஷயங்களும் சேர்ந்து உள்ளதால், நமது உடல் இவற்றை ஏற்றுக்கொள்ள முடியாத நிலைக்குத் தள்ளப்படுகிறது. நச்சுப் பொருட்கள் நம் உடலில் 'ஓவர் லோட்டாகி' விடுகிறது. இதன் விளைவு: 'ஹார்ட் அட்டாக்' ஆகி மரணமும் வந்து விடுகிறது.

தொடர்ந்து டாக்டர் தியாகராஜன் சில விளக்கங்களைத் தந்தார்.

"கூடியளவு சமைத்த உணவுகளை உடனுக்குடன் உண்ண வேண்டும். நல்ல சாப்பாடுகளைத் தேர்ந்தெடுக்க வேண்டும். உணவின் அளவு மிக மிக முக்கியம். அதேபோன்று உணவை உட்கொள்ளும் நேரமும் மிக மிக முக்கியம்.

மருத்துவக் குணமுள்ள உணவு வகைகளை உண்ண வேண்டும். தவறான உணவுகளை, தவறான நேரத்தில் உண்ணும்போது; அது விஷமாகிறது.

உலகமே மூன்றில் ஒரு பாகம் நிலமாகவும், இரண்டு பாகம் தண்ணீராகவும் இருக்கிறது. அதேபோன்றுதான் எங்கள் உடம்பும் மூன்றில் ஒரு பகுதி தண்ணீரும், ஒரு பகுதி உணவும், மிச்சம் ஒரு பகுதி வெறுமையாகவும் இருக்க வேண்டும்.

வீட்டில் சமையலுக்குப் பாவிக்கிற 'கிறைண்டர்' மெஷினை எடுத்துக்கொள்ளுங்கள். ஏதாவது ஒன்றை அரைக்கப்போகிறோமென்றால், நிறையப் போடக்கூடாது. ஒரு பகுதியை வெறுமையாக விட்டால்தான், அவை சரிப்பட அரைபடும். இதுவே மனிதனின் உடலும். நமது ஜீரண உறுப்புகள் அப்பொழுதுதான் வேலை செய்யும். செமிபாடும் ஏற்படும். இல்லாவிட்டால், செமிபாடு இல்லாமல், இட்டுமுட்டாகி, திணறி, வாந்திப் பிரச்சனை ஏற்பட்டு, குளுக்கோஸ் அளவு கூடிவிடும். இன்சுலின் சுரக்கக்கூடிய பங்கறியஸ் சுரப்பிகள் திணறி செயல் இழந்துபோய்விடும். இதனால் 'டயாபட்டிக்ஸ்' நோயும் உடலை அடிமைப்படுத்தி விடுகிறது.

அகால வேளைகளில் பலர் உணவை உட்கொள்கிறார்கள். இது சில சமயங்களில் அகால மரணத்துக்கு வலிகோலி விடுகிறது. சரியான நேரத்தில் உட்கொள்வது, சந்தோஷமான வாழ்க்கை நிலையை அளிக்கிறது.



இரவு 8 மணிக்கு எல்லாம் எங்கள் இரவு உணவை முடித்துவிட வேண்டும். காலையில், 8 மணிக்கு முன்னரும், மத்தியானம் ஒரு மணிக்கு முன்னரும் உணவை உட்கொள்ளவேண்டும். காலை உணவை ஏராளவு உண்ணலாம். மத்தியானம் அளவு வேண்டும். இரவு குறைந்தளவு வேண்டும். இரவு 8 மணிக்குப் பின்னர், தண்ணீர் ஆகாரங்கள் பரவாயில்லை. பசி வரும் வரை சாப்பிடும் பழக்கத்தை விடுத்து, நேரம் தவறாமல் உண்ணும் பழக்கமே சிறந்தது.

பசி கூடக்கூட, உண்ணுகின்ற அளவு கூடிக்கொண்டே போகும். பசி கூடக்கூட, குளுக்கோஸ் அளவு வேகமாகக் கூடும். இதனால், HYPOGLYCAEMIA ஏற்பட்டு, இரத்த சர்க்கரை அளவு குறைந்து படபடப்பும், பரபரப்பும், கோபமும் வரும். இந்த நிலை நீடித்தால், மரணம்கூட விளையலாம். பிந்திச் சாப்பிடுவது பேராபத்தை ஏற்படுத்தும். இரத்த சர்க்கரை அளவு குறைவது அறவே கூடாது. ஆளைக் காப்பாற்றுவதே கஷ்டமானது.

'டயாபட்டிக்ஸ்' நோயாளிகள் வயிற்றைக் காலியாக வைத்திருக்கக்கூடாது. அளவாக சாப்பிடலாம். பலர் காலையில் சாப்பிடாமல், ஒரு டீ, காபியோடு வேலைக்குப்போய்விடுகிறார்கள். இது கூடவே கூடாது!!

லண்டனுக்கு மூன்று அல்லது நான்கு மாதத்துக்கு ஒரு தடவை வந்து ஒரு மாதத்துக்கு மேல் தங்கி, இங்கும் ஐரோப்பாவிலும் வாழுகின்ற பலருக்கு ஆலோசனை வழங்குவதுடன், சிகிச்சையும் அளித்து வரும் டாக்டர் தியாகராஜன், யதார்த்தமான விஷயங்களை மனம் திறந்து ஆலோசனைகளாக வழங்குவதுடன், ஹோமியோபதி மருந்துகளைக் கொடுத்து, நோய்களைக் குணப்படுத்துவதில் வல்லவராக இருக்கிறார்.

சிறுசிறு விஷயங்களைக்கூடப் பக்குவமாக எடுத்துரைத்தார்.

"மருத்துவ குணங்கள் நிரம்பிய உள்ளி, இஞ்சி, மிளகு, வெந்தயம் போன்றவற்றை தொடர்ச்சியாகச் சாப்பிடுங்கள்" என்றார்.

"சரியான உணவுகளை ரசித்து, அளவாக, சரியான நேரத்தில், ருசித்து உண்டு, வாழ்வை சந்தோஷமாக வாழ்வோம்" என்று கூறிய டாக்டர், 'தலையிடி முதல், அனைத்து நோய்களுக்கும் ஹோமியோபதி மருத்துவத்தில் முறையாக, தீர்வான தீர்வு உண்டு" என்பதையும் சொல்லி வைத்தார்.

டாக்டர் தியாகராஜனுடன் இலவசமாக **02081441553** என்ற இலக்கத்தில் உங்கள் பிரச்சனைகளைப் பேசலாம்.

- ஈ.கே.ஆர்.


டயாபட்டிஸ்
ஹோமியோபதி மருத்துவம்
+
உங்கள் ஒத்துழைப்பு
100% தீர்வு
டயாபட்டிஸ் நோயாளிகள் ஏற்கனவே உட்கொள்ளும் ஆங்கில மருந்துகளுடன் ஹோமியோபதி மருந்துகளையும் உட்கொண்டால் கண்பாதிப்பு, தோல் மற்றும் பிறப்பு உறுப்பு அரிப்பு, நரம்புகள் பாதிப்பு, ஆண்மை குறைபாடு, கிட்னி பாதிப்பு போன்றவைகளை தவிர்க்கலாம்.
உயர்தர மருத்துவம் ▪ பாதுகாப்பான மருந்துகள் ▪ விரைவான சேவை
சிறப்பு சிகிச்சைகள்
உயர் இரத்த அழுத்தம் (B.P/Hyper Tension)
கொலஸ்ட்ரால் (Cholesterol)
சிறுநீரக கோளாறுகள் (Kidney Diseases)
மூட்டு வலி (Arthritis)
தோல் வியாதிகள் (Skin Diseases)
ஹார்மோன் பிரச்சனைகள் (Hormone Disorders)
மாதவிடாய் கோளாறுகள் (Menses Disorders)
செக்ஸ் பிரச்சனைகள் (Sex Disorders)
குழந்தையின்மை (Insertility)
இலவச மருத்துவ ஆலோசனைக்கு
0208 144 1553
HOMOEO CARE
30 வருட சிறந்த அனுபவம் மற்றும் நிபுணத்துவம்
போன்: 0208 144 1553
வெப்சைட்: www.homoeocare.com
இமெயில்: homoeocare@rediffmail.com

# STOP HAIR LOSS
*& Grow*

SPECIAL OFFER
£ 33.99

For Men and Woman





**Amazon Organic Shampoo**

- Produced using special amazon and ayurvedic herbs.
- Reduces hair loss
- Prevent premature grey hair
- Promotes Smooth and silky hair

**The ERVAMATIN HAIR LOTION™**

The ERVAMATIN HAIR LOTION provides effective and fast therapy for hair loss and its treatment ensures excellent therapeutic results. Recommended as a treatment for hair loss, hair regeneration, dandruff, alopecia, baldness, fragile and dry hair.

Amazon Healthcare.co.uk

Wholesale Inquiries
Call Sri (0) 7 832 769 522

www.amazonhealthcare.co.uk
Call: (0) 1 494 630 911



## A-Lanka Travel Ltd
*We make it easy to take it easy*

**171 Tooting High Street, Tooting, London SW17 0SZ**
**020 8672 5551, 020 8672 2010**

வாரத்தில் 7 நாட்களும் எமது முழுமையான சேவை

We Serve all 7 Days in a week

உலகின் எப்பாகத்திற்கும் நியாயமான விலையில் விமானச் சீட்டுக்களை உடன் பெற்றிட நம்பிக்கையான தமிழர் ஸ்தாபனம்

For **Special Family Discount and Emergency Ticket** Only.
Please Contact
Wimal on 07956 206 709

உங்கள் சகல பிரயாணத் தேவைகளுக்கும் அழையுங்கள்...

020 8672 5551
020 8672 2010

Worldwide Travel Agent

Special Rates for
(Subject to availability)
Colombo £210 + tax,
Madras £235 + tax,
(with British Airways)
Canada £?? + tax,
(with Sri Lankan Airlines )

For special offers please listen to Sooriyoothayam Radio on 1035MW
Mon - Fri 10 to 11 pm

Indian Visa services available

அவசர உடன் டிக்கட்களுக்கு
அழையுங்கள் : 07956 206 709
விமல் / விஜி 07957 121 696
Wimal / Viji

Email: wimal@a-lankatravel.co.uk | Web: www.a-lankatravel.co.uk



**24 Hour Emergency Crime & Immigration**
**Adikalamuthu Ilanchelian**
**solicitor & Commissioners for Oaths**

# 07939 474 342

- Immigrations Related
- Applications and Appeals
- Immigration
- EEA Law
- Entry Clearance
- Human Right claims
- Asylum Claim
- British Citizenship and Nationality
- Detention and Deportation
- Judicial review







## MALIK & MALIK Solicitors
234-236 High Road, London NW10 2NX
Adaikalamuthu Ilanchelian
SOLICITOR

Tel : 0208 830 3050 / 07939 474 342





ஸ்ரீ சக்தி பீடம்

இலண்டன் ரூட்டிங்
அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன்
தேவஸ்தானம்

நூதனப் பிரதிஷ்டா
மஹா கும்பாபிஷேக குடமுழுக்கு பெருஞ்சாந்தி பெருவிழா

31.03.2014 திங்கட்கிழமை காலை 09.30மணி முதல் 10.30 மணி வரை
30.03.2014 ஞாயிற்றுக்கிழமை பால்காப்பு சாத்துதல் காலை 9.00மணி முதல் இரவு 9.00மணி வரை

London
Tooting Arulmiku Sri Muthumaari Amman Devasthanam

**MAHA KUMBABHISHEKAM**

*31.03.2014 Monday Between 9.30 a.m to 10.30 a.m*

**1st Floor 190-194 MITCHAM ROAD, TOOTING SW17 9NJ**
**Tel: 020 8640 5900 Mob:07466 466178**

# UNLEASH
# THE POWER OF GOLD
# THARANI



**JEWELLERY & PAWNBROKERS**

**UK´S CHEAPEST GOLD LOANS STARTING FROM 2.95% PER MONTH**

# GOLD LOANS

**THE CHEAPEST GOLD LOAN PROVIDER IN WEMBLEY**

- No Need to Sell Your Valuable Jewellery, When You can Get Quick Loan and Easy Terms.
- Use Your Idle Jewellery for Productive Purpose by Availing Our loans.
- Loans Against Gold from 2.95% per Month, I´ts UK´s Lowest Rate for Gold Loans.
- Cheaper than Unauthorised Overdrafts from High Street Banks.
- No Credit Check Required.
- Simple Procedure, Loan Sanctioned in Just 5 Minutes.

## THARANI JEWELLERY

54, Ealing Road, Wembley, Middx, HA0 4TQ. U.K Tel: 020 8902 7111, 020 8902 6777

E-mail: ashni23@aol.com

# ENGINE TEC MOTORS

we offer Facilities for

- Servicing
- Clutches
- Brakes
- Overhauls
- Car Electricals
- Pre - MOT Checks
- ALL Types of Repair & Body Work
- Insurance Work Undertaken

என்ஜின் ரெக் மோட்டர்ஸ்
உங்கள் கார் திருத்த
வேலைகளுக்கு
நம்பிக்கையான நிறுவனம்

Ask for Vel or Rajan
Tel: 020 8640 8000
020 8640 1230
Mob: 0786 0226 476
07860 770 945

Email: vel@etmluk.com
rajan 339c@gmail.com
www.etmluk.com



**Unit 5,339 London Road, Mitcham, Surrey CR4 4BE**

**தமிழிலேயே பேசி உங்கள் கார் பிரச்சனையைத் தீர்த்துக் கொள்ளலாம்.**



சங்கதி - 6

# “கூடாதார் கூட்டத்தில் சேராதே!”

**கசிப்புக் குடிக்க வரும் முதலாளியைக் கண்டதும் கொல்லையில் ஒளித்து வைத்த போத்தலை எடுத்து வரும்படி தகப்பன் மகனை ஏவுவான். விரலால் தொட்டு நாக்கை நனைத்துப் பார்ப்பான் சிறுவன். மறுநாள் ஒரு மிடறு குடித்துப் பார்ப்பான். படிப்படியாக குடிக்கு அடிமையாகிவிடுவான். இரவு சிறுநீர் கழிக்க எழும்பும் சிறுமி. அந்நியனோடு நெருக்கமாகத் தன் தாயைப் பார்ப்பாள். அவள் பருவம் அடையும்போது அது தவறு என்ற எண்ணம் இன்றி அவளும் சோரம் போகிறாள்.**

ப.வை. ஜெயபாலன்



மனிதன் தான் வாழும் சூழலுக்கும் தான் சேரும் கூட்டாளிகளுக்கும் ஏற்ப நல்லவனாகவோ கெட்டவனாகவோ மாறிப்போகின்றான். “தீயாரைக் காண்பதுவும் தீதே; தியார் சொற் கேட்பதுவும் தீதே; தீயாரோடு இணங்கி இருப்பதுவும் தீதே” என்று நன்நெறியில் புலவர் ஔவையாரும் இதையே வலியுறுத்துகின்றார். ஒழுக்க நெறிமுறைகள் எங்கும் பொதுவானவை. ஆனால் கலாசார பழக்க வழக்கங்களில் உள்ள மாறுபாடுகள், சூழ்நிலைகள், சமூகங்களைப் பொறுத்தே நல்லது, தீயது எது எது என தீர்மானிக்கப்படுகின்றன.

மனித உரிமை செயற்பாட்டாளர் ஒருவரும் அவரது சிறுவயது மகளும் கிளிநொச்சி மாவட்டம் தர்மபுரம் கிராமத்தில் திட்டமிட்டு கைது செய்யப்பட்டமையும் அதுதொடர்பான



ஆர்ப்பாட்டங்களும் அண்மிய செய்தி. இச்செய்தி தர்மபுரம் கிராமத்தின் நாற்பது ஆண்டுகளுக்கு முற்பட்ட நிலைப்பாட்டின் நினைவுகளை எனக்குள் ஏற்படுத்தின. அன்நாட்களில் கசிப்பு, விபச்சாரம், அடிதடி சண்டை என்பனவற்றின் கூட்டுக்களமாக தர்மபுரம் அடையாளப்படுத்தப்பட்டிருந்தது. வடமாகாணத்தில் 1958ம் ஆண்டு கலவரத்தால் இடம்பெயர்ந்த அகதிகளுக்கு என முதன்முதலாக ஏற்படுத்தப்பட்ட அகதிகள் குடியேற்றத்திட்டம் இது. அனுராதபுரம், இரத்தினபுரி பகுதியினரே இங்கு அதிகமாக குடியேற்றப்பட்டனர். பரந்தன் சந்தியில் இருந்து முல்லைத்தீவு செல்லும் வீதியில் 8ம் கட்டை முதல் நெற்றவி ஆறு வரை நீண்ட நிலப்பரப்பு இது. புளியம்பொக்கனை, கண்டிக்குளம், கல்மடுநகர் என்பன அயல் கிராமங்கள். வீட்டு நிலத்துடன் விவசாயச் செய்கைக்கு என வழங்கப்பட்ட நிலம், உவர்த்தன்மை ஊறிவிட்டது. இதனால் வருவாய் இல்லாத நிலை, விறகு வெட்டி யாழ்ப்பாண லொறிகளுக்கு விற்பது, உடும்பு, மான், மரை, பன்றி என்று வேட்டையாடி இறைச்சியை விற்பது, கசிப்பு காய்ச்சுவது, விற்பது என தொழில்கள் மாறின. விஸ்வமடு படித்த வாலிபர் திட்டம் அருகே உதயமானது. மிளகாய் தோட்டத்தில் பெண்களுக்கு வேலைவாய்ப்பு கிடைத்தபோதிலும் ஊதியப்பற்றாக்குறை. சிறுவர்களையும் படிப்பை நிறுத்தி வேலைக்கு அழைத்துப்போகும் நிலை, விபச்சாரம் என வறுமை தர்மபுரத்தை குற்றச்செயல்கள் கூடிய கிராமமாக்கியது.

கசிப்பு குடிக்க வரும் முதலாளியைக்கண்டதும் கொல்லையில் ஒளித்து வைத்த போத்தலை எடுத்து வரும்படி தகப்பன் மகனை ஏவுவான். விரலால் தொட்டு நாக்கை நனைத்துப் பார்க்கும் சிறுவன் மறுநாள் ஒருமிடறு குடித்துப் பார்ப்பான். படிப்படியாக குடிப்பழக்கத்துக்கு அடிமையாகிவிடுவான். இரவு சிறுநீர் கழிக்க எழும்பும் சிறுமி அன்னியனோடு நெருக்கமாக தன் தாயைப் பார்ப்பாள். அவள் பருவம் அடையும்போது அது தவறு என்ற எண்ணம் இன்றி அவளும் சோரம் போகிறாள். தமயன் கெற்றுபோவான். குறிபார்த்து குருவியை வீழ்த்துவான். பின்னால் வரும் தம்பி ஓடிப்போய் குற்றுயிராக கிடக்கும் குருவியை அடித்து கொன்றுவிட்டு தூக்கிக்கொண்டு இருவருமாக அடுத்த குருவியை தேட ஆரம்பிப்பார்கள். உயிர்வதைக்கு இளவயதிலேயே நெஞ்சு தயாராகிவிடுகிறது.

விடுதலைப்போராட்டம் ஆரம்பமானது. நீதிநிர்வாகத்தை இயக்கங்கள் மேற்கொண்டன. தந்திக்கம்ப மரண தண்டனைகள் குற்றச்செயல்களுக்கான தண்டனையாகும் அளவுக்கு கட்டுப்படுத்தல்கள் இறுக்கமானது. மறுபுறத்தில் வேலைவாய்ப்பு, நியாய கூலி நிர்ணயம், கட்டாயக்கல்வி என்பன வருவாய்க்கான மாற்றுவழிகளில் அவர்களை ஈடுபடுத்தின. இராணுவக் கெடுபிடிகளால் யாழ்ப்பாணத்தில் இருந்து இடம்பெயர்ந்தவர்களும் இக்கிராமத்தையும் சுற்றுப்புறங்களையும் நிறைத்தார்கள். பல்வேறுபட்ட கலப்பு குடியிருப்புக்களும் நிலையாக தர்மபுரம் புதிய வடிவம் எடுத்தது. இன்று அது அமைதியாக ஒழுக்கம் நிறைந்த கிராமமாக ஏனைய கிராமங்களோடு நிமிர்ந்து நிற்கின்றது.

புலம்பெயர் நாடுகளில்கூட மாற்றி அமைக்கப்பட்ட ஊர்கள் இருக்கத்தான் செய்கின்றன. உதாரணத்துக்கு ஒன்று **Roundslow.** இது **Surrey** பகுதியில் **wallingten, Purley** இடையில் அமைந்துள்ள ஊர். 12 ஆண்டுகளுக்கு முன்னம்வரை இது அடையாளப்படுத்தப்பட்ட குற்றச் செயல்கள் நிறைந்த ஊராக இருந்தது. களவுகள் தொல்லைகள் காரணமாக சுற்றாடல் வாசிகள் தம்வீடுகளை விற்றுவிட்டு வேறுபகுதிக்கு குடிபெயரும் நிலையும் இருந்தது. சுமார் பன்னிரண்டு பல அடுக்கு குடியிருப்பு மாடிகளை கொண்டிருந்த அந்த நாட்களில் இங்கு வசித்த மிகப்பெரும்பான்மையினர் வேலை வாய்ப்பு அற்ற அரச கொடுப்பனவுகளில் தங்கியுள்ளவர்களாகவே இருந்தார்கள். போதைப் பொருட்பாவனை, விபச்சாரம் போன்றன அதிகரித்த ஊராக இது அடையாளப்படுத்தப்பட்டிருந்தது. பொலீஸ் வாகனங்கள் தினமும் ஒலி எழுப்பியவாறு அடிக்கடி வந்துபோகும். இதனை ஒரு மாதிரிகிராமமாக மாற்றும் நடவடிக்கைகள் ஆரம்பமாயின. அங்கு மாடிக்கட்டிடங்களாக இருந்த பழையன யாவும் இடித்துத் தள்ளப்பட்டன. குடியிருப்பாளர்கள் பல்வேறு ஊர்களுக்கும் இருப்பிட வசதிகள் வழங்கி அனுப்பப்பட்டார்கள். அடுக்குமாடிகளுக்கு பதிலாக வீட்டுத்தொகுதிகள் அமைக்கப்பட்டன. ஊர் ஒன்றுக்குத் தேவையான விளையாட்டு மைதானம், நூல்நிலையம், நீச்சல்தடாகம், தேவாலயம், பாடசாலை என அனைத்தும் உள்ளடக்கப்பட்டது. உத்தியோகஸ்தர்கள் உட்பட பல்வேறு தரப்பினரும் குடியிருப்பாளர்களாயினர். இன்று **Roundslow** ஒரு அமைதிப்பூங்காவாக திகழ்கிறது.



எம் இளைய தலைமுறையினர் பாடசாலை, விளையாட்டு மைதானம் என கூடும் இடங்களில் ஏற்படுத்திக்கொள்ளும் சிநேகிதம் நல்லதா என்கின்ற ஏக்கம் புலம்பெயர் நாட்டு பெற்றோர் மத்தியில் உள்ளது. மாற்று இனத்தவர்களுடனான கூட்டு, மனப்பயத்தையும் ஏற்படுத்துகிறது. இது தொடர்பான அறிவுரைகள் பிள்ளைகளுக்கு கசப்பை ஏற்படுத்துகின்றன. வீட்டுக்கு வீடு இது தொடர்பான வாதங்களும் பரவலாக உள்ளது. **IPhone, Face Book** போன்ற தொழில் நுட்ப முன்னேற்றங்கள் தீயனவற்றை தீயன என்று புரிந்துகொள்ள முடியாத வயதினருக்கு தவறான திசைகாட்டும் வழிகாட்டிவிடுகின்றன. ஒரு எல்லைக்குள் நின்றே பிள்ளைகளை நெறிப்படுத்த வேண்டிய சட்டக்கட்டுப்பாடு. இவற்றினிடையே நல்வழியை நாடுவோம். நாடச் செய்வோம்.

# என்ன உலகமடா?

## DOCTOR ஸ்ரீதரன்



# பம்மாத்து

இலண்டனில் கடந்த இருபது வருடங்களாக வாழும் கணக்காளர் பார்த்திபனிடம் பட்டம்-பதவி-பணம் -வீடு-வாகனம்-வசதிகள்-எல்லாமே தேவைக்கதிகமாக இருந்தும்-அவருக்கு வாழ்க்கையில் ஒரு பெரும் குறை.

தனது நண்பர்களின் - சுற்றத்தவர்களின் கவனம் தன் பக்கம் திரும்பும்படி தான் இதுவரை இலண்டனில் எதுவும் செய்யவில்லையே என்பதே அந்த குறை. அவரது நெருங்கிய நண்பர்கள் எல்லோரும் ஏதேதோவெல்லாம் செய்கிறார்கள். குடத்தினுள் எரியும் விளக்கு போலல்லாது அவர்கள் எல்லோரும் ஏதோ ஒரு விடயத்தில் மிகவும் பிரபலமாக இருக்கிறார்கள். எந்த விதத்தில் அவர்களுக்கு நான் குறைந்து போனேன்?

எதை எதையெல்லாமோ நினைத்து - எப்படி எப்படியெல்லாமோ முயற்சி செய்து களைத்துவிட்ட பார்த்திபனுக்கு கடைசியாக தோன்றிய யோசனை:

பத்து வயதுடைய என் மூத்த மகள் காவேரிக்கு வயலின் கற்பித்து இலண்டனே கலங்கும்படி ஒரு மாபெரும் அரங்கேற்றம் செய்ய வேண்டும்.

அரங்கேற்றம் செய்வதற்கு எட்டு வருடங்கள் தேவை என்றார் வயலின் ஆசிரியை. கணக்காளருக்கு அது புரியவில்லை. இருப்பதோ ஏழு ஸ்வரங்கள்! அதற்கு எதற்கு எட்டு வருடங்கள்?

யாருக்கு புரியும் அவருடைய அவசரம்?

எட்டு ஐந்தாகியது - நீண்ட பேரத்தின் பின்னர்!

அரங்கேற்ற திகதி நியமித்த பின்பு வகுப்புகள் ஆரம்பமாயின!

பாவம் - பலிக்கடா காவேரி! வாழ்க்கையில் அவள் அதிகமாக வெறுத்த விடயம் இந்த வயலின் வகுப்புகள்!


நிர்ப்பந்தங்கள் - நிபந்தனைகள் - சலுகைகள் - பரிசுகள் காவேரிக்கு வேறு வழியில்லை. பாவம்! பத்து வயது சிறுமி அவள்.

மிகமிக விமரிசையாக நடைபெற்ற வயலின் அரங்கேற்றத்தின்போது- இந்தியாவிலிருந்து வருகை தந்திருந்த ஒரு பிரமுகர் பேசினார்:

புலம் பெயர்ந்து வாழும் இலங்கைத் தமிழர்கள் கர்நாடக இசைக்கு கொடுக்கும் மதிப்பையும் முக்கியத்துவத்தையும் பார்த்து நான் மெய் சிலிர்த்துப் போகிறேன்.

இலங்கை சபையோர்களின் கரகோஷம் வானை பிளக்கிறது

அரோகரா! ✧



# சமூகவியல்

முன்னொரு காலத்தில் -காட்டில் -எந்தவிதக் கட்டுப்பாடுகளுமின்றி- நிர்வாணமாக திரிந்து - உண்டு- உறங்கி- இனத்தைப் பெருக்கி - தன் இச்சைப்படி வாழ்ந்து வந்த மனித இனம் - காலப்போக்கில்- மனைவி - திருமணம் - வீடு - குடும்பம் - சமூகம் - கலாச்சாரம் -இப்படி எத்தனை எத்தனையோ கட்டுப்பாடுகளை தங்களுக்குள் உருவாக்கி-இன்று இருக்கும் நாகரீக நிலையை அடைந்திருக்கிறது.

இது நான் சிறுவனாக இருந்தபோது-இந்த நூற்றாண்டில் நான் படித்த சமூகவியல் !

இதைப்படித்தபோது நான் நினைத்தேன்:

ஓ! மனித இனம்தான் எவ்வளவு காட்டுமிராண்டித்தனமாக வாழ்ந்திருக்கிறது !

முன்னொரு காலத்தில்-எத்தனை எத்தனையோ கட்டுப்பாடுகளை தங்களுக்குத்தாங்களே உருவாக்கியமனித இனம்-திருமணம்என்னும் ஒரு வழக்கத்தையும் உருவாக்கி இருந்தது. அரசாங்கங்களினால் உருவாக்கப்பட்ட திருமணச் சட்டம் இவனுக்கு அவளென்றும்- அவளுக்கு இவனென்றும் பிரகடனம் செய்து-அவர்களுக்கு கணவன் மனைவி என்ற பெயரை வழங்கியது. அதன் பின்-கணவனும் மனைவியும்-பிடித்ததோ- பிடிக்கவில்லையோ- ஒருவரை ஒருவர் பிரியாமல் ஆயுள் முழுவதும் சேர்ந்தே வாழ்ந்தார்கள். அவர்கள் பெற்ற பிள்ளைக்கு பெயர் வைத்து- அதன் அப்பா யார்- அம்மா யார்- என்று அரசாங்கத்திற்கு பிரகடனம் செய்தார்கள். அவர்கள் பெற்ற பிள்ளையை அவர்களே வளர்த்தார்கள். இதற்காக அவர்கள் கஷ்டப்பட்டு உழைத்தார்கள். பணம் சம்பாதித்தார்கள்.

இது யாரோ-ஏதோ ஒரு நூற்றாண்டில்-படிக்கப் போகும் சமூகவியல்.

அப்பொழுது அவர்கள் நினைப்பார்கள்:

ஓ! மனித இனம்தான் எவ்வளவு காட்டுமிராண்டித்தனமாக வாழ்ந்திருக்கிறது! ✧



# பிரயாணிகள்

கடந்த பத்து வருடங்களாக இலண்டனில் வசிக்கும் தமிழ்க்கலைகளின் பாதுகாவலர் - தமிழ்க்கலாச்சாரத்தின் தந்தை - உயர்திரு மகாலிங்கத்தின் வீட்டிற்கு அவரின் தூரத்து உறவினர் ஒருவர் ஒரு குறுகிய விடுமுறையைக் கழிப்பதற்காக தற்காலிகமாக இலங்கையிலிருந்து வந்திருக்கிறார்.

ஒருநாள் ஏதேதோ பொருட்களை எல்லாம் கடையிலிருந்து வாங்கி வந்த உறவினருக்கு மகாலிங்கம் கூறுகிறார்:

தயவு செய்து நான் சொல்வதற்காக கோவிக்க வேண்டாம். மிகவும் அவசியம் என்று பட்டால் ஒழிய தேவையற்ற சாமான்களை அநாவசியமாக வாங்கிச் சேர்க்க வேண்டாம்.

இலண்டனில் நீங்கள் ஒரு சில மாதங்கள் மட்டுமே தங்கப் போகிறீர்கள் - நிரந்தரமாகவல்ல. நீங்கள் போகும்போதுகூட முப்பது கிலோவிற்கு மேல் விமானத்தில் கொண்டு போக முடியாது. பணத்தைச் செலவழித்து பொருட்களை வாங்கிச் சேர்த்தபின் அவற்றை இங்கு விட்டுவிட்டுப் போவதில் எந்தவித அர்த்தமுமில்லை.

மகாலிங்கம் கூறுவதை கவனமாக கேட்ட அவரது செல்லப்பிராணியான காம்போதி என்னும் நாய் உரத்த குரலில் வாய் விட்டுச் சிரித்தது.

அந்தச் சிரிப்பின் காரணம் புரியாது அதற்கு விளக்கம் கேட்டது அவரது செல்லப்பிராணியான கல்யாணி என்னும் பூனை.

காம்போதி சிரித்துக்கொண்டே கூறியது:

இப்படிப்பட்ட முட்டாள்த்தனமான பேச்சை என் வாழ்க்கையில் நான் கேட்டதேயில்லை. உறவினரின் தற்காலிக விஜயத்தைப்பற்றி பேசும் இவரே இந்தப் பூமிக்கு ஒரு தற்காலிக விஜயம்! இவர் மட்டும் என்ன இங்கு நிரந்தரமாகவா தங்கப்போகிறார்? விமானத்தில் சரி முப்பது கிலோ அநுமதிக்கிறார்கள். ஆனால் இவர் பூமியை விட்டு போகும் போது இவர் கட்டிய கோவணத்தை கூட இவரால் கொண்டு போக முடியாது. ஊருக்கு உபதேசம் செய்யும் இவர் எதற்காக இலண்டனில் இரண்டு வீடுகள் வைத்திருக்கிறார்? எதற்காக இவரின் வீடு நிறைய இவ்வளவு பொருட்கள்?

இங்கிலாந்தில் வசிப்பதற்கு இவருக்கு நிரந்தர வதிவிட உரிமை கொடுத்தவுடன் எதற்காக அதை நண்பர்களுடன் கொண்டாடினார் ? நிரந்தர வதிவிடம் என்ன இந்தப் பூமியில் வாழ்வதற்கா இவருக்கு கொடுத்தார்கள் அதை கொண்டாடுவதற்கு? எதற்காக இந்த வயதிலும் பணத்திற்கு ஆசைப்பட்டு ஏதேதோ குறளி வித்தைகள் காட்டித் திரிகிறார்?

நமக்கு இருக்கும் அறிவுகூட இந்த மனிதர்களுக்கு இல்லை. பிறந்ததிலிருந்து இறக்கும்வரை பேய்கள்போல அலைந்து எதை எதையெல்லாமோ சேர்க்கிறார்கள் - போகும்போது கோவணத்திற்குள் மறைத்து கொண்டு போகலாம் என்பதுபோல! ✧

ராஜகோபால்




# 'விநாயக மிஷன்' சாம்ராஜ்யத்தை உருவாக்கிய மாமனிதர்!

**சேலத்தில், ஒருகாலத்தில் கேட்பாரற்றுக் கிடந்த அரியனூர் மண்ணை விநாயக மிஷன் சாம்ராஜ்யமாக்கிய அந்த மாமனிதர், அங்கேயே அடக்கம் செய்யப்பட்டு, சமாதி எழுப்பப்பட்டு பூஜிக்கப்படுகிறார். ஆயிரமாயிரமென இறுதி யாத்திரையில் அஞ்சலி செலுத்தினார்கள். "என்ன செய்வது என்றே தெரியவில்லை ராஜகோபால். அதைச் செய்வதா? இதைச் செய்வதா எதைக் கவனிப்பது? அத்தனை வேலைகளை அப்பா தனியாச் செய்திருக்கிறார்"- கனத்த இதயத்தோடு, தந்தையின் பிரிவைத் தாங்கமுடியாது, அவர் புதல்வர் டாக்டர் கணேசன் அழுதபடியே சொன்ன வார்த்தைகள், என்னையும் அழவைத்துவிட்டது.**

**முடிவை எடுப்பதிலும், அதனைச் செயல்படுத்துவதிலும் 'விநாயக மிஷன்' சேர்மன் டாக்டர் ஏ.சண்முகசுந்தரம் மிகப் பெரும் சாணக்கியனாக வாழ்ந்து இருக்கிறார். அவர் வெற்றியின் ரகசியமும் அதுவே.**

கல்வி, மருத்துவம் போன்ற துறைகளில், மாபெரும் சாம்ராஜ்யத்தையே தமிழகத்தில் உருவாக்கி, சக்கரவர்த்தி போன்று பவனி வந்த அந்த மாமனிதர், மறைந்து விட்டார்! தமிழ் நாட்டில், சேலம் நகரிலிருந்து சில மைல்கள் தூரத்திலுள்ள அரியலூரில், வாஷிங்டன் 'வெள்ளை மாளிகை' போன்ற பல நூறு ஏக்கருக்குள் அமைந்த 'விநாயக மிஷன்' என்ற கட்டடத்துக்குள்தான், அவர் அரசாட்சி நடந்துகொண்டிருந்தது.

1981ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை அவரது கடின உழைப்பில் உருவான இருபத்தைந்து பல்கலைக்கழகங்கள், சில ஆஸ்பத்திரிகளுடன், சேலம் அரியலூரில் 200கோடி செலவில் நிறுவப்பட்ட பல மாடிக்கட்டடங்களாக, நவீன வசதிகளைக் கொண்ட விநாயக மிஷன் ஆஸ்பத்திரி ஆகியன தலை நிமிர்ந்து நிற்கின்றன.

பொள்ளாச்சி திருத்தங்கம்பாளையம் என்ற சிற்றூரில் பிறந்த இவர், சாதாரண மனிதராகத்தான் சேலம் வந்தார். அவர் நெஞ்சத்தில் அலைமோதிய இலட்சிய வெறி, இலக்கை நோக்கிய பயணம் வேகமாகச் செயல்பட்டது. அவர் சாதித்தார்!

கடந்த 25ம் திகதி, லண்டனை இரவு நெருங்கிக் கொண்டிருந்த பொழுதில், டாக்டர ஏ.சண்முகரத்தினம் உயிர் நீத்த துயரச் செய்தியை சில நிமிட நேரங்களிலேயே சென்னையிலிருந்து


சேர்மனும், மனைவியும்

அவருடைய புதல்வர் டாக்டர் ஏ.எஸ்.கணேசனின் செயலர் பிரபுராம் எனக்குத் தொலைபேசி மூலம் தெரிவித்தபோது, சில விநாடிகள் அதிர்ந்து விட்டேன்!

சேர்மனின் மனைவி அன்னபூரணி, அவரது பிள்ளைகள் டத்தோ சரவணன், டாக்டர் கணேசன், சுமதி, அருணாதேவி, மருமக்கள் காமாட்சி, அனுராதா, சதீஷ், சந்திரசேகர், பேரப்பிள்ளைகள், உற்றம் அனைவருமே சூழ்ந்திருந்தபோதுதான் சேலத்தில் அவர் நிறுவிய விநாயக விஷன் ஆஸ்பத்திரியில் உயிர் பிரிந்தது!

தன் குடும்பத்தை உயிராக நேசித்ததைத், தன் வாழ்வின் முடிவிலும் உண்மையாக்கி இறைவனடி சேர்ந்திருக்கிறார்!

ஒவ்வொரு ஆண்டும் தமிழ்நாட்டுக்கு, ஆண்டு தவறாது கடந்த பத்து ஆண்டுகளுக்கு மேலாக எனது மனைவியுடன் நீண்ட விடுமுறையில் போய் வருவேன். அவருடைய மகனும், விநாயக மிஷன் நிறுவனத்தின் துணைத் தலைவருமான டாக்டர் கணேசனின் விருந்தினராக சென்னையில் தங்குவோம். அப்போதெல்லாம் சேலத்துக்குச் சென்று குறைந்தது மூன்று நாளாவது அங்கு தங்கி, டாக்டர் சண்முகசுந்தரம் அவர்களுடன் நெருங்கிப் பழகுகின்ற வாய்ப்பு எங்களுக்கு கிடைத்தது பெரும் பாக்கியம்!

"அங்கு போங்கள். இங்கு போங்கள்" என்று அன்போடு எங்களை அரவணைத்த பெருந் தன்மைகளை நினைத்துப் பார்க்கிறேன். ஒரு உதவியாளர் மூலம் எங்களுக்குத் தங்குவது முதல், சகல வசதிகளையும் செய்து தருவார். "லண்டனில் நீங்கள்தான் விநாயக மிஷனின் பிரதிநிதி. அங்கு ஒரு விநாயக மிஷன் மண்டபம் கட்ட வேண்டும். இடம் பாருங்கள்" என்று அவர் அடிக்கடி என்னிடம் சொன்னது நிறைவேறவில்லை என்பது கவலைதான். அதைவிட அவர் பிரிவு என்னை மிகவும் பாதித்துவிட்டது.

தன் வாழ்வில் அவர் தன் மனைவி அன்னபூரணியே அனைத்து முன்னேற்றத்துக்கும் காரணமாக இருந்தார் என்று மனம் விட்டுச்


இளைய புதல்வர் டாக்டர் கணேசன்


மூத்த புதல்வர் டத்தோ சரவணன்

சொல்லியிருக்கிறார். அவர்மீது உயிரையே வைத்திருந்தார். எப்படித்தான் இந்தப் பிரிவைத் தாங்கிக் கொள்வாரோ?

சேலத்தில் கிருபானந்த வாரியார் மருத்துவப் பல்கலைக் கழகம், என்ஜினியரிங் கல்லூரி, சங்கராச்சாரியார் பல் வைத்தியக் கல்லூரி, ஹோமியோபதி பல்கலைக் கழகம், நர்சிங் பயிற்சிக் கல்லூரி என்றும், காரைக்கால், பாண்டிச்சேரி வைத்தியக் கல்லூரி, அறுபடை என்ஜினியரிங் பல்கலைக்கழகம், சென்னையில் பல்கலைக்கழகங்கள் என்று இயங்கிக் கொண்டிருக்கின்றன.

இவற்றின் பல பல்கலைக்கழகங்களுக்குச் சென்று நீண்ட பொழுதுகளை கழித்திருக்கிறேன். சேலத்திலுள்ள பிரமாண்டமான விநாயக மிஷன் ஆஸ்பத்திரிஙய சுற்றிப் பார்ப்பதற்கு எழில் என்ற வைத்திய சுப்பிரிண்டனை ஏற்பாடு செய்தார். நான்கு ஆப்ரேஷன் தியேட்டர்கள், பல தரத்திலுள்ள வார்ட்டுகள், விரிவுரை மண்டபங்கள் எல்லாவற்றையும் பார்த்து முடிய சில மணி நேரங்கள் ஆகினாலும் அவற்றைப் பார்த்து மெய் சிலிர்த்து விடடேன்.

மலேஷியாவில், பினாங்கில் பல்வைத்திய

பல்கலைக்கழகம் ஒன்றையும் நடத்தி வருகிறது விநாயக மிஷன் நிறுவனம். இந்த நிறுவனத்துக்கு பொறுப்பாக இருந்து வெற்றிகரமாக நடத்துபவர் அவரது மூத்த மகன் டத்தோ சரவணன்.

1008 சிவலிங்கங்களுக்கு கோயில் கட்டியவர் தமிழ் நாட்டில் இவர் ஒருவராகத்தான் இருக்க முடியும். முதல் தடவை எங்களை அங்கு, தானே அழைத்துச் சென்று உரிய கௌரவம்


1008 LINGAM TEMPLE

அளித்த பெரிய மனிதரின் மனசு பெரிதுதான். விநாயக மிஷன் தலைமைக் கட்டடம் அமைந்த பின் பகுதியில் மலைப்பாங்கான பிரதேசத்தில் எத்தனை, எத்தனை கோயில்களைக் கட்டி வைத்திருக்கிறார்?

கடந்த டிசம்பர் விடுமுறைக்கு தமிழ்நாடு சென்றபோது, "அப்பாவுக்கு இப்போது எப்படிச் சுகம்? அவரைப் போய்ப் பார்க்க வேண்டும்" என்று கணேசன் வீட்டில் சாப்பிட்டுக் கொண்டிருந்தபோது கேட்டேன்.

சேர்மனுடன் பேசிவிட்டு வழக்கமாக சேலம் போவதுதான் வழக்கம். இந்த முறை நான் அப்படி மகனிடம் கேட்டதற்குக் காரணம் உண்டு. சில மாதங்களுக்கு முன் சென்னைக்குச் சென்றிருந்த சமயம் சேர்மன் சண்முகசுந்தரம் நோய்வாய்ப்பட்டு, அப்பலோ ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு, 15 நாட்கள் சிகிச்சைக்குப் பின் தேறி, சேலம் சென்றார்.

"திருச்சிக்குப் போறீங்கள்தானே. அப்போது போய் பார்க்கலாம்" என்றார் கணேசன். "நீங்கள் அவரை பார்க்கப்போகும் முதலில் எனக்குப் போன் பண்ணுங்கோ." என்று கணேசனின் மனைவி அனு கூறினார்.

திருச்சியிலிருந்து சேலத்துக்கு விநாயக மிஷன் நிறுவனம் அமைந்துள்ள இடத்துக்கு மூன்று மணி நேரத்தில் போய்விடலாம். ஹோமியோபதி டாக்டர் தியாகராஜன், அவரது மனைவி டாக்டர் மஞ்சுளா தங்களது காரில் எங்களை அழைத்துச் சென்றார்கள்.

சேர்மன் வரவேற்றார். சுகயீனத்துக்குப் பிறகு சிறிது களைப்பாக காணப்பட்டார்.


சேர்மனுடன் 'புதினம்' ஆசிரியரும் துணைவியாரும்

அன்போடு பேசினார். தங்களது கோயில்களுக்கு கூட்டிப்போகும்படி பணியாளரிடம் சொன்னார். அங்கு போய் வந்து மீண்டும் எங்களை



அழைத்தார். சிறிது நேரம் பேசினோம்.

சாப்பிடச் சொன்னார். பல தடவைகள் அந்தப் பிரமாண்டமான சாப்பாட்டு மண்டபத்தில் சாப்பிட்டிருக்கிறோம். அவர் பக்கத்தே இருந்து சாப்பிடுவார். அன்றில்லை.

"வாஜ்பாய் (முன்னாள் இந்தியப் பிரதமர்) இந்தக் கதிரையில் இருந்துதான் சாப்பிட்டார்" என்று எங்களுக்குப் பரிமாறிய அந்தப் பணியாளர் நான் அமர்ந்து சாப்பிட்ட கதிரையைக் காட்டினார்.

சாப்பிட்ட பின்னர் சேர்மன் எங்களைப் பார்க்க விரும்புவதாகச்சொன்னதால் போனோம். கட்டிலில் அமர்ந்திருந்தார். நானும் மனைவியும் அவர் பக்கத்தே அமர்ந்து கொண்டோம். ஆனால் அதுதான் எங்கள் கடைசிச் சந்திப்பு என்று அறிந்திருக்கவில்லை. "எனது '72வது' பிறந்த தினம் வருகிறது. நீங்கள் வரவேண்டும்" என்று சொன்னார். பிரிய மனமில்லாமல் விடைபெற்றேன்.

தமிழ் நாட்டில் அவரைப் போன்று இனி ஒருவர் பிறக்கப் போவதில்லை. நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகம் என்றான் கவிஞன். ஆனால் இவரோ பல்கலைக் கழகங்களை தமிழ்நாடெங்கும் உருவாக்கி பெருமை சேர்த்திருக்கிறார். அவர் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கிறோம்




### சபாஷ் புதினம்!

'புதினம்' மார்ச் இதழ் படித்து அகமகிழ்ந்தேன். எங்கள் 'கலை மாமணி' பூஷணி கல்யாணராமன் அவர்களைப் பற்றி டாக்டர் நவரத்தினம் எழுதியுள்ள நினைவுகள்... பூஷணியின் பூர்வீகம், கலைத் திறன்கள், ஆர்வம்... இத்தியாதி உள்ளடங்கிய கட்டுரை பாராட்டுக் குரியதே! சபாஷ் புதினம்!

'இளைய அப்துல்லாஹ்' எழுதியுள்ள 'சிங்களம் உண்மை பேச வில்லை' ஆர்வத்துடன் படிக்க வைத்தது. பல உண்மைகளை அப்பட்டமாக வெளியிட்டுள்ளார். 'பிள்ளைகள் மீதான பெற்றோர் களின் கல்வித் திணிப்பு' - ப.வை. ஜெயபாலன் ஆக்கம் நல்லதொரு உபயோகமான விடயம். 'என்ன உலகமடா!' - டாக்டர் ஸ்ரீதரன் நாசூக்காக, நயமுடன் வடித்துள்ளார்.

**லண்டன்: அம்பி CHAFHORLDHUNDRED**

### தலை சுற்றும் தடைகள்!

பேரறிவாளன், முருகன், சாந்தன் ஆகிய மூவரின் விடுதலைக்கு எதிராக இந்தியாவின் மத்திய அரசு தொடுக்கும் வழக்குகள் பற்றி மார்ச் 'புதினம்' இதழில் பல செய்திகள் வாசித்தறிந்தோம். இது சம்பந்தமாக எழுந்துள்ள சட்ட வியாக்கியானங்களில் எதுவுமே புரியாது தலையைப் பிய்க்கக் கொண்டிருக்கிறேன்.

இந்திய அரசியலமைப்பு வரம்புகள், ஜனாதிபதியின் அதிகாரத்தை உச்ச நீதிமன்றம் மீறலாமா? அவ்வாறு மீற முடியாது போனால், மீண்டும் மீண்டும் உச்ச நீதிமன்றத்தில் மீள் பரி சீலனை என்ற வழக்கை மத்திய அரசு எதற்காகச் சமர்ப்பிக்க வேண்டும்?

ராஜீவ் கொலை வழக்கில் குற்றவாளிகளாகக் காணப்பட்டவர் களின் தூக்குத் தண்டனையை உச்ச நீதிமன்றம் ரத்துச் செய்வதற்கு கர்நாடகத்தில் ஏற்கனவே வழங்கப்பட்ட தீர்ப்பை முன்னுதாரணமாக வைத்தே வழங்கப்பட்டுள்ளதாக அறிகிறோம். அந்த, வழக்கில் மத்திய அரசுக்கு ஏற்படாத அக்கறை, இந்த வழக்கில் ஏற்படக் காரணம் எதுவாக இருக்கும்?

ஸ்ரீபெரும்புதூரில் நிகழ்ந்த குண்டு வெடிப்பின்போது பலியானவர்கள் ராஜீவ் காந்தி உட்பட, அனைவருக்கும் ஏற்பட்ட பாதிப்புகள் காரணமாக வழங்கப்பட்ட தீர்ப்பை உச்ச நீதிமன்றம் நிராகரிக்கவில்லை. கருணை மனுமீது காட்டப்பட்ட அசாதாரண காலதாமதமே, இம்மூவரின் தூக்குத் தண்டனையை ஆயுள் தண்டனையாகக் குறைக்க வழிகோரியது, எனவே பலி யானவர்களின் குடும்பத்தினர் உச்ச நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்வது, உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை அவ மதிப்பதாகக் கருதலாமல்லவா. ஐந்து பேர் அடங்கிய நீதிபதிகளின் அமர் வில்தான் விசாரணை செய்யப்படல் வேண்டும் என்ற மனுவை மூன்று பேர் அடங்கிய உச்ச நீதிமன்றத்தில், விசாரணை ஆரம்பிக்க முன்னரே சமர்ப்பிக்கத் தவறிய சட்ட நுணுக்கம் எதுவாக இருக்கும்? நீதியின் முன்னால் எல்லோரும் சமம் என்பது பொய்த்து விடுமோ என்ற அச்சத்தின் காரணமாகவே எனது சந்தேகங்களை எழுப்பியுள்ளேன். சாதாரண பொது மகனான எனக்கு, சட்ட அறிவுகள் இல்லாத காரணத்தினால், எங்கள் மத்தியிலுள்ள சட்ட வல்லுனர்களின் விளக்கத்தை அறிய விரும்புகிறேன்.

**- உமா மகாலிங்கம், LONDON**

### மனதை நோகவைத்துவிட்டது!

'என்ன உலகமடா?' பக்கத்தை விரும்பிப் படிப்பேன். அவருடைய எழுத்துக்கள் யதார்த்தமாக இருக்கும். ஆனால், இம்முறை ஒரு சாதியின் பெயரைக் குறிப்பிட்டு 'சிரைப்பது' என்ற வார்த்தையை பாவித்தது மனதை நோகடித்துவிட்டது. ஒரு பத்திரிகையின் பொறுப்பிலிருந்து 'புதினம்' ஆசிரியர் தவறிவிட்டார். ஒருமுறை அதனை மீண்டும் பாருங்கள். இனியாவது பொறுப்போடு நடந்துகொள்ளுங்கள்!

**- என்.சுகுமாரன், LEVISHAM**

### பொன் எழுத்துக்கள்

மறைந்த கவிஞர் வாலியின் கட்டுரையைப் பல தடவை படித்தேன். தம்பியைப் பற்றியும், அவரைப் பெற்ற 'அம்மா' பற்றியும் எழுதியுள்ள வரிகள் பொன் எழுத்துக்கள்

**- ராஜ மகேந்திரன், HOUNSLOW**

MAYDAY TUITION
Centre
Aim to build a strong foundation, experienced tutor and at an affordable rate.
Tutoring for primary, 11+, and 13+, GCSE Maths, English, Science and A-Level Mathematics across all boards.


TUITION COVERING SOUTH LONDON AREAS
Please call 0740 328 5509

# லண்டனில் பிரபல கராத்தே கழகத்தின் பிரமாண்ட BLACK BELT பட்டமளிப்பு விழா

லண்டனில் பல கிளைகளை கொண்டு கராத்தே ஆசிரியர் றென்சி கந்தையா ரவீந்திரன் (Renshi kandiah Raveendran ) அவர்களால் நடாத்தப்படும் கென்சோ இஷின்ரியு கராத்தே கழகம் (Henshou Isshinyu Karate Academy) கடந்த 16ம் திகதி மார்ச் மாதம் கறுப்புபட்டி பட்டமளிப்பு விழாவை மிகக்கோலாகலமாகக் கொண்டாடியது. இவ்விழாவானது லண்டன் குறைடன் பகுதியில் அமைந்திருக்கும் பிரபல Faire Field Hallன் பிரதான மண்டபத்தில் வெகு விமர்சையாக நடாத்தப்பட்டது. இவ்விழாவிற்கு அமெரிக்காவிலிருந்து OKinawa Isshinryu Karate & Kobu –do Association (OIKKA ) வின் தலைவர் Grand Master Hanshi Christiopher Chase ( PHD in Asian Culture & Martial Arts ) பிரதம விருந்தினராக கலந்துகொண்டார்.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக வல்வை சிதம்பராக் கல்லூரியின் கணிதப் பரீட்சை போட்டிக்குழுவின் திரு. உதயணன், நியூகாம் கவுன்சில் கவுன்சிலர் போல் சத்தியநேசன், Bestate திரு.ரவிக்குமார், புதினம் ஆசிரியர் திரு.ராஜகோபால், தமிழிணி ஆசிரியர் திரு. குலேந்திரன், தேசம் நெட் (Thesam.net) திரு.ஜெயபாலன், GTVன் திரு.தயானந்தா, தீபம் TVன் திரு.யோகா தினேஸ், சன்றைஸ் ரேடியோ திருமதி. நவயோதி யோகரட்ணம், பிளம்ஸ்ரெட் அருணோதயா தமிழ் பாடசாலை அதிபர் திருமதி.இந்திராணி பெர்ணாண்டோ, குறைடன் தமிழ் பாடசாலை டாக்டர் சிவகுமார், ஆசிரியர் திரு.கந்தசாமி (சின்னண்ணா), ஆசிரியர் திரு.சுப்ரமணியம், லூசியம் சிவன் ஆலய அறங்காவல் குழுவின் திரு.யோகராஜா, திரு.சுகுமார், திரு.கணேசமூர்த்தி, டாக்டர் இந்துமதி குமரேந்திரன் போன்றவர்கள் கலந்து கொண்டார்கள்.

மேலும் இந்நிகழ்வுக்கு Isshinryu World Karate Association (IWKA)ன் தலைவர் Grand Master Hanshi Kichiro Shimabuku அவர்கள் யப்பானில் இருந்தும், All India Isshinryu Karate Association (AIIKA) ன் தலைவர் Shihan Hussaini அவர்கள் இந்தியாவில் இருந்தும் தங்கள் ஆசிச்செய்திகளை வழங்கி இருந்தார்கள்.

இவ்விழாவில் கராத்தே மாணவர்கள் பலவிதமான நிகழ்வுகளை செய்து காண்பித்தார்கள். இதில் குறிப்பாக பெண்கள் தற்பாதுகாப்பு நிகழ்வுகள் எல்லோர் மனதையும் கவர்ந்தது. மேலும் சலங்கை நாதம் நடனப் பள்ளி, சலங்கை நர்த்தனாலயா, நடராஜா நர்த்தனாலயா போன்ற கல்லூரிகளின் ஸ்ரீமதி மாலதி ஜெயநாயகம், ஸ்ரீமதி அகன்ஜா அருளானந்தசிவம், ஸ்ரீமதி மதிவதனி பிரபாகரன் ஆகியோரின் மாணவர்கள் வழங்கிய நடன நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்றன.

Henshou Isshinryu Karate Academyன் செயலாளர் திரு.அப்புத்துரை நந்தகுமார் அவர்களின் நன்றியுரையுடன் நிகழ்வு இனிதே நிறைவு பெற்றது. ■











சரோஜினி சந்திரகோபால்

# இலண்டன் தமிழ் நாடகப் பள்ளி

புலத் தமிழ்ப் பூங்காவின் 31வது இதழில், முழு மதியாய் ஒளிரும் மலர், SOUTH HARROW, WALTON AVENUE இல் அமைந்துள்ள METHODIST CHURCH HALL இல், தமிழ் அவைக் காற்றுக் கலைக் கழகத்தின் நிழலில் இயங்கும் "இலண்டன் தமிழ் நாடகப் பள்ளி". இப் பள்ளியின் நிர்வாக அமைப்பினர் திரு.திருமதி. ஆனந்தராணி பாலேந்திரா தம்பதியினர்.

இத்தம்பதியினரின் ஆரம்ப கால கலை வாழ்க்கையினை நோக்கின், 1970 ம் ஆண்டில் கொழும்பு மொறட்டுவ பல்கலைக் கழகத்தில் பொறியியல் துறையில் பட்டம் பெற்ற திரு. பாலேந்திரா கனகரட்ணம் அவர்கள், பொறியியலை விட நாடகக் கலையினையே மிகவும் நேசித்தார். 1970களில் திரு. பாலேந்திரா அவர்களது நாடகங்களில் முக்கிய பாகங்களில் நடிக்கத் தொடங்கிய ஆனந்தராணி அவர்களும் நாடகத் துறையில் பெருவேட்கை கொண்டவர். இவர் வட்டுக் கோட்டை யாழ் கல்லூரியில் (JAFFNA COLLEGE) நடன ஆசிரியையாகக் கடமை புரிந்தவர் என்பது குறிப்பிடத் தக்கது. நாடகங்கள் மூலம் தமிழ்ப் பணி புரிந்த திரு. பாலேந்திரா அவர்களது நாடக அமைப்பு, 1978இல் 'தமிழ் அவைக் காற்றுக் கலைக் கழகம்' எனும் பெயரில் செயல்பட ஆரம்பித்தது.

ஒரே சிந்தனை ஒரே குறிக்கோள், கலை ஆர்வம் மிக்க திரு.பாலேந்திரா, ஆனந்தராணி இருவரும் 1982இல் தம்பதிகளாக இணைந்து தமிழ் நாடக உலகிற்குச் சேவையுரிய ஆரம்பித்தனர். தாம் பிறந்த மண், தாம் வாழ்ந்த நாடு, வீடு, சொத்து, சுகம், உறவுகளைவிட்டு, இந்த மண்ணில் காலடி பதித்தபோதும், தம் உயிர் நாடியாக மனதில் பொக்கிசமாகப் பாதுகாத்து வந்த நாடகக் கலையை மாத்திரம் தம்முடனேயே சுமந்து வந்தனர். 1987ம் ஆண்டில் BRENT தமிழ்ப் பாடசாலையில் நடன ஆசிரியையாக இணைந்த திருமதி. ஆனந்தராணி பாலேந்திரா அவர்கள். அங்கு பயின்ற மாணவர்கட்கும் நாடகக் கலையை ஊட்டுவதில் பின் நிற்கவில்லை.

BRENT தமிழ்ப் பாடசாலையில் தொடர்ந்து பதின்மூன்று ஆண்டுகள் கடமையாற்றிய திருமதி. பாலேந்திரா அவர்கள், சிறந்த நடன ஆசிரியை, நாடகக் கலைஞர், சிறந்த அறிவிப்பாளர், ஒலிபரப்பாளர் மட்டுமன்றி தமிழ் மொழியினை சிறந்த உச்சரிப்புடன் பேசும் ஆற்றலும் கொண்டவர். 2003ம் ஆண்டில் இலண்டன் தமிழ் நாடகப் பள்ளிக்கு அடிக்கல் நாட்டிய இத்தம்பதியினர்



இதுவரையில் அறுபதுக்கு மேற்பட்ட நாடகங்களை மேடையேற்றி உள்ளனர். 1990களில் இருந்து சிறுவர் நாடகங்களை ஊக்குவிக்கும் இப்பள்ளியின் 60க்கு மேற்பட்ட நாடகங்களில் இருபது நாடகங்கள் வரை சிறுவர் அரங்கேறிய நாடகங்கள் என்பதில் இத்தம்பதியினர் பெருமை கொள்கின்றனர்.

வாரந்தோறும் செவ்வாய்க்கிழமைகளில் இரண்டு மணி நேரம் 6 முதல் 14 வயதுச் சிறுவர்களுக்கான வகுப்புகளும், சனிக்கிழமைகளில் மூன்று மணி நேரம் 14 வயது முதல் 23 வயதினருக்கான பயிற்சி வகுப்புகளும் இங்கு நடைபெறுகின்றன. ஐம்பதுக்கு மேற்பட்ட மாணவ மாணவிகளைக் கொண்ட இப்பள்ளி, பிரித்தானியாவில் முதலில் தோன்றிய நாடகப் பள்ளி மட்டுமன்றி, இந்த நாட்டின் ஒரே நாடகப் பள்ளியும் கூட எனும் பெருமையையும் தட்டிக்கொள்கின்றது.

பாலர் வகுப்பிற்கான பயிற்சிப் பட்டறைகளில் தமிழ்ச் சொற்களை கருத்துணர்ந்து உச்சரித்தல், அதற்கான அங்க அசைவுகள், முகபாவனை, தொனி போன்றவற்றுக்கான



பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. சிறார்கள் தனியாகவும், குழுவாகவும் இணைந்து தம் பேச்சாற்றலை உணர்வு பூர்வமாக வெளிப்படுத்தும் வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுப்பதுடன், அவர்களது ஆளுமை வளர்ச்சிக்கான பயிற்சியும் இங்கு அளிக்கப்படுவதை அறிய முடிகிறது. இளையோரது பயிற்சியில் அவர்களது கற்பனைக்கு உருவம் கொடுக்கும் வழிமுறைகள், குரல் பயிற்சி, ஒருவரோடொருவர் இணைந்து, பயிலும் முறை, முகபாவனை, அங்க அசைவுகள், உணர்வுகளைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் ஆகிய பயிற்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது.



இலண்டன் தமிழ் நாடகப் பள்ளி வருடந்தோறும் மூன்று நிகழ்வுகளை மாணவர் பெற்றோர், ஆதரவாளர்களுடன் கொண்டாடி வருகின்றது. முதலில் பள்ளியின் நாடக ஆண்டு நிகழ்வு. அடுத்து பள்ளி மாணவர்கள் பெற்றோர்கள், ஆசிரியர்கள், ஆதரவாளர்களுக்கான ஒன்று கூடல், அதனைத் தொடர்ந்து நத்தார் பண்டிகை.



ஒன்று கூடல், நத்தார் பண்டிகைகளுக்கான நிகழ்வுகளில் மாணவர்களது உருவாக்கங்களே மேடைகளை அலங்கரிக்கின்றன. இந்நிகழ்வுகளில் முட்டி மோதும் மாணவர்தம் ஆற்றல் மிகு தமிழ்ப் பேச்சு, தமிழ் மொழிப் பேச்சு வளர்ச்சிக்கான பெரும் சான்றுகள் என்பதனை எவரும் மறுக்க முடியாது.

இலண்டன் தமிழ் நாடகப் பள்ளியின் அதிபர் திரு. பாலேந்திரா அவர்களிடம், இந்நாடகப் பள்ளியின் தனித்துவம், தனிச்சிறப்பு பற்றி வினவியபோது, அவரளித்த பதிலும் சிறப்பாகவே இருந்தது. அந்நிய மண்ணில் தாய் மொழியான தமிழ் மொழியை வளர்க்கப் போராடும் தமிழ்ப் பாடசாலைகளைப் போலவே இந்த நாடகப் பள்ளியும் தமிழ் மொழி வளர்ச்சிகாகவே உழைக்கின்றது. ஒரு இனம் வாழ வேண்டுமாயின், மொழி வாழவேண்டுமென்பதில் அசையா நம்பிக்கை உள்ளவன் நான். ஏட்டில் வளரும் மொழி பேச்சுடன் இணையும் போது மொழி உயிர்க்கின்றது. உயிர், மெய் எழுத்துக்கள் ஒருங்கிணைவதைப் போலவே எழுத்துடன் பேச்சு இணைவது அவசியம்.

ஒரு தனி மனிதன், ஒரு சமூகம் தமது தேவைகளை கருத்தறிந்து, உணர்வுடன், உரக்கப் பேசும்போது, அவனது, அவர்களது தேவை அவர்களைச் சுற்றியுள்ளோருக்கும் புரிகின்றது. மற்றவர்களது சிந்தனையைத் தூண்டி, உணர்வுகளை விரிவடையைச் செய்கின்றது. மொழி உயிர்க்கின்றது, வளர்கின்றது, சுதந்திரக் காற்றினைச் சுவாசிக்கின்றது.

எம் இளையோர்களே எமது, எம் இனத்தின், எம்மொழியின் எதிர்காலம். அவர்கள் எமது மொழியை பேசவேண்டும், கருத்தறிந்து பேசவேண்டும், உணர்வோடு உரத்துப் பேச வேண்டும், சந்ததி சந்ததியாகப் பேச வேண்டும். எம்மொழி இனிமையானது. இம் மொழியின் இனிமைதனை நுகரப் பேச்சுப் பயிற்சி இன்றியமையாதது. பேசப் பேச மொழி வளரும். மொழி வளர இனம் வாழும். நமது அன்றாட வாழ்வில், பாடசாலைகள், பல்கலைக் கழகங்கள் தொழில் நிலையங்கள், நேர்முகப் பரீட்சைகள் இப்படி எதனை எடுத்துக்கொண்டாலும் COMMUNICATION SKILLS. PRESENTATION SKILLS. BODY LANGUAGE. POSTURE. GESTURE. CONFIDENCE BUILDING என்ற பேச்சுத்தான். இவற்றையெல்லாம் ஆங்கிலத்திலும் ஏனைய பிற மொழிகளிலும் ஆர்வத்தோடு கற்கும் எமது குழந்தைகள். தமிழிலும் அதே அறிவைப் பெற எம் நாடகப் பள்ளி பெருமளவில் உதவுகின்றது. இதுவே எமது பள்ளியின் தனித்துவம் எனப் பெருமையுடன் நீண்டதோர் விளக்கமளித்தார் திரு.பாலேந்திரா கனகரட்ணம் அவர்கள்.

இலண்டன் மாநகரில் ஒரு தமிழ் நாடகப் பள்ளி அமைந்திருப்பதே ஒரு தனித்துவம், தனிச்சிறப்பு. இத்தனிச்சிறப்பிலும் தனியான ஒரு தனித்துவம், திரு. பாலேந்திரா அவர்கள் பேச்சில் துளிர்விடுவதைக் காணும்போது தமிழுக்குப் பெருமை சேர்கின்றது. நாடகக் கலையுடன் இரண்டறக் கலந்திருக்கும் இத்தம்பதியினர் மனதிலும் ஒரு சிறு ஆதங்கம், அங்கலாய்ப்பு. அழகாக விபரித்தார் திருமதி. ஆனந்தராணி பாலேந்திரா அவர்கள்.

"இன்று அனேகமான பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், மேடைகளில் சினிமாக் கலாச்சாரம் தலை தூக்கி நிற்பது கண்கூடு. தத்துவப் பாடல்களைக் கூடத் தள்ளி வைத்து விட்டுத் தனியான ஒரு கலாச்சாரத்தில் REMIX எனும் போர்வையில் நம் இளையோர் மூழ்கி வருகின்றனர். தொழில் நுட்பம் அதிவேகமாக முன்னேறிவரும் சம காலத்தில் கலை, கலாச்சாரப் பண்பாடுகள் பின்நோக்கித் தள்ளப்படுகின்றதோ என வேதனையுடன் எண்ணத் தோன்றுகின்றது." தன் மன உறுத்தல்களை விபரித்த திருமதி. ஆனந்தராணி பாலேந்திரா தொடர்ந்து பேசினார்.

- தொடர்ச்சி 27ம் பக்கம்

# ஞாபகம் வருதே!

ஆங்கில வைத்தியத் துறையில் விற்பன்னராக லண்டனில் நீண்ட காலம் பணியாற்றினாலும் ,தமிழர்களோடும் – தமிழ் கலைகளோடும், நெருங்கி வாழ்ந்து வருகின்ற ஒருவர் என்று பெருமைப்படக் கூடியவர் வைத்திய நிபுணர் டாக்டர் சீனிவாசகம் நவரத்தினம். தமிழ் உணர்வுள்ளவராக அவர் இருப்பதும், அவர் பக்கம் 'புதினம்' தன் கவனத்தைத் திருப்பி, தன் வாசகர்களோடு அவரது நினைவுகளைத் தொடர்ந்து பகிர்ந்து கொள்ள வைத்துக் கொண்டிருக்கிறது



லண்டனில் நிகழ்ச்சி நடத்திய சமயம் கிருஷ்ணவேணியுடன் கட்டுரையாளர் டாக்டர் எஸ்.நவரத்தினம் பின் வரிசையில் நிற்கிறார்.

# "கலாஷேத்திரா" கிருஷ்ணவேணி

**டாக்டர் நவரத்தினம் நினைவுகள்**

ருக்மணி அருண்டேல் தமிழ்நாட்டில் நிறுவிய கலாஷேத்திரம், தமிழ் கலைகளை வளர்க்கும் ஆலவிருட்சமாக உலக அரங்கில் திகழ்கிறது. அங்கு பயின்றவர்கள், பேரும் புகழும் பெற்றவர்களாக பவனி வருகிறார்கள். கலாஷேத்திரம் என்றால் ருக்மணிதான் நினைவுகளுக்கு வருவார். பரத நாட்டியத்துக்குப் புது இலக்கணம் வகுத்தவர். அவரிடம் பரத நாட்டியம் பயின்று அந்தக் கலைக்கு புது மெருகூட்டியவர்கள் பலர். அப்படியானவர்களில் முன்னணி வகிப்பவர் கிருஷ்ணவேணி லக்சுமணன்.

ருக்மனி அம்மையாரின் பணியைப் போன்று! கலாஷேத்திரத்தின் புகழுக்கு பெருமை சேர்த்தவர் இந்த கிருஷ்ணவேணி.

அவர் மறைந்து விட்டாலும், அவரது நினைவுகள் என் நெஞ்சில் நிறைவாக வாழ்ந்து கொண்டிருக்கின்றன.

பல ஆண்டுகளுக்கு முன்னர், ஆடல் அழகியாக அவர் லண்டனுக்கு வந்தது முதல், அவருடனும் அவரது கணவர் லக்சுமணனுடனும் பழகிய பல நினைவுகள் மறக்க முடியாதவை.



கிருஷ்ணவேணிக்கு அப்போது ஐந்து வயது. கலாஷேத்திரத்துடன் இணைந்து நடாத்தப்பட்ட 'வாழ்க்கைத் தத்துவம்' என்ற நிறுவனத்தில், கிருஷ்ணவேணியின் தந்தையார் பொறுப்பான பணியாற்றியதால், கலாஷேத்திரா வளாகத்துக்குள் வாழ்ந்துவந்தார்.

ருக்மணிக்கு அந்தக் குழந்தை மீது ஈடுபாடு ஏற்பட்டது, இயற்கையாகவே நடனம் இருப்பதைக் கண்ணுற்றார். நடன சூழலில் கிருஷ்ணவேணி நடனத்தின் பாலபாடத்தை படிப்பது இலகுவாயிற்று.

எட்டு வயதில், கலாஷேத்திரத்தில் முறையாக நாட்டியத்தைப் பயில ஆரம்பித்தார். தன்னுடைய வாழ்க்கை முழுவதையும் மாற்றி அமைத்து, நாட்டியத்தின் நெளிவு சுளிவுகளை, முழுவதுமாகக் கற்றுத்தந்த ருக்மணி அம்மையார், அவருக்கு வாழ்வின் ஒவ்வொரு அம்சங்களையும் உருவகித்துக் கொடுத்தவர் அவரே என்று கிருஷ்ணவேணி நம்பிகிறார்.

தனது குருவுக்குப் பிடித்தமான சிஷ்யையாக வளர்ந்த கிருஷ்ணவேணி, கலாஷேத்திரத்தில் பரதநாட்டிய விரிவுரையாளரானதில் வியப்பேதுமில்லை.

கலாஷேத்திர நிறுவனத்தில் நடைபெறும் நடன நிகழ்ச்சிகளிலும், நாட்டிய நாடகங்களிலும் முக்கிய பாத்திரங்கள் ஏற்று நடனமாடினார் கிருஷ்ணவேணி.

*1982 ஆம் ஆண்டு என்று நினைக்கிறேன்* லண்டனில் இன்று மாபெரும் கலைக்கூடமாகத் திகழும் பாரதிய வித்தியபவன் அன்று, Oxford street இல் சிறிய இடமொன்றில் இயங்கிக் கொண்டிருந்தது. அதன் நிறுவனர் மாத்தூர் கிருஷ்ணமூர்த்தி அந்த இடத்துக்கு மேலே தனது குடும்பத்துடன் வாழ்ந்து வந்தார்.


பாரதிய வித்திய பவன் கிருஷ்ணவேணியை நாட்டிய நிகழ்ச்சிக்காக அழைத்திருந்தார்கள். அவரது கணவர் லக்சுமணனும் வந்திருந்தார். அவர் ஒரு இந்திய வங்கி உத்தியோகத்தர். பக்கவாத்தியக்காரர்களும் அவர்களுடன் வந்திருந்தார்கள். நன்றாக நினைவு இருக்கிறது. பிரபலமான சீதாராம சர்மா வாய்ப்பாட்டும், நட்டுவாங்கமும். புல்லாங்குழல் உன்னி கிருஷ்ணன். இவர்கள் ஐவர்.

HOLBURN CITY இவர்கள் அனைவரும் தங்குவதற்கு பாரதிய வித்தியபவன் ஏற்பாடு செய்திருந்தது. அந்த நிகழ்ச்சிக்கு வந்திருந்த கிருஷ்ணவேணியையும், அவர் கணவரையும் அறிமுகம் செய்து வைத்தார்கள். எனக்குப்பிடித்தது போல அவர்களுக்கும் என்னையும், என் மனைவியையும் மிகவும் பிடித்து விட்டது. கிருஷ்ண வேணியின் நடமைகூட என்னை மட்டுமல்ல. பல தமிழர்களையும் கவர்ந்தது.

அப்பொழுது லண்டனில் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்த 'ஸ்கொட்' அமைப்பின் தலைவராக இருந்தேன்.

'ஸ்கொட்' அமைப்பின் சார்பில் கிருஷ்ணவேணியை ஒரு நிகழ்ச்சி தரும்படி அப்பொழுது கேட்டேன். அவரும் கணவரும் சம்மதித்தனர்.

லோகன் மண்டபத்தை ஏற்பாடு செய்தேன். அந்நாட்களில் லண்டனில் பரதநாட்டியம், கர்நாடக சங்கீதத்தை ஆர்வத்தோடு கேட்டு ரசிக்கக் கூடிய நமது தமிழர்கள் நிறையளவு இருந்தார்கள். ஒரு தாகம் என்றே சொல்ல வேண்டும் நல்ல 'நெற்' வோர்க்கும் இருந்தது. மண்டபம் நிறைந்த நிறைவான நிகழ்ச்சி.



## 'She moulded us into good human beings'

HOLBURN இல் தங்கியிருந்த கிருஷ்ணவேணி குழுவினரை அங்கேயே தொடர்ந்து தங்கியிருப்பதற்கான ஏற்பாட்டை நானே செய்தேன். கிருஷ்ணவேணியின் கணவருக்கு இப்படியான் ஏற்பாட்டைச் செய்தது என் மீது மேலும் ஒரு நம்பிக்கையை ஏற்படுத்தியது. கிருஷ்ணவேணியின் நடன நிகழ்ச்சி பல நூறு ரசிகர்களையும் வெகுவாகக் கவர்ந்தது. சீதாராம சர்மாவின் பாட்டும், நட்டுவாங்கமும் நாட்டியத்துக்கு மேலும் மெருகூட்டியது.

தமிழகத்துக்கு ஆண்டுக்கு ஒரு தடவை டிசம்பர் மாதங்களில் செல்வதை வழக்கமாகக்கொண்ட நான், கலாஷேத்திரத்துக்குச் சென்று, கிருஷ்ணவேணி தயாரித்து அளிக்கும் பரதநாட்டிய நிகழ்ச்சிகளைப் பார்ப்பேன். கலாஷேத்திரத்தில், சருந்தலை, ராமாயணம் போன்ற பல்வேறு நிகழ்ச்சிகள் அவருடைய கைவண்ணத்தில் கதைகள் பேசும் கலை விருந்தாகவும் நாட்டிய நாடகங்களின் அம்சங்கள் நிறைந்ததாகவும் இவைகள் இருக்கும்.

கிருஷ்ணவேணியின் கணவர் லட்சுமணண் விபத்து ஒன்றில் காலமானார். ஒரு ஆண் ஒரு பெண். இந்த இரு குழந்தைகளுடன் கலாஷேத்திரத்தில் தனது பணியை பேராசிரியர் என்ற உயர்ந்த ஸ்தானத்தில் தொடர்ந்தார் கிருஷ்ணவேணி.

கலாஷேத்திர நிறுவனத்தில் பரதநாட்டிய கலை பீடத்தில் அதிபராகி, ருக்மணி அம்மையார் கட்டி வளர்த்த கலையை வளர்த்த பெருமையும் இவரைச் சாரும்.

காயத்ரி என்ற அவரது மகள் திருவான்மியூரில் 'கிருஷ்ணாஞ்சலி' என்ற நாட்டிய நிறுவனத்தை இன்று நடத்தி வருகிறார். காயத்ரியும் அவரது கணவர் பாலகுருநாதனும் நாட்டியத்தை கலாஷேத்திரத்தில் பயின்றவர்கள். இவ்விருவரும் பரதநாட்டிய வகுப்புகளை நடத்தி வருகிறார்கள்.

மீண்டும் இரண்டாவது முறை 1995 ஆம் ஆண்டு கிருஷ்ணவேணி தன் நடனக் குழுவுடன் லண்டன் வந்தார்கள். மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் நிதிக்காக, லண்டனில வாழும் கலை ஆர்வலரான பரதனின் அமைப்பு அவர்களை அழைத்திருந்தது. மாவிட்டபுரம் கந்தன் வரலாறு நாட்டிய நாடகமாக கிருஷ்ணவேணி குழுவினரால் மேடையேற்றப்பட்டது. இந்த நிகழ்ச்சி லண்டன் லோகன் மண்டபத்தில் நடந்தது.

இந்தியாவின் ஜனாதிபதியாக இருந்த வெங்கட்ராமன் கலாஷேத்திரத்தின் தலைவராக நீண்ட காலம் இருந்தார். அவருடைய தொடர்பு பரதனுக்கு கிடைத்ததால் கிருஷ்ணவேணி குழுவை லண்டனுக்கு அழைப்பதில் சிரமங்கள் இருக்கவில்லை.

முதல் தடவை வந்தபோது எங்கள் வீட்டுக்கு தனது கணவருடன் கிருஷ்ணவேணி வந்திருந்தார். ஆனாலும் இரண்டாவது முறை வந்தபோது அவர்கள் எங்களுடன் தங்கி அளவளாவி மகிழ்ந்த ஞாபகங்கள் நினைவுக்கு வருகின்றன.

மரபு பிசகாத கலாஷேத்திரத்தின் கலப்பில்லாத கண்டிப்புடன், பரதநாட்டியத்தின் சாஸ்திரிய புனிதம் கெடாத அம்சங்களை நர்த்தகிகளுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டுமென்ற ருக்மணி அம்மையாரின் குறிக்கோளுக்கு எந்தவித குந்தகமும் விளையாமல் பார்த்துக்கொண்டு, செயல்பட்டவர் கிருஷ்ணவேணி.

நேர்த்தியான ரெக்னிக்குகளையும் அசத்தலான பாத வேலைகளையும் அவர் நடன நிகழ்ச்சிகளில் கண்டு, களித்து வியந்திருக்கிறேன். ஒரே நேரத்தில் உடலின் அனைத்துப் பாகங்களும் ஒவ்வொரு வேலைகளைச் செய்து பரவசமாக்குகிற கலை ஒன்று என்றால் அது பரத நாட்டியம்தான். முகம் பாவத்தை கைகள் அபிநயம் பிடிக்க, கால்கள் தாளத்துக்கு ஏற்ப ஆட இப்படி எத்தனை பரதநாட்டியம் ஆடப் பிறந்தவள் நீ என்று ருக்குமணி தேவியே கிருஷ்ணவேணியின் ஆடலைப்பார்த்து மனம் விட்டுப் பாராட்டியிருக்கிறார்.

லண்டன், மலேஷியா, சிங்கப்பூர், ரஷ்யா, ஐரோப்பா, அமெரிக்கா போன்ற நாடுகளுக்குச் சென்று கிருஷ்ணவேணியும், குழுவினரும் நாட்டிய நிகழ்ச்சிகளை நடத்தியிருக்கின்றனர். அமெரிக்காவுக்கு பலதடவை போயிருக்கிறார்.

இராமாயணத்தில் சீதாவாகவும் ஆண்டாளில் ஆண்டாளாகவும் கீதா கோவிந்தத்தில் ராதாவாகவும் 'ருக்மணி பரிநயம்' நாட்டியத்தில் ருக்மணியாகவும் குற்றாலக் குறவஞ்சியில் வசந்தவல்லியாகவும் முக்கிய பாகங்களை ஏற்று ஆடி நடன ரசிகர்களின் அபிமானத்தைப் பெற்றவர் கிருஷ்ணவேணி. கடின உழைப்பு அவரது வெற்றியின் ரகசியம்.

தமிழ்நாடு அரசின் கலைமாமணி விருதும் கிருஷ்ணகான சபாவின் நிருத்திய சூடாமணி விருதும் பெற்றிருக்கிறார். இந்திய அரசின் விருதொன்றும் பெற்றிருக்கிறார்.

தமிழகத்தின் முன்னணி நாட்டிய நர்த்தகிகள் சிலரது நடனங்கள் என்னை கவர்ந்திருக்கின்றன. என் நெஞ்சில் நர்த்தனம் புரியும் நடனதாரகைளில் கிருஷ்ணவேணி மறைந்தும் மறையாதவராக வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

## பழம் பெரும் எழுத்தாளர்
# குஷ்வந்த் சிங் - மரணம்



பழம் பெரும் எழுத்தாளர், பத்திரிகையாளர் குஷ்வந்த்சிங் 19.3.2014 அன்று தனது 99வது வயதில் மரணமடைந்தார். பாகிஸ்தானில் தற்போதுள்ள பஞ்சாப் மாகாணத்தின் ஹடாலி நகரில் பிறந்தவர் குஷ்ந்த் சிங். 'இலஸ்டிரேட்டட் வீக்லி இந்தியா'வின் ஆசிரியராக இருந்துள்ளார். 'நேஷனல் ஹெரால்ட்', 'இந்துஸ்தான் டைம்ஸ்' ஆசிரியராகவும் பணியாற்றியுள்ளார். 'டிரெய்ன் டு பாகிஸ்தான்', 'ஐ ஷேல் நொட் நியர் தி நைட்டிங்கேல்', 'டெல்லி' ஆகியவை இவர் எழுதிய பிரபலமான நூல்களில் சில. தனது 95 வது வயதில் இவர் 'தி சன்செட் கிளப்' என்ற நாவலை எழுதி அசத்தியவர். நாட்டு நடப்பு, அரசியல், காதல், காமம் என இவர் தொடாத விஷயமே இல்லை.

இவரது சுயசரிதை **'TRUTH,LOVE AND A LITTLE MALICE'** . இதில், தன்னைப் பற்றிய பல சர்ச்சைக்கிடமான, கலகலப்பான விஷயங்களை உள்ளது உள்ளபடியே எழுதியுள்ளார் குஷ்வந்த் சிங்.

1980 முதல் 1986 வரை இந்திய எம்.பியாகவும் இருந்துள்ளார். 1974 ம் ஆண்டு 'பத்மபூஷண்' விருது பெற்றார். ■



# உலகத்தமிழர்களை உசுப்பிய விபூசிகா!

ஈழத்தில் யுத்தம் முடிந்து ஐந்து ஆண்டுகள் ஆகிவிட்ட நிலையில், இறுதி இன அழிப்பு யுத்தத்தில் காணாமல்போன தங்களின் உறவுகளைத் தேடி மக்கள் நடத்திய அத்தனை ஆர்ப்பாட்டங்களிலும் தனிக் கவனம் பெற்ற கண்ணீர், சிறுமி விபூசிகாவினுடையது. 13 வயதே ஆன விபூசிகா, காணாமல்போய் ராணுவத்தின் பிடியில் இருக்கும் தன் அண்ணன் மகிந்தனை ஒப்படைக்குமாறு தன் தாய் ஜெயக்குமாரியோடு போராட, அது உள்ளூர் மற்றும் உலக ஊடகங்களின் கவனத்தை ஈர்த்தது. நவி பிள்ளை வந்தபோது போராடிய விபூசிகா, இப்போது ஐ.நா.அமர்வு நடப்பதையொட்டிப் போராட, 13 வயது விபூசிகாவையும், அவரது அம்மா ஜெயக்குமாரியையும் கைது செய்திருக்கிறது ஸ்ரீலங்கா பயங்கரவாதத் தடுப்புப் போலீஸ். பயங்ரவாதிகளுக்கு அடைக்கலம் தந்தார் என்ற பெயரில் கைதுசெய்யப்பட்ட ஜெயக்குமாரியை, பூசா தடுப்பு முகாமுக்கு அனுப்பிய போலீஸார், விபூசிகாவை இளஞ்சிறார் சிறைக்கு அனுப்பிவிட்டார்கள். ஆனால், அந்த விபூசிகாவின் கண்ணீர் உலகத் தமிழர்களை உசுப்பியிருக்கிறது!

## தாயக குழந்தைகளுக்கு
# லண்டன் சிவன் கோவில் உதவி



தாயகத்தில் ஏழ்மையோடு போராடிக்கொண்டு வாழ்ந்து கொண்டிருக்கும் சிறார்களுக்கு உதவுவதில் லூயி ஷியத்தில் அமைந்துள்ள லண்டன் சிவன் கோவில், தனது கணிசமான பங்களிப்பைச் செய்து வருகிறது. பதினான்கு ஆண்டுகளுக்கு முன்னர் மட்டக்களப்பு நகரிலிருந்து 12மைல் தூரத்தில் உள்ள செட்டிபாளையத்தில் சொந்தமாக வீடொன்றை வாங்கி, லண்டன் சிவன் இல்லத்தை உருவாக்கி, அங்கு பெற்றோரை, தாய், தந்தையரை இழந்த பிள்ளைகளைத் தங்க வைத்து, நேரத்துக்கு உணவும், உடையும் வழங்கி, அவர்கள் தொடர்ந்து கல்வி வசதியைப் பெறுவதற்கான வசதிகளை இன்று வரை செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

இதேபோன்று மட்டக்களப்பு மேற்கு கல்வி வலையத்திலுள்ள படுவான்கரை பகுதியில் உள்ள பாடசாலைகளில் பயிலும் பிள்ளைகள் போக்குவரத்து சிரமத்தை நிவர்த்தி செய்யும் நோக்கோடு, ஐந்தாம் வகுப்பு புலமைப் பரிசில் சித்தி பெற்ற 35 பெருக்கு லண்டன் சிவன் கோவில் புத்தம் புதிய சைக்கிள்களைச் சமீபத்தில் வழங்கியது.

சமீபத்தில் இன்னொரு பங்களிப்பையும், திருகோணமலை மாவட்டத்தில், மூதூர் கல்வி வலையத்திலுள்ள மிகவும் பின்தங்கிய ஈச்சலம் பற்று கோட்டம் பகுதியிலும் லண்டன் சிவன்கோவில் செய்துள்ளது.

ஈச்சலம்பற்றுவிலுள்ள பல பாடசாலைகளில், செண்பகா பாடசாலையும், இலங்கை துறை முகத்து வாரம் பாடசாலையிலும் கலைப் பிரிவில் 12 பிள்ளைகள் பொதுக் கல்வித்தராதர சாதாரண பரீட்சையில் சித்தி பெற்றுள்ளனர். விஞ்ஞானப் பிரிவிலும் படித்து சித்தி பெறக்கூடிய வாய்ப்புக்கள் இருந்தபோதும், படிப்பதற்கான வசதிகள் இல்லாததைக் கருத்திற் கொண்டு, அப்பகுதி பாடசாலை மாணவர்களுக்கு கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகியவற்றைப் படிப்பதற்கு சமீபத்தில் லண்டன் சிவன் கோவில் ஏற்பாடுகளைச் செய்துள்ளது. 300 பிள்ளைகள் வரை இவ்வசதியைப் பெற, நேரடியாகவே பிரதிநிதிகள் சென்று வசதிகளைச் செய்துள்ளது. ■



வவுனியூர் இரா.உதயணன்



# மறுபக்கம்

பனி மூட்டம் சாம்பல், புகை போன்று பரவி எங்கும் வியாபித்து இருந்தது. வீதியில் நடந்து வரும் ஒருவரையோ, ஓடி வரும் வாகனமோ அருகில் வரும் வரை தெரியாத அளவுக்குத் தடிப்பான பனி மூட்டம்.

இலையுதிர் காலம். அழகான மரங்களில் இருந்த இலைகள் கூடத் தங்களை விடுவித்துக்கொண்டு, வீதியில் பரவிக் கிடந்து மொட்டை மரங்களைப் பார்த்துச் சிரித்தன.

பொழுது விடிந்து கொண்டிருக்கும் நேரம்.

சேவல் கூவும் சத்தமோ, நாய்கள் குரைக்கும் சத்தமோ எங்கும் கேட்கவில்லை. சுடுகாட்டு மௌனம்.

பல வீடுகளில் மின் விளக்குகள் எரிந்து நாங்களும் எழும்பி விட்டோம். .பாடசாலைக்குப் புறப்படப்போகிறோம். வேலைக்குப் புறப்படப் போகிறோம் என்று காட்டிக் கொண்டிருந்தாலும், பனி மூட்டம் அவர்களின் சமிக்ஞைகளை மறைத்துக்கொண்டிருந்தன.

ஒரு சில கார்கள் முன்விளக்குகளைப் "பளிச்"என்று போட்டுக் கொண்டு ஊர்ந்தன.

ஒரு படையையே தாக்கி வெல்லப் போகும் 'டிரக்' வண்டிகள் ஊர்வது போல இந்த வண்டிகளும் மெதுவாக, சத்தமற்று நகர்வது போன்றுதான் தோற்றமளித்தன.

முகுந்தன் நேரத்தைப் பார்த்துவிட்டு, யன்னலூடாக வெளியே எட்டிப் பார்த்தான்; வானம் வெளிப்பது மாத்திரம் அவனுக்குத் தெரிந்தது.

திரும்பிப் படுக்கையைப் பார்த்தான். தீப்தி ஆழ்ந்த நித்திரையிலிருந்தாள். பகல் முழுவதும் அலுவலகத்தில் வேலை செய்து விட்டு வந்து, இரவு உணவு சமைத்துப் பிள்ளைகளுக்கும், கணவனுக்கும் கொடுத்துவிட்டு, அடுத்த நாள் பிள்ளைகள் இருவருக்கும் பாடசாலைக்கு எடுத்துச் செல்வதற்கும், கணவனும் தானும் வேலைக்குக் கொண்டு செல்வதற்கும் உணவு தயாரித்து வைத்து விட்டு, பன்னிரண்டு மணி வரை 'யூரியூப்'பில் வாணி, ராணி, 'OFFICE' தெய்வம் தந்த வீடு சீரியல்களைப் பார்த்து விட்டுப்படுத்தவள் இன்னமும் உலகத்தை மறந்து அயர்ந்து தூங்கிக் கொண்டிருக்கிறாள்.

இந்த நாட்டில் ஆண்களை விடப் பெண்களுக்குத்தான் வேலை அதிகம் என்று நினைத்தவனாய், யன்னலை விட்டு விலகி வந்து கட்டிலில் அமர்ந்து கொண்டான் முகுந்தன்.

"எந்த நாட்டிலை வாழ்ந்தாலும், வாழ்க்கை ஏதோ ஒரு வகையில் போராட்டம்தான்" - பெருமூச்சு விட்டான்.

தீப்தி திரும்பிப் படுத்தாள். அவள் கைகள் நீண்டு அவனைத் தேடின. அங்குமிங்குமாக அசைந்தன அவள் கைகள். தலையைத் தூக்கி நிமிர்ந்து பார்த்தாள் தீப்தி.

"என்னப்பா இந்த நேரத்தில் எழும்பி இருந்து என்ன யோசிக்கிறியள்?" - தீப்தி கேட்டாள்.

"நித்திரை வரேல்லை"

"அப்படியென்ன யோசனை? ஒவ்வொரு நாளும் இப்படி யோசித்தால் மன உளைச்சல்தான் வரும்"

"வந்திட்டுது" என்று மனசுக்குள்ளே பதில் சொல்லிக் கொண்டான் முகுந்தன்.

தீப்தி கட்டிலில் புரண்டு, புரண்டு, அவருகில் படுத்தபடி, அவனது வலக்கையைப் பற்றிக் கொண்டாள்.

அவளது கைகள் மெல்லியதாகக் குளிர்ந்தது. முகுந்தன் அவள் கைகளை விலக்கிவிட்டு சற்று நகர்ந்தான்.

"என்னப்பா... என்ன பிரச்சனை என்று எனக்கும் சொல்லுங்கோவன். நான் உங்கட மனுஷிதானே. எல்லாத்தையும் உங்கட மனசுக்குள்ளே பூட்டி வைத்து விட்டு சும்மா வருத்தத்தைத் தேடப் போறியள்"

முகுந்தன் பதில் எதுவும் பேசவில்லை.

"சொல்லுங்கோவன்" - அவன் கையைப் பிடித்துத் தடவினாள்.

"என்னத்தைச் சொல்லிறது? இப்ப சொல்லித்தான் என்ன ஆகப் போகுது?"

"எப்பவும் அமைதியாக இருக்கிறவையளுக்குத்தான் வருத்தம்கூட வருமாம்"

"என்னத்தைச் சொல்லுறது? ஊரைப் பற்றி நினைச்சா நித்திரை வரேல்ல..."

"இங்க வந்து ஆறு வருஷங்கள் போயிட்டுது. நாங்கள் சந்தோஷமாக, நிம்மதியாய் வாழுறதை விட்டுட்டு, ஊரைப் பற்றி நினைச்சு நினைச்சு என்ன செய்யப் போறியள்..."

—முகுந்தன் நிமிர்ந்து தீப்தியைப் பார்த்தான்.

"என்னடி சொல்லுறாய்? நீயும் இங்க வந்த பிறகு நல்லாய் மாறிட்டாய்"

"இடத்திற்கு ஏற்றமாதிரி மாறத்தானே வேணும். அதை விட்டுட்டு, இன்னும் பழசையே யோசித்துக் கொண்டிருந்தால், எங்கட வாழ்க்கைதான் பாழாய் போய்விடும்"

"எப்படியடி இப்படி உனக்கு மாற முடியுது? உன்னைப்போல இந்த நாட்டில் நிறையப்பேர் இருக்கினம். தாங்கள் வாழ்ந்தால் போதும். ஊரிலை அதைச் செய்யறன், இதைச் செய்யிறன் எண்டெல்லாம் புளுகித் தள்ளுவான்கள். ஆனால் ஒன்றுமே இல்லை"

"உங்களுக்கு எப்படித் தெரியும்?"

"தெரிஞ்சபடியால்தான் சொல்லுறன்"

"அவங்கள் தங்கட குடும்பம், தாங்கள் என்று இருக்கப் பாக்கிறாங்கள். அதில் என்ன பிழை?"

"தமிழ் இனமே இப்படி ஒரு சுயநலமான இனமாக மாறிக்கொண்டு போகுதடி. போர்காலத்தில் நிறையக் கொடுத்து உதவி செய்த இந்த புலம் பெயர் தமிழர்கள் போர் முடிஞ்ச அடுத்த நிமிஷமே, போரால் பாதிக்கப்பட்ட எங்கட இனசனங்களை எல்லாம் கைவிட்டுப் போட்டுதுகள்.

எங்கட சனங்கள் இப்பவும் ஒரு நேரம் சாப்பிட வழி இன்றி கஷ்டப்படுதுகள். கேட்டால், அரசாங்கத்தின் மீது பழி போடுகிறார்கள். அரசாங்கம்தானே இந்த நிலைக்கு எங்கட சனங்களைக் கொண்டு வந்தது. அவர்கள்தானே உதவி செய்ய வேணும் என்று வியாக்கியானம் வேற"

"இப்ப என்ன சொல்ல வாறியள். இனி எல்லாம் காலம் கடந்து போச்சு...."

"என்ர பெரியம்மாவின், மகள் மாதவியை உனக்குத் தெரியும்தானே..."

"தெரியும்... சொல்லுங்கோ..."

"அவள் எவ்வளவு வடிவான பெட்டை. இப்ப வயது இருப்பத்தினாலு இருக்கும்."

"எனக்குத் தெரியும். மல்லாவியிலிருந்த காலத்திலேயே அவளை எனக்குத் தெரியும். அப்ப அவளுக்கு பதினேழு, பதினெட்டு வயதுதான் இருக்கும். சைக்கிளில் போராளின்ர உடுப்போடை போகேக்க கண்டிருக்கிறன்."

"பாவமடி அவள். எனக்குத் தக்கச்சிதானே. வயசு போன பெரியப்பாவுக்கும், பெரியம்மாவுக்கும் இப்ப நடக்கிற அவளின்ர கதை தெரியாது. அதுகள் இரண்டும் இப்ப வன்னியில் தனிக் கஷ்டப்படுதுகள். இவள் மாதவி ஒருத்திதானே அதுகளுக்கு ஒரே பிள்ளை. இப்ப மாதவி எங்க என்றுகூட அதுகளுக்குத் தெரியாதாம். நானும்கூட இங்கேயிருந்து போருக்குப்பிறகு கஷ்டப்படேக்கை ஒரு உதவி கூடச் செய்ய முடியாமல் போச்சு"

"மற்றவர்களைப் பற்றியே யோசித்துக்கொண்டு இருங்கோ"

"என்ரை தங்கச்சியடி அவள். போர் முடியிற இறுதிக் கட்டத்தில், இராணுவத்திட்டை சரணடைந்து ரெண்டு வருஷமாய் கிரனை, இலுப்பக்குளம்

காம்பில் வைக்கபப்பட்டாள். பிறகு பம்பை மடுவில கட்டப்படுகிற பல்கலைக்கழக கட்டடத்துக்கு அருகில் இருக்கிற ஒரு பெரிய இடத்தில் கணக்கப் பெண் போராளிகள் வைக்கப்பட்டுள்ள இடத்திற்கு மாற்றி, அங்கை வைக்கப்பட்டாள்."

"அதுக்கென்ன?"- முகுந்தனைப் பார்த்துக் கேட்டாள்.

"சொல்லி முடிக்கு மட்டும் பேசாமல் இரு. போராளிகளுக்கான புனர் வாழ்வு முகாம் என்று சொல்லி அங்கிருந்த பெண் பிள்ளைகளுக்கு சிறு கைத் தொழில்கள் பழக்கிக் கொடுத்தார்கள்."

"யார்?"

"வேற யார்? இராணுவம்தான்."

"அப்ப இப்ப உங்கட தங்கச்சி வேலை செய்யிறாளா?"

"சொல்ல விடன்"

தீப்தி முகுந்தனின் தோளில் தலையைச் சாய்த்துக் கொண்டாள்.

"இவளுக்குத் தையல் வேலைதான் கற்றுக்கொடுத்தார்களாம். முகாமில் இருந்து விடுபட்ட மாதவி, சிங்க ஊரில் 'கார்மெண்டில்' வேலையும் செய்யத் தொடங்கினாளாம்.

"அப்ப மாதவி இப்ப தன்ர காலில் நிற்கிறாள்..."

"கொஞ்சம் பொறு. இடையிடையே கேள்விகேட்காதே..!"

"மாதவி 'கார்மெண்ட்' பாக்டரியில் வேலை செய்தபோது, தன் பெற்றோருக்குப் பணம் அனுப்பிக் கொண்டிருந்தாளாம். பாதுகாப்பாக இருக்கிறாள் என்று சந்தோஷமாக இருந்தினமாம்..."

"மகளின்ர நிலை மாறிட்டது என்று அவையளுக்கு சந்தோஷமாகத்தானே இருக்கும்."

"இல்லையடி... நீ என்ன சொல்ல வாறாய் எண்டு எனக்கு விளங்குது. நான் பணம் அனுப்பி உதவி செய்திடுவன் என்ற பயம் உனக்கு..."

"உங்களுக்கு விளங்குதுதானே..."

"தீப்தி! நீ சுயநலத்தோட யோசிக்காம ஊரில இருக்கிற எங்கட சனத்தைப் பற்றியும் கொஞ்சம் யோசி. இந்த நாட்டுக்கு வந்த பிறகு உனது குணமே மாறிப் போச்சு. மாதவிக்கு நடந்ததைச் சொல்லி முடிக்கிறன். அதுவரை பொறுமையாய் கேள்.

என்ற சினேகிதன் சங்கர் இந்தியாவுக்குப் போயிட்டு ரெண்டு நாட்களுக்கு முதல்தான் இங்க வந்தவன். சென்னையில மாதவியைக் கண்டவனாம். அவனும் அவளின்ர ஊர்தான். சின்ன வயதில இருந்தே மாதவியை அவனுக்குத் தெரியும்.

சங்கர் நின்ற ஹோட்டலுக்குப் போன இடத்தில் மாதவி அவனைக் கண்டிருக்கிறாள். மாதவி சங்கரைக் கண்டதும், 'என்னைத் தெரியுதோ' என்று கேட்க, 'நீ மாதவிதானே' என்று கேட்டிருக்கிறான். அவள் அழுதிருக்கிறாள். 'நான் ஒரு பெரிய பிரச்சனையில் மாட்டி விட்டன்' என்று விக்கி விக்கி அழுதிருக்கிறாள். 'இப்ப சொல்ல இயலாது. இந்த இடத்தில் மாலை ஐந்து மணிக்குச் சந்திப்பம்' என்று சொல்லி இருக்கிறாள். அவளைத்தொடர்ந்து இரண்டு தடியன்கள் போனார்களாம்.

"சொன்னபடி சந்தித்து, தன் நிலையை சொல்லியிருக்கிறாள்.

மாதவி 'கார்மெண்ட் பாக்டரி'யில் வேலை செய்து கொண்டிருந்த நாட்களில் அங்கே உயர்பதவி வகித்த ஒரு மனிதன் மாதவியிடம் நிறையச் சம்பளத்தோட இந்தியாவில் ஒரு 'கார்மெண்ட் பாக்டரி'யில் வேலை இருப்பதாகவும், அங்கே போகலாமென்றும் சொல்லியிருக்கிறான்.

அவள் வீட்டு வறுமை நிலையையும், பாதுகாப்பையும் யோசித்து, அங்கு போகச் சம்மதித்தாள். அந்த மனுஷனே பாஸ்போர்ட், விசா போன்றவற்றைச் செய்து, இன்னும் இரண்டு தமிழ் பிள்ளைகளையும், ஒரு சிங்களப் பிள்ளையையும் கூட்டிக்கொண்டு சென்னைக்குப் போயிருக்கிறான்."

"சென்னையில் தங்கச்சிக்கு நடந்த விஷயங்களை சங்கர் என்னிடம் சொன்னான்."

"அப்படி என்ன நடந்தது முகுந்தன்?"

முகுந்தன் பெருமூச்சு விட்டான். கிழக்கில் பிரசவிக்கத் தொடங்கிய கதிரவன் யன்னல் ஊடாக எட்டிப் பார்க்கத் தொடங்கியிருந்தான்.

மாதவியையும், மற்ற மூன்று பிள்ளைகளையும் ஒரு ஹோட்டலில் தங்க வைத்துவிட்டு அவர்களை ஒரு பணக்காரனுக்குப் பேரம் பேசி விற்றுவிட்டான்.

தீப்தி கண்களை வெட்டாமல் முகுந்தனையே பார்த்தாள்.

முகுந்தன் தொடர்ந்தான்.

"அந்தப் பணக்கார மனிதனும், அவனுடன் சேர்ந்த இன்னும் இரண்டு பேரும் நாலு பெண் பிள்ளைகளை வைத்து விபச்சாரம் நடாத்தி பணம் உழைத்திருக்கிறார்கள்."

"முகுந்தன் எனக்கு நெஞ்சு படபடக்குது. கேடு கெட்ட மனிதர்கள்... இப்படியெல்லாம் பிழைப்பு நடாத்தி..."

தீப்தியின் கண்கள் கலங்கிவிட்டன.

"சென்னையில் வளசரவாக்கம் என்ற இடத்தில்தான் இந்த அநியாயத்தை நடாத்தினான் அப்பணக்காரன்."

"ஒரு பெரிய ஹோட்டலில் பணக்கார மனித மிருகங்கள் தங்கள் பசியைப் போக்கும்- ஒரு நடைப் பிணமாக வாழ்கிறாள்... இவளுடன் சென்ற மற்றவர்களுக்கும் இதே கதிதான். "தன்னை எப்படியாவது இந்த நாட்டிற்குக் கூப்பிட்டுவிடும்படி சங்கரிடம் கெஞ்சியிருக்கிறாள். சங்கரும் 'ஆம்' என்று சொல்லிவிட்டு வந்துவிட்டான். பெரியப்பாவுக்கும், பெரியம்மாவுக்கும், தெரிந்தால் செத்தே போய்விடுவார்கள்..."

தீப்தி ஒன்றும் சொல்லாமல் தலையாட்டினாள்.

"எங்கட சனங்கள் இப்படி எத்தனை விதமான கொடூரங்களையும் கஷ்டங்களையும் அனுபவிக்குதுகள். இப்படியே போனால்.. நினைத்துப்பார் தீப்தி."

தீப்தியின் கண்களில் நீர் பனித்தது.

"எப்ப அவளை இங்கை கூப்பிடப் போறியள்? 'பாங்கில்' கடன் எடுத்தாவது கூப்பிடுவம்!"

பெண்களின் உணர்வுகளைப் பெண்களால்தான் புரிந்துகொள்ள முடியும்.


"இந்த உலகில் பிறந்த நாங்கள் போகும்போது ஒன்றையும் கொண்டுபோகப் போவதில்லை. ஏதோ நல்லாய் இருக்கிறம். ஊரில கஷ்டப்படுகிற நாலு சனத்துக்கு முடிந்ததைச் செய்ய வேணும்" - சொல்லிவிட்டு முகுந்தன் தீப்தியின் தலையை வருடி விட்டான். ■

23ம் பக்க தொடர்ச்சி

"நாம் மேடையேற்றும் நாடகங்கள் அனைத்திலுமே ஒரு கருத்தை மையமாக்குகின்றோம். இலங்கைக் கல்வி அமைச்சின் DCAMA AND THEATRE க்கான பாடத் திட்டத்தில், எமது பள்ளியின் பாடத் திட்டமும் சேர்க்கப்பட்டுள்ளது. தமிழ் நாடக உலகிற்குக் கிடைத்த ஒரு பெருமதிப் பாகவே இதனைக் கருதுகின்றேன்" என மகிழ்ச்சியுடன் கூறினார். தங்கள் நாடகப் பள்ளியில் பாலர் பிரிவில் பயிலும் 'அன்சா' எனும் சிறுமியின் தாயார் 'சரிதா'வும் இப்பள்ளியின் பழைய மாணவி என இரட்டிப்பு மகிழ்வுடன் பேசிய ஆனந்தராணி அவர்கள் கணவர் பற்றிய இன்னுமொரு விடயத்தையும் கூறத் தவறவில்லை. சமீபத்தில் தமது இலங்கை விஜயத்தின் போது, கொழும்பு, மட்டுநகர், யாழ் நகரில் தமது நாடகங்களை அரங்கேற்றியதாயும், அங்குள்ள பாடசாலைகளில் நாடகத்தினை ஒரு பாடமாக அதிக மாணவர்கள் பயின்று வருவதாயும் குறிப்பிட்டார். 'மகாஜனா'வில் MODERN DRAMA பற்றிய கேள்விகளில் "இவர் யார்?" என்ற வினாவின் கீழ் தனது கணவரின் நிழற்படம் இருப்பதையும் பெருமையுடன் கூறினார்.

மழை, கண்ணாடி வார்ப்புகள் போன்ற நாடகங்களை என்றும் மறக்க முடியாத நாடகங்களாகக் கூறும் இத்தம்பதியினர் வில்லியம் ஷேக்ஸ்பியரின் THE TEMPEST எனும் நாடகத்தின் தமிழாக்கத்தினை 'சூறாவளி' எனும் பெயரில் மேடையேற்றிப் பெருமை கொண்டதோடு, நாடகப் பிரியர்க்ள மனதிலும் நிலையான இடத்தைப் பெற்றுக்கொண்டனர்.

வெள்ளையர் சீமையில் நாடகப் பள்ளி நிறுவி, பேச்சு, நடிப்பின் மூலம் தமிழ் மொழியினை வளர்க்கும் இத் தம்பதியினரின் கடின உழைப்பே, இப்பள்ளி 10 வருடங்களைத் தாண்டி, தன்னம்பிக்கையோடு முன்னேறக் காரணம் என்பது மறுக்க முடியாத உண்மை. தொடர்ச்சியான நாடக மேடையேற்றங்களின் மூலம், தீவிர நாடக இயக்கத்தை வலுப்படுத்தி வரும் சிறப்பான தமிழ் நாடகக் கலைஞர்களான திரு. திருமதி ஆனந்தராணி பாலேந்திரா தம்பதிகளின் அபார ஆளுமையில், தமிழ் அவை காற்றுக்கலைக் கழகத்தினைத் தாயாகக் கொண்டு சேயாக வாழும் இலண்டன் தமிழ் நாடகப் பள்ளி, பல ஆயிரம் கிளைகளைப் பரப்பி, நீடூழி வாழ, வளர வாழ்த்தி மகிழ்கின்றது புலத் தமிழ்ப் பூங்காவின் இதழ் 31.


















# லண்டனில் திருவையாறு

தமிழகத்தில் தமிழ்கலைஞர்கள் ஒன்று கூடி சங்கமிக்கின்ற திருவையாறு தியாகராஜா உற்சவத்தை நினைவு படுத்துவதுபோல, லண்டன் தமிழ் கலை வித்துவான்களும், அவர்களது மாணவர்களான இளம் கலைஞர்களும் ஒன்றுகூடி மனதை நிறைவுபடுத்திய விழாவாக லண்டனில் திருவையாறு நிகழ்ச்சி 2 வது ஆண்டாக கோலாகலமாக நடைபெற்றது. குறைடன் லான்பிரான்ஸ் பாடசாலை மண்டபத்தில் சமீபத்தில் தியாகராஜ ஆராதன உற்சவம் (u.k.) லண்டனிலுள்ள பல்வேறு கலை வித்தகர்களையும், அவர்கள் மாணவர்களையும் ஒன்றிணைத்து, இந்தளவு சிறப்பு நடாத்தி வைத்த பெருமை பிரபல தமிழக வயலின் வித்தகர் துரை பாலசுப்பிரமணியனையே சாரும். அவரது கடின உழைப்புக்கும், அவரது சகாக்களுக்கும் ஒரு சபாஷ்! காலை ஒன்பது மணி முதல் இரவு வரை நடந்த இந்த விழா காலை, மதியம், இரவு என உணவுவரை எல்லாமே இலவசமாக வழங்கப்பட்டது. அனைவரையும் இசை வெள்ளத்தில் மிதக்க வைத்த கலைஞர் துரைபாலசுப்பிரமணியனுக்கு லண்டன் ரசிகர்கள் நன்றி சொல்லியே ஆகவேண்டும்.

இந்தியாவிலிருந்து வந்திருந்த பிரபல கர்நாடக இசைக் கலைஞர் சஞ்சை சுப்பிரமணியத்தின் சிஷ்யர் சன்டீட் நாராயணின் கணீரென்ற குரலில் ஒலித்த பாடல்கள் மெய் சிலிர்க்க வைத்தது.

இந்த நிகழ்வுக்கு உயிரூட்டிய பக்க வாத்தியங்கள் வயலின் துரை பாலசுப்பிரமணியன் மிருதங்கம் சோமசுந்தர தேசிகர், கடம்: ஆர்.என்.பிரகாஷ், மோர்சிங்: சிதம்பரநாதன், கஞ்சிரா: ராம் சிவசுப்பிரமணியம். இந்தியாவில் திருவையாறில் ஆண்டவன் சந்நிதானத்தில் சமத்துவம் நிலவுவதை நினைவுபடுத்துவது போன்ற உணர்வு லண்டன் கலைஞர்கள் பஞ்ச ரத்தின கீர்த்தனை இசைத்தபோது ஏற்பட்டது. தரையில் கலைஞர்களை அமரவைத்து அங்கு ஒரு தெய்வீக அதிர்வை விழா இறுதியில் அனைவரும் பெற்றனரென்றால், அது லண்டன் தமிழர்களுக்குக் கிடைத்த கலைஞர் துரை பாலசுப்பிரமணியனின் ஏற்பாடுதான்! லண்டனில் இவ்விதமான ஒரு நிகழ்வை முதல் தடவையாக பார்க்க வைத்தவரும் அவரே! அவருக்கே நன்றி சொல்வோம். -விவே. ■






# லண்டன் மாப்பிள்ளை





**பெரிய பெரிய கனவுகளோடு லண்டன் மாப்பிள்ளைக்கு கழுத்தை நீட்டக்கூடாது. ஊரில் உள்ள ஒருவரைப்போல மிகச் சாதாரணமான ஒரு புருஷனுக்கு வாழ்க்கைப்பட்டுப் போகிறேன் என்று மட்டுமே நினைத்துக் கலியாணம் செய்யுங்கள். கனவுகளை மட்டும் சுமந்துகொண்டு வந்தீர்களென்றால் இந்த விறை குளிரில் எல்லாம் கரைந்து போய்விடும்.**

• **இளைய அப்துல்லாஹ்**




திருமணம் என்பது இப்பொழுது பணம், அந்தஸ்து, தொடர்பானதாக மாறி அன்புக்கும் அர்ப்பணிப்புக்கும் அப்பாற்பட்டதாகி விட்டதோ என்று யோசிக்கத் தோன்றுகிறது. நேரடியாக இரண்டு பேருடைய வாழ்வு சிதைந்து கொண்டிருக்கிறது எனது கண் முன்னால். ஒருவர் இங்கு லண்டனில் நல்ல கொம்பனி ஒன்றில் கொம்பியூட்டர் வேலை செய்கிறார், படித்தவர். இரண்டாமவர் இங்கு லண்டனில் பி.எச்.டி. முடித்தவர். இளைஞர்கள் இருவரும் அவரவர் பெற்றோர் பார்த்து பேசிய மணமகள்களை தமிழ்நாட்டிற்குப் போய் திருமணம் முடித்து வந்திருக்கிறார்கள்.

ஒருவருடைய மணப்பெண் டில்லியிலேயே வாழ்ந்தவள். அங்கு வேலை செய்தவள் தமிழ்ப் பெண். மற்றப் பெண் சிங்கப்பூரில் வாழ்ந்தவள். அங்கு வேலை செய்த தமிழ்ப் பெண். ஆனால் டில்லியில் வளர்ந்த தமிழ்ப் பெண்ணுக்கு ஏற்கனவே லண்டன் போக வேண்டும் என்ற கனவும் இருந்திருக்கிறது. இங்கு ஆசைக் கனவுகள், பெரிய வீடு, பெரிய தரமான கார் என்று பாங்கில் காசும் இருக்கும் மாப்பிள்ளைக்கு என்று நினைத்து வந்தவளுக்கு முதல் அடி மாப்பிள்ளை ஒரு வீட்டில் ஒரு ரூமில் வாடகைக்கு தங்கியிருந்தார். கிடைக்கும் ஆயிரம் பவுண் சம்பாத்தியத்தில் அவருக்கு அவ்வளவுதான் இயலும். ரூமுக்கு 400 பவுண் வாடகை ஒருத்தருக்கு. மாதம் இரண்டு பேர் என்றால் 550 பவுண்.

வங்கி பாலன்ஸ் கிடக்கட்டும். வங்கியில் பெருங்கடனாளியாக இருக்கிறார் மாப்பிள்ளை. இதனை ஏன் சொல்லவில்லை, நான் லண்டன் வர முதல் என்று ஆரம்பித்த சிறிய சண்டை. இப்பொழுது மாப்பிள்ளையை நிம்மதி இல்லாதவனாக ஆக்கிவிட்டது. மெல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல் மனைவியின் ஆக்கினைக்காக கார் ஓட்டத் தெரியாதவர் ஒரு காரை வாங்கி நண்பரைக் கொண்டு ஓட வைத்து வீட்டுக்கு முன் நிப்பாட்டி வைத்திருக்கிறார்.

இங்கே லண்டனில் கார் வாங்கினால் லைசன்ஸ் வாங்க வேண்டும், இன்சூரன்ஸ் வாங்க வேண்டும். எம்.ஓ.ரி. செய்ய வேண்டும். எல்லாம் செலவு.

ஆகவே ஓடாத காரை பெண் சாதியின் ஆக்கினைக்காக வாங்கி வைத்திருக்கிறார் நண்பர். கார் இருந்தாலும் யாரும் கவனிக்கப் போறதில்லை. இல்லையென்டாலும் யாரும் கவனிக்க மாட்டார்கள். அனாலும் சில மனைவிமாருக்கு கார் சும்மாவாகிலும் வீட்டில் முற்றத்தில் இருக்க வேண்டும்.

ஏற்கனவே கடன் சுமையோடை இருந்தவர் இப்பொழுது இரட்டை சுமையை ஏத்தி வைத்திருக்கிறார். மனைவி சொல்லிவிட்டார். நல்லதாக இருண்டு பெட்ரூம் வீடு வேண்டும். அப்பொழுதுதான் மாமா மாமியை லண்டனுக்குக் கூப்பிட்டு வீட்டில் ஒரு கிழமைக்கேனும் வைத்திருப்பேன் என்று.

மாப்பிள்ளையின் அப்பா அம்மா தமிழகத்தில் நல்லபடி காசோடு வாழுகிறார்கள். அவர்கள் மூத்த மகனை போய் அமெரிக்காவில் பார்க்கிற வழியில் லண்டனில் இறங்கி இரண்டாவது மகன் வீட்டில் தங்கலாம் என்று நினைத்தார்கள். அனால் நாள் ஒன்றுக்கு 35 பவுண் கொடுத்து ஏழு நாளும் ஒரு மலிவான ஹோட்டலில் தங்குவது ஒன்றும் அவர்களுக்குப் பிரச்சனை இல்லை. ஆனால் மருமகள் மாமியை கவனிக்க வேணும் என்று அடம்பிடித்து ஒரு இரண்டு பெட்ரூம் வீடு வாடகைக்கு வாங்கி அதற்கு முன்னால் காரை நிற்பாட்டி வைத்திருக்கிறார்.

வீடு வாடகை 850 பவுண், கவுன்ஸில் ரக்ஸ் 100 பவுண், சாப்பாடு, குடிப்பு, ரெலிபோன் பில், கிறடிட் கார்ட் பில் என்று ஆயிரம் பவுண் சம்பளம் எடுக்கும் மகன் கடனாளியாக பெரும் சுமையாகி அலைகிறான்.

இது மனைவிக்கு லண்டன் மாப்பிள்ளை என்று பெருமை பேசியதால் வந்த வினை.

இரண்டாமவன், சிங்கப்பூரில் வசதியாக வாழ்ந்த பொண்ணு ஒன்றை கட்டி விட்டு வந்து மனம் குழம்பிப் போய் இருக்கிறார்கள். முதலாமவனின் மனைவி சொல்கிறாள். தன்னை தனது புருசன் ஏமாத்திப்போட்டார் என்று. உண்மையில் இரண்டு பேரிடமும் தவறு இருக்கிறது. தான் ஊருக்குப் போகப் போகிறாளாம்.

லண்டன் மாப்பிள்ளை என்ற வாயைப் பிளக்கும் எமது ஊர் பெற்றோரும் கொஞ்சம் அவதானிக்க வேண்டும். அதோடு பெண் பிள்ளைகளும் மிகவும் அவதானிக்க வேண்டும்.

பெரிய பெரிய கனவுகளோடு லண்டன் மாப்பிள்ளைக்கு கழுத்தை நீட்டக் கூடாது. ஊரில் உள்ள ஒருவரைப்போல மிகச் சாதாரணமான ஒரு புருஷனுக்கு வாழ்க்கைப்பட்டு போகிறேன் என்று மட்டுமே நினைத்து கலியாணம் செய்யுங்கள். கனவுகளை மட்டும் சுமந்துகொண்டு வந்தீர்களென்றால் இந்த விறை குளிரில் எல்லாம் கரைந்து போய்விடும். இரண்டாமவளுக்கு சமைக்க தெரியாது. அவளது உடுப்பைக்கூட வேலைக்காரர்தான் சிங்கப்பூரில் அயன் பண்ணிக் கொடுப்பாராம். ஆனால் இங்கு கடுமையாக உழைத்தால்தான் பணம் கிடைக்கும். எவ்வளவு பணம் கிடைத்தாலும் நாங்கள் இங்கு ஏழைதான். சிக்கனமாக இல்லாவிட்டால் கடன் வட்டிபோட்டு குட்டி போட்டு ஆளை விழுங்கிவிடும். இப்ப இருக்கிற கிறடிட் கிறஞ்சில் யானை விலை குதிரை விலை மரக்கறியும் உணவுப்பொருட்களும் பெருங்கஷ்டம்.

சிங்கப்பூர் பொண்ணு வெளிப்படையாகவே சொல்கிறது. கல்யாணம் செய்தது தப்பாக்கிப் போச்சுதோ என்று. அந்தளவுக்கு இளம் சமூகம் ஒரு திருப்தி காணாமல் வாழ்வை நெருக்கிக் கொண்டிருக்கின்றனர். அளவான கற்பனையும் திருப்தியான வாழ்வும், போதுமென்ற மனமும் இல்லாத மனைவிமார்கள் கிடைக்கப் பெற்ற கணவன்கள் உண்மையிலேயே சபிக்கப்பட்டவர்கள். அதேமாதிரி மனைவியர்க்கும் கணவன்கள் நல்லவர்களாக, சிக்கனவான்களாக, குடி சூது இல்லாதவர்களாக கிடைத்தால்தான் இங்கே லண்டனில் வாழ்வு. இல்லாவிடில் கண்ணீரும் கம்பலையும்தான் லண்டனில்.

தெரிந்து கொள்ளுங்கள்!

## 9ம் பக்கம் தொடர்ச்சி

பாலச்சந்திரனுடன் நான் ஒரு குருவுடன் பழகுவது போலவே பழகினேன். ஆனால் அவர் நீர் சொல்லும்.. நீர் சொன்னால் சரி என்று தாம் சொல்லும் கருத்தை அல்லது "ஐடியாவை" ஒளிப்பதிவு நேரங்களில் அடிக்கடி சொல்வார்.

நான் ரூபவாஹினியில் சேர்ந்து மூன்று வருடங்களில் எனது பயிற்சி முடிந்து முதன் முதல் கல்வித் தொலைக்காட்சிக்கு என்று தயாரித்த "வளரும் உலகம்" என்ற சிறுவர் அறிவியற் கதைத் தொடரில் பிள்ளைகளுக்கு ஒவ்வொரு அறிவியல் அம்சங்களையும் கதை மாமாவாக வந்து கதை சொல்வார் பாலச்சந்திரன் அண்ணர். உந்துருளி (துவிச்சக்கரவண்டி), தண்ணீரின் பயன், கப்பல், விமானம், மோட்டார், ரயில், நோய்க் கிருமிகள்... இப்படிப் பல கதைகள் தொடராக மாதம் இருதடவை என வாரங்களில் ஒளிபரப்பானது. பிள்ளைகளில் ஒருவர் தொலைநோக்கியைக் கொண்டுவந்து மற்றவர்களுடன் விளையாடுவார்...அதனூடாக பார்த்து விளையாடும்போது... அதற்குள் மாமா வந்து தெரிவார்...(எப்படித் திரைக்கதை..?) பின்னர் மாமா வந்து தொலைநோக்கி பற்றிச் சொல்வார்.. பிள்ளைகள் கேள்வி கேட்பார்கள். மாமாவுக்கு எல்லாமே தெரியும்.. அவர் பதில் சொல்வார். ஆகப் பன்னிரண்டு நிமிட நிகழ்ச்சிதான். ஆனால் சிறுவர்களுடன் படம்பிடிக்க ஒரு நாள் "கோல் ஷீட்" தேவை. ஆரம்பத்தில் அமரர் சபாரத்தினம் (டெயிலி நியூஸ்) அவர்கள் மூலப் பிரதி எழுதினார். பின்னர் அண்ணன் பாலாவே எழுதித்தந்தார். ....சிறுவர்கள் இது தொலைநோக்கி கண்டுபிடிக்கப்பட்ட கதை. விகரமகதேவி பூங்கா, எலி ஹவுஸ் பார்க்கில் படப்பிடிப்பு என்று நடைபெறும். எனது இத் தொடர் தயாரிப்புக்கு ஒரு இணை இயக்குனராக நின்று எனக்கு ஊக்கம் அளித்தவர் பாலா அண்ணா என்பேன்.! சிறுவர் நிகழ்ச்சி அல்லவா..? எனது ரூமுக்கு வந்தே நீண்ட நேரம் என்ன விடயங்களை எளிமையாகச் சொல்ல வேண்டும் என்பதில் என்னுடன் இருந்து பிரதியை மீள எழுதுவார். இதில் பங்கு பற்றிய சிறுவர்களில் முதன் முதல் இலங்கைத் தொலைக்காட்சி வரலாற்றில் ரூபவாஹினியில் வெளியான மகராஜாவின் தமிழ் அங்கர் விளம்பரத்தில் தோன்றிய சிறுமி நிரோஷினி நடராஜாவும் பாலா அண்ணாவின் மகன் வசீகரனும் ஆரம்பம் முதலும் மூத்த ஒலிபரப்பாளர் அருணா செல்லத்துரையின் மகன் மற்றும் பல புதிய முகங்களும் தொடர்ந்து பங்குபற்றினார்கள் என்பதும் நினைவுக்கு வருகிறது!

புத்தாண்டு பிறக்கும்போது பிள்ளைகளுக்கு புதுவருடத்தின் சிறப்புகளை அதாவது மருந்து நீர் போன்ற அம்சங்களை விளக்கும்படி இத்தொடரில் செய்வோமா என்று கேட்டு வந்தார். விஞ்ஞான நிகழ்ச்சி என்றாலும் தலைப்பை மாற்றி புத்தாண்டு சிறப்பு நிகழ்ச்சியாக அதனைத் தயாரித்தோம். பாலச்சந்திரன் இதற்காக கொட்டாஞ்சேனை சிவஸ்ரீ குஞ்சிதபாதக் குருக்கள் மற்றும் விஞ்ஞான ஆசிரியர்களுடன் கலந்துபேசி வந்து பிரதியை எழுதினார். அவரது ஊடக நம்பகத்தன்மையை இங்கு நாம் காணலாம்.

அவருடன் "வளரும் உலகம்" என்ற தொடர் நிகழ்ச்சி செய்ய அதில் பங்கேற்க வந்த நாட்கள்... பின்னர் அதற்கான கொடுப்பனவைக் கேட்டு வந்த நாட்கள்.. "தம்பி Payment ஐக் கெதியாய்ப் போடப் பாரும்...கையில கடிக்குது..." என்று பகிடியாகக் கேட்ட நாட்கள்....எனது ரூமில் வந்திருந்து பழைய வானொலி மற்றும் தனது மேடை நாடக அனுபவங்களைப் பகிர்ந்த நாட்கள். வானொலியில் கலைப் பூங்கா நிகழ்ச்சி செய்த வேளை முதன் முதலாக மகாகவியின் நினைவு நிகழ்ச்சிக்கு என்னையும் பங்குபற்ற அழைத்த நாள்.. பின்னர் நான் ரூபவாஹினியில் இருக்கும்போது... "தம்பி இம்முறை கலைப் பூங்காவுக்கு ஏதும் எடும்... இன்றைக்கு எதுவும் செய்ய இல்லை...உம்மைத்தான் நம்பி இருக்கிறேன்..." என்று ஆய்க்கினை தந்த நாட்கள்....இப்படி என்னை இத்துறையில் ஊக்குவித்து வளர்த்தவர் அவர்.

பாலா அண்ணரின் கலைப் பெருமைக்குரிய நிகழ்வாக இலங்கையில் நிகழ்ந்தது கிராமத்துக் கனவுகள் வானொலி ஒலிப்பதிவு நாடா வெளியீட்டு விழா. இந்த ஒலி நாடாவைக் கேட்டுத்தான் அதாவது பாலச்சந்திரனின் உரைப்பாணியைக் கேட்டே கலைஞர் கமல்ஹாசன் யாழ்ப்பாணத் தமிழை தமது திரைப்படம் ஒன்றிற்குப் பேசப் பழகினார்.

கண்ணூறு என்று சொல்வார்கள்! அதில் எத்தனை பேருக்கு நம்பிக்கை உண்டோ தெரியாது. கலையுலகில் இது கதைக்கப்படுவது வழக்கம். பாலச்சந்திரன் கைது செய்யப்பட்டபோது பலரும் இதனைப் பேசினார்கள். இந்தக் "கிராமத்துக் கனவுகள் வானொலி ஒலிப்பதிவு நாடா வெளியீட்டு விழா"வின் பின்பு அவரின் வாழ்வில் சோகமான நிகழ்வுகள்... நீண்ட காலம் , கைதியாக இருந்தார். அந்த மன உளைச்சலில் இருந்து விடுபட முடியாமல் தவித்திருந்தார்.

வெளியே வந்த பின்னர் மக்களுடன் முன்பு போலப் பேசிப் பழகுவதைத் தவிர்த்திருந்தார். எனது திருமணத்திற்குக் கூட ஆலய வாசலில் காத்திருந்து எனது வாகனத்திலிருந்து நான் இறங்க கைலாகு தந்து "வரதர் எனது வாழ்த்துக்கள் எனக்கு வந்திருந்து கூடிக்களிக்க மனம் சரியில்லை... எனது நிலைமை தெரியும் தானே தம்பி" என்று இரண்டு வசனம் சொல்லி விட்டுச் சென்றார்.

அவருக்கு அவரது கலைப் பணிக்கு வாழ்த்து விழா நடத்த எம் கலையுலக நண்பர்களாலும் முடியாத சூழ் நிலை! ஆயினும் அப்படி ஒரு நிகழ்வு இலங்கையில் நடந்திருந்தால் அண்ணன் பாலச்சந்திரன் தனது நன்றி உரையில் என்ன பேசியிருப்பார் என்பதைக் காட்டும் அவரது இதய உரையை ஷப்ராவின் அந்த விழா மலரில் அவர் குறிப்பிட்டிருந்தார் !

ஷப்ராவின் கலைவிழாவில் வெளியிடப்பெற்ற விழா இதழில் வெளிவந்த பக்கங்களுடன் இணைத்துள்ள அவரது நன்றி உரை அவரது "மறக்க முடியாத இலங்கை கலையுலக நண்பர்களுக்கு" என்று முடித்திருந்தார். அதில் தான் அவரது நன்றியில் தொலைக்காட்சித் துறையில் என்னையும் குறிப்பிட்டிருந்தார்.

தம்மைத் தொலைக்காட்சியில் தோன்றிப் புகழ் பெற வைத்தவர்கள் என்று திருமதி ஞானம் இரத்தினம் ,விக்னேஸ்வரன், விஸ்வநாதன், சிவசுப்பிரமணியம் ஆகியோருடன் இவர்களில் சிறியவனான என்னையும் நினைவு கூர்ந்துள்ளமை அவரது பெருமையில்லா நன்றியுணர்வை இன்று வாழும் பல இளம் கலைஞர்களுக்கும் இளம் ஊடகவியலாளர்களுக்கும் காட்டி நிற்கும் ஒரு "பாடம்" என நினைக்கிறேன்! ■




கடவுளுக்கும் கண்ணில்லையோ அது
கல்லாகிப்போய் கன காலமோ!
குந்த ஒரு குடிநிலம் கேட்டது பிழையோ
அதுக்கு தமிழீழம் எண்டு பெயரிட்டதுதான்
தவறோ?
அடிச்சவனை திருப்பி அடிச்சால்
குற்றமோ?நாங்கள் அழுதுகொண்டே
செத்துபோவதுதான் விதியோ?
தமிழராய் பிறந்ததுதான் தவறோ?தமிழன்
கேக்குறதுக்கு நாதியற்ற இனமோ?
இன்னும் எத்தின நாளுக்குதான்
அழுவமோ?இதை கேக்குறதுக்கு
யாருமில்லா உலகமோ?
நாடு நாடாய் அலைவதுதான் கதியோ?
அகதியாய்
செத்துப்போவதுதான் முடிவோ?
நீதி என்ன ஒரு நிறத்துக்கு மட்டுமோ?
அது தமிழருக்கு ஒரு நாளும்
கிடைக்காதோ?
மனிதாபிமானம் செத்து கனகாலமோ?
அதை
குழிதோண்டிப்புதைத்தவர்கள் தான்
பெரிய ஆக்களோ?
விடுதலை கேட்பது பயங்கரவாதமோ?
அதுக்கு
உயிர் கொடுத்து போராடுறவன்
தீவிரவாதியோ?
முள்ளிவாய்க்காலோட எல்லாம்
முடிஞ்சுபோட்டுதோ?இல்லை
போராடிப்பெறுவதற்கு இன்னும்
இருக்குதோ?
தனித்தனியா கத்திக்கொண்டு
இருக்கப்போறமா? இல்லை
கைகோத்துஒண்டா நடக்கப்போறமா?
ஊருக்குப் போறதுக்கா இத்தனை
விலைகொடுத்தோம்? எங்களின் உரிமை
கிடைக்க கனதூரம் போகவேணுமோ?
போராடிப்பெறுவதுதான்
விடுதலையல்லவா? அதை
சும்மா பெற்றால் அதுக்குப்பேர்
பிச்சையில்லையா?????
கடவுளே உனக்கு கண்ணில்லையோ?நீ
கல்லாகிப்போய் கனகாலமோ????

*- தமிழ்ப்பொடியன்*


சைவ முன்னேற்றச் சங்கம் (UK)
கலசம் 75ஆவது சிறப்பிதழ்
கட்டுரைப் போட்டி




எமது சங்கத்தின் காலாண்டிதழ் வெளியீடான கலசம் 75ஆவது இதழ் சிறப்பிதழாக வெளியாகவுள்ளது. இவ் வெளியீட்டு விழா 25.05.2014/26.05.2014 ஆகிய திகதிகளில் நடைபெறவுள்ளது. இதனை முன்னிட்டு எழுத்தாளர்களை ஊக்குவித்து, அவர்களின் படைப்புகளுக்கு சிறப்பிடம் கொடுக்கும் நோக்கில் இக்கட்டுரைப் போட்டி இடம்பெறுகிறது.

போட்டிக்கு பின்வரும் தலைப்புக்களில் ஒன்றைத் தெரிவு செய்யவும்

| | |
|---|---|
| ஆரம்பப்பிரிவு : 10 வயதிற்குட்பட்டோர் தலைப்புகள்: | நான் வணங்கும் கடவுள், நான் பார்த்த தேர்த் திருவிழா என் பெற்றோர் சொல்லித்தரும் கடவுள் (90-110 சொற்கள்) |
| மத்தியபிரிவு: 10-15 வயதிற்குட்பட்டோர் தலைப்புகள்: | நாயன்மார்களின் இறை நம்பிக்கை, நல் ஒழுக்கத்தின் அவசியம், என் பார்வையில் எனது சமயம், என் வீட்டில் சமய வாழ்க்கை (150-200 சொற்கள்) |
| மேற்பிரிவு: 15-21 வயதிற்குட்பட்டோர் தலைப்புகள்: | சமய வாழ்க்கையும் எனது எதிர் காலமும், சைவ சமயத்தின் உண்மைகள், சைவம் செல்லித்தரும் அற நெறி, நான் சுவைத்த திருமுறை (300-350 சொற்கள்) |
| 21 வயதிற்கு மேற்பட்டோர் தலைப்புகள்: | பெரியபுராணப் பண்பாடும் வாழ்க்கை நெறியும், சைவ ஆலயங்களில் சமுதாய நலக் கொள்கைகள், திருமுறையில் தமிழின்பம் சைவ இலக்கியத்தில் மனித நேயம், என்னை ஏன் இறைவன் படைத்தான்?, நால்வர் காட்டும் சைவ சித்தாந்தம் (1000-1500 சொற்கள்) |

போட்டியில் முதலாம் இடம் பெறும் கட்டுரைகள் கலசத்தின் 75வது சிறப்பிதழில் பிரசுரிக்கப்படும்.
ஏனையவை எதிர்காலத்தில் கலசத்தில் வெளியாகும் வாய்ப்புள்ளது.
போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு ஒவ்வொரு பிரிவிலும் முதலாம் பரிசாகத் தங்கப் பதக்கமும் இரண்டாம், மூன்றாம் இடங்களுக்கு சிறப்புப் பரிசுகளும் வழங்கப்படும்.
நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.

கட்டுரைகள் 29.04.2014ம் திகதிக்கு முன் எமக்குக் கிடைக்க வேண்டும்.

முகவரி: Saiva munnetta Sangam(UK)-KALASAM
2 Salisbury Road, Manor Par, London E12 6AB
00(44) 2085144732Registered Charity No.292085
Website: www.saivamunnettasangam.com
e.mail: smsukinfo@gmail.com
other contact Nos: 02085644826 or 07857292550
கலசம்

பெருமையுடன் 21 வது வருடத்தில்

# RUBY'S
CATERING

020 8799 7180

www.rubyscatering.co.uk - mail@rubyscatering.co.uk

உன்னத உணவு | வைபவ மண்டபம் | மகோன்னத உபசரிப்பு





திருமணம் – பிறந்த நாள் – பூப்புனித நீராட்டு விழா
கலாச்சார நிகழ்ச்சிகள் – விருந்து உபசாரம்
அரங்கேற்றம் – வளைகாப்பு – பெயர் சூட்டும் விழா





ACCREDITED SRILANKAN CATERERS @

Hilton THISTLE HOTEL London Heathrow Holiday Inn

உட்பட பிரபல ஹோல்களில் அங்கீகாரம் பெற்ற
தரம் மிகு இலங்கை மற்றும்
தென்னிந்திய உணவுத் தயாரிப்பாளர்கள்.......

Tel: 020 8799 7180
mail@rubyscatering.co.uk - www.rubyscatering.co.uk


A world first...
FREE CALLS
to all Lycamobiles in Europe, USA & Australia with any top-up
Lycamobile
Call the world for less
Order your free SIM at www.lycamobile.com
Australlia Austria Belgium Denmark France Germany Ireland Italy Netherlands Norway Poland Portugal Spain Sweden Switzerland UK USA
Promotion valid from 10-03-2014 to 31/05/2014. Customer must top-up and maintain minimum balance of one penny to qualify for the promotion and will receive free Lyca to Lyca calls to any Lycamobile in any Lycamobile country for 30 days from date of top-up. On expiry customer will be charged the standard tanff. This promotion is only available to Lycamobile UK customers and not applicable to roaming calls.